மேலாக சைவ சித்தாந்தம் ஏகப்பிரமாணம் எனும் கொள்கையை ஆன்மசிற்சக்தி எனும் பிரமாணத்தின் ஊடாக முன்வைத்து நிற்கின்றது. அதுவே உண்மை பிரமாணம் என்றும் கூறுகிறது. இவ்வாறு சைவ சித்தாந்தம் ஆன்ம சிற்சக்திப் பிரமாணம் தொடர்பாக முன்வைக்கின்ற கருத்தியல்கள், அவற்றின் தர்க்கப் பெறுமானம், மற்றும் அதன் முக்கியத்துவம் என்பன இங்கு ஆய்வுப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

இந்திய தர்க்கவியற் செல்நெறியில் சைவ சித்தாந்த மெய்யியல் முன்வைக்கும் ஏகப்பிரமாணம் என்னும் கருத்தியலை அறிதலும் அதன் தர்க்கவியல் பெறுமானத்தை மதிப்பிடுதலும் இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும். சைவ சித்தாந்தம் தனித்துவமாக முன்வைக்கின்ற பாசஞான, பசுஞான, பதிஞான கருத்தியல்களிலும் முக்தி பற்றிய கருத்துகளிலும் இந்த ஏகப்பிரமாணக் கொள்கை பெறும் இடத்தைக் கண்டறிதல் இதன் துணை நோக்கம் ஆகும்.

**ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வு விபரண ஆய்வாக முன்னெடுக்கப்படுகின்ற அதேவேளை தேவையான இடங்களில் வரலாற்று முறை, ஒப்பீட்டு முறை எனும் ஆய்வு முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

**பிரமாணம்**

மனிதன் தன் சிந்தனை வழிப் பெற்றவை சரியானவையா இல்லையா என்பதனை பிரமாணம் தெளிவாக்குகின்றது. பிரமாணம் என்பது அளந்தறியப்படுவது எனப் பொருள்படும். சிந்தனைவழிப் பெற்றவைகளையும் அளந்தறிய அளக்கும் முறைமையினைப் பயன்படுத்தல் காணலாம். அப்பிரமாணத்தை அளவை, தருக்கம், நியாயம், எனவும் அழைப்பர். அளவையறிவு இல்லாதவிடத்து தத்துவங்களைப் புரிந்துகொள்வது அசாத்தியமென்றே கூறலாம். தத்துவக் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கும் ஆராய்ச்சி செய்வதற்கும் பிரமாண அறிவு மிகவும் இன்றியமையாததாகும்.

இந்திய பரப்பில் பல்வேறுபட்ட போக்குகளைக் கொண்ட மெய்யியற் குழுக்களை காணலாம். அவை கருத்து நிலையில் ஒன்றுக்கொன்று வேறுபட்டு குறிப்பிட்ட சில பிரமாணங்களை ஏற்று நிற்கின்றன. இப்பிரமாணங்கள் அவர்களது தத்துவச் சிந்தனைகளைத் தர்க்கரீதியாக எடுத்தாளுவதற்குப் பெரிதும் துணைபுரிகின்றன. பிரமாணங்கள் அறிவைப் பெறும் மூலங்களாக - வழிமுறைகளாக விளங்கின. இப்பிரமாணங்கள் பத்து எனினும் ஒவ்வொரு மெய்யியற்; குழுவினரும்

இப்பிரமாணங்களின் முதன்மை நோக்கி வேறுபட்ட எண்ணிக்கையான பிரமாணங்களையே ஏற்று நின்றனர். அவையாவன, பிரத்தியட்சம் (காட்சிளவை), அனுமானம் (கருதலளவை), ஆப்தம் (உரையளவை), அனுபலப்தி (இன்மையளவை), அருத்தாப்தி (பொருட்பேறளவை), உபமானம் (ஒப்பளவை), ஐதீகம் (உலகுரையளவை), சம்பவம் (உண்மையளவை), பாரிசேடம் (ஒழிபளவை), சுபாவம் (இயல்பளவை). இவற்றுள் உலோகாயதர் பிரத்தியட்சியத்தினை மட்டும் ஏற்று நிற்பர். பௌத்தர்களும் வைசேடிகரில் ஒரு சாராரும் பிரத்தியட்சத்துடன் அனுமானத்தையும் ஏற்பர். சாங்கியர், சைவசித்தாந்திகள் ஆகியோர் பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தம் எனும் மூன்று பிரமாணங்களையும் ஏற்பர், நையாயியர் நான்காவதான உபமானத்தையும் சேர்த்து நான்கு பிரமாணங்களை ஏற்பர். பிரபாகரர் இதற்கும் மேலாக அறிவைத் தரவல்ல பிரமாணமாக அருத்தாபத்தியினையும் இணைத்துக் கொள்வர். பட்டருடன் அத்வைதிகளும் அனுபலப்தியினை இணைத்து ஆறு பிரமாணங்களை எடுத்தாள்வர். பௌராணிகர் சம்பவம், ஐதீகம் ஆகிய இரண்டினையும் ஏற்றுப் பிரமாணத்தை எட்டாகக் கொள்வர். வேதவியாசகர் சுபாவம், பரிசேடம் எனும் இரண்டினையும் இணைத்துப் பத்துப் பிரமாணங்களாகக் கொள்வர்.

சைவசித்தாந்திகள் காட்சி, அனுமானம், ஆப்தம் எனும் மூன்று பிரமாணங்களையே ஆதாரமாகக் கொண்டனர். இப்பிரமாணங்கள் மூன்றினூடாக அறிவைப் பெறுதல் சாத்தியம் என்பதோடு ஏனைய ஏழு பிரமாண அறிவும் இம்மூன்று பிரமாணங்களுள் உள்ளடங்குவன எனவும் கொண்டனர். சிவாக்கிரயோகிகள் பத்துப் பிரமாணமும் எவ்வகையில் மூன்று பிரமாணங்களாகக் குறைக்கப்படலாமென்பதனையும் இம்மூன்று பிரமாணங்களும் ஏகப்பிரமாணம் எனும் வகையில் சிற்சக்திப்பிரமாணமாக எடுத்தாளப்படலாம் என்பதனையும் எடுத்தாண்டார். இம்மூன்று பிரமாணங்களுள் ஏனைய ஏழு பிரமாணங்களும் எவ்வெப்பிரமாணங்களுள் உள்ளடங்குகின்றன என்பதில் சிவாக்கிரயோகிகளுக்கும் மறைஞான சம்பந்தருக்குமிடையில் வேறுபட்ட கருத்துக்கள் நிலவுதலைக் காணலாம். பொதுவில் அறிவைத் தரவல்ல முதன்மைப் பிரமாணங்களாகக் காட்சி, அனுமானம், ஆப்தம் எனும் மூன்றினைச் சைவசித்தாந்திகள் ஏற்றனர்.

பிரமாணம் என்பது பிரமிதியின் கருவி: பிரமிதி என்பது பிரமாதா, பிரமேயத்தை உள்ளபடியறிதலாகும். அதுவே மெய்யறிவு; அப்பிரமிதித் தொழிலினது கருவி, பிரமாதாவின் சிற்சக்தியேயாதலின் அதுவே பிரமாணம் ஆகும் என்பது சைவசித்தாந்திகளின் கருத்தாகும். நியாய தரிசனத்திடம் இக்கருத்தியல் இல்லை. நியாயத்தைப் பொறுத்தவரை காட்சி, கருதல், உபமானம், ஆகமம் என்பனவே பிரமாணங்கள் ஆகும். பிரமாணம் என்பது பிறிதொன்றால் அளந்து

அறியமுடியாதது ஆதலின் மேற்சுட்டிய அளவைகளை அளக்கும் ஆன்மசிற்சக்தியே ஏகப்பிரமாணம் என்பது சைவசித்தாந்தத்தின் வாதமாகிறது.

**ஆன்மசிற்சக்தி பிரமாணம்**

பிரமாணம் எது என்பதில் இந்திய மெய்யியல்களிற்கிடையில் கருத்து பேதம் உண்டு. நியாய தரிசனம் பிரத்தியட்ச பிரமாணமே பிரதானம்; 'சாட்சாற் காரியப் பிரமைக்குக் கரணம் பிரத்தியட்சம்; இந்திரியத்தாற் தோன்றும் அது, சாட்சாற் காரியப் பிரமை' என்கிறது. ஐம்பொறிகளோடு மனம் இயைபுறாவிடின் அவற்றிற்குப் புலன்களையறியும் ஆற்றல் உண்டாகாது. ஆதலால் பொறிக் காட்சிக்கு வேறாய் மனம் சார்ந்த காட்சி எதுவும் இல்லை என்;கிறது. அதனால் பொறிகளோடு மனதையும் இந்திரியமாகக் கொள்கிறது. ஏனையவை வழியளவைகளாகின்றன. சைவசித்தாந்தமோ இவற்றினின்றும் மாறுபட்டு பிரமாதாவின் அறிவாற்றலே பிரமாணம் என்கிறது. இந்த அடிப்படையில்தான் சங்கரபண்டிதர், 'சிற்சக்தியாகிய பிரமாணத்துக்கும் பிரமேயத்திற்கும் உள்ளதாகிய ஞாபக (அறிவிப்பது), ஞாப்பிய (அறிவிக்கப்படுவது) தன்மைச் சம்பந்தமே அவாந்தர வியாபாரம். (தொழில்); அச்சம்பந்தத்தால் தோன்றும் பிரமேயவறிவே பிரமிதியாம்; அதுவே பலன்' என்கிறார் (Selvamanoharan, 2016:45). மேலும் இச்சிற்சக்திக்கு உபகாரமாகிய இந்திரியம், இலிங்கம, சத்தம் என்பவையும் உபசாரத்தால் முறையே பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம் எனும் பெயர்களைப் பெறுகின்றன. இவ்வாறு சுட்டப்படுவதற்குக் காரணம் உண்மைப் பிரமாணம் எப்போதும் பிறவற்றை அளக்குமேயன்றி தான் பிறிதொன்றால் அளக்கப்பட்டக் கூடியதாக இருக்காது என்பது சைவசித்தாந்தத்தின் நிலைப்பாடாகும்.

சிவஞானசித்தியாரில் இடம்பெறும் 'உயிரினோடு உணர்வுறு' (Sivaganasiddiyer, 12) எனும் பாடலை அடிப்படையாகக் கொண்டே ஆன்ம சிற்சக்திப் பிரமாணம் பற்றிய உரையாடல் சைவசித்தாந்த மெய்யியற் தளத்தில் மேனிலை பெற்றது. இப்பாடலுக்கு உரை செய்தவருள் காலத்தால் முந்தியவராகக் கருதப்படுகின்ற மறைஞானதேசிகர் 'ஆன்மாவுடனே விட்டு நீங்காத சிற்சக்தியாலே இந்திரியமும் கலாதிகளும் சோமசூரிய அக்கினிப் பிரகாசங்களுமாகக் கூடி உருவம் முதலியவற்றை ஐயக் காட்சி முதலிய குற்றமின்றி அறிவது இந்திரியக்காட்சி என்கிறார் (Aruvarurai, 1900:144). இவர் தரும் தரவு ஆன்மாவை விட்டு நீங்காத சிற்சக்தி என்பதாகும். இவரைப் பின்பற்றி திருநெல்வேலி ஞானப்பிரகாசரும் 'ஆன்மாவாகிய பிரமாதாவோடு சிற்சக்தியாகிய பிரமாணம் மலத்தைச் சிறிது நீக்கி அந்தச் சிற்சக்தியை சிறிது விளங்கச் செய்து' என்கிறார் (Aruvaruri, 1900:150). நிரம்பவழகியர் இதனை ஆன்மபோதம் (Aruvarurai, 1900:159) என்றும் சுப்பிரமணிய

தேசிகர் 'தன்னை நோக்கி நிற்கும் அறிவாகிய ஆன்மாவினின்றும் விடயங்களை நோக்கியோடும் அறிவாகிய சிற்சக்தி' (Aruvarurai. 1900:160) என்றும் கூறுகின்றனர். சிவஞானமுனிவர் சிற்சக்தி பற்றி அதிகம் உரையாடாவிட்டாலும் 'தன்னை நோக்கி நிற்கும் அறிவாகிய ஆன்மாவினின்றும் விடயங்களை நோக்கியோடும் அறிவாகிய சிற்சக்தி' என்று கூறியதோடு. 'அதிகார முறைமை என்னும் உக்தியால் உயிரினோடு உணர்வு தெரிவதென்பதனை அளவையதிகாரம் முழுதினும் உய்த்துரைக்குக' (Aruvaruri, 1900:158-159) என்று சுட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிவஞானசித்தியாருக்கு உரை செய்த சைவசித்தாந்திகளுள் ஆன்ம சிற்சக்திக்கு உரிய இடத்தை வழங்கி ஏகப்பிரமாணம் எனும் கருத்துருவாக்கத்துக்கு வித்திட்டவராக சிவாக்கிரயோகிகளே விளங்குகிறார். 'பிரமாணமாவது சிற்சக்தி' எனக்கூறி அச்சிற்சக்திக்கு அதிட்டாநங்களாக காண்டல், கருதல், உரை என்பவற்றைக் குறிப்பிட்டு, ஏனைய பிரமாணங்கள் மேற்படி மூன்று பிரமாணங்களுக்குள் அடக்கம் என்கிறார். பிரமாணத்தின் சாமான்ய இலட்சணம், ஐயம், திரிபு, நினைவு (ஸ்மிருதி) வியதிரிக்தையான ஆன்ம சிற்சக்தியே என்கிறார் (Aruvaruri, 1900: 97-114).

கண் முதலிய பொறிகள் ஆன்மசிற்சக்தியின்றித் தாமே புலன்களை அறியாது எனின் ஆன்மசிற்சக்தியும் பொறியின்றித் தானும் பொருட்களை அறியமாட்டாதே எனும் வினா எழுகிறது. கண், விளக்கொளி, சூரியவொளி முதலானவற்றுள் ஏதேனும் ஓரொளியைப் பெற்ற வழியன்றி உருவத்தைக் காணாமாட்டாது. ஆயினும் ஒளி வந்த இடத்து உருவத்தை அறிவது கண்ணேயன்றி ஒளியல்ல என்பது தேற்றம் ஆகும். ஆக, பொருளை அறிய ஒளி துணையேயன்றி, அது தானே பொருளை அறிவதாகாது. அதேபோல கண் காணாது என்பதால் அவற்றின்வழி அறிய ஒன்று தேவை அது மனம் என்பர் நியாயவாதிகள்;

மனமும் கரணமே எனின் புத்தியே அறிவது எனின் அதுவும் கரணமே என்பர் சித்தாந்திகள். புத்தியானது சுகதுக்க ரூபமாய், சிற்சக்திக்கு பிரமேயமாய் சடமேயல்லாது சித்ரூபமான பிரமாணமாகாது (Aruvaruri, 1900:100). பொருளைக் காண, பொறிக்கு ஒளி உதவுவதுபோல ஆன்மா பொருளைக்காண இந்திரியங்களும் அந்தக்கரணங்களும் துணை புரிகின்றன. அளப்பது ஆன்மா எனின் அளவை அவ்வான்மாவின் அறிவாற்றலாகிய சிற்சக்தி என்பர் (Arunivedivel Muthaliyer 1991: 196-199). ஆகவே பொறிகளோ, மனமோ, புத்தியோ பொருளை அறிய உதவும் கருவிகளே அன்றித் தாமே அறியும் தன்மையினவாகா எனப்படுகிறது.

அறியும் பொருளுக்கு அறிவிக்கும் பொருளாய் நிற்பது வியஞ்சகம் அல்லது காட்டு எனப்படும். இங்கு கண்ணிற்கு ஒளி போல ஆன்ம சிற்சக்திக்குச் கரணங்களாக

அமைவனவே அகப் புறக்கருவிகளான பொறிகளும், அந்;தக் கரணங்களுள் அடங்கும் மனமும் புத்தியும் என சைவசித்தாந்தம் கூறுகிறது. 'புகல் அளவைக்கு அளவாகி' (Sivapirahasam 7) எனும் சொற்றொடர் இதனைத் தெளிவுறுத்துகின்றது. இவற்றை,

ஐயமுடன் திரிவின்றி முன்னினைவு மின்றி
ஐம்பொறிபோ லொன்றொன்றே யறிதலின்றி
மையலறு காட்சியனு மானமுறை மூன்றின்
வகையனைத்தும் வியாத்தியாய் மதிப்பதாகிப்
பொய்ய துவாய் ஞேயமாம் பொருள்களிலின் றாகிப்
புந்திக்கு மேலான போத மாகிச்
செய்யசிவ சத்திதுணை யாய்விளங்குஞ் சீவ
சிற்சக்தி பிரமாண மெனத் தெரிப்பர் தெரிந்தோர்.

(Sivanarippirahasam 20)

எனும் பாடலால் சிவாக்கிரயோகிகள் தெளிவுபடுத்துகிறார். ஆகவே நியாயவாதிகள் உட்பட ஏனைய இந்திய மெய்யியலாளர்கள் கூறும் பிரமாணங்கள் சைவசித்தாந்த கருத்தியற் தளத்தில் பிரமாதாவுக்கான பிரமேயங்களாகி விட பிரமேயமாகாமல் பிரமாணமாக நின்றது ஒன்றே ஒன்று; அது ஆன்மசிற்சக்தி ஆகும் என்பது சித்தாந்திகள் கருத்தாகின்றது.

இவ்விடத்தில் நியாயவாதிகள் ஓர் ஆசங்கையை எழுப்புவர். ஆன்மாவும் சிற்சக்தியும் ஒன்று என்பது ஒரு கூற்று; ஆன்மா - பிரமாதா, சிற்சக்தி - பிரமாணம் என்பது இரண்டாவது கூற்று; இவ்விடத்தில் ஆன்மாவும் சிற்சக்தியும் ஒன்றெனில் அவை எவ்வாறு பிரமாதாவும் பிரமாணமுமாகும்? அது கூடா இயல்பாகி விடுமே (குணம்) என்பர். பதி எவ்வாறு ஆன்மாவுடன் ஒன்றாய், உடனாய், வேறாய் நிற்குமோ அவ்வாறே 'ஆன்மா பொருளால் ஒன்றாயினும் அது பிறபொருள் மேல் செல்லாது தன்னளவில் அறிவாய் விளங்கின் ஆன்மா என ஒன்றேயாயும் பிறபொருள் மேல் சென்று அதை அறியும் போது தானும் தன்சிற்சக்தியும் என இரண்டாயும் நிற்கும் இயல்பினையுடையது' எனச் சித்தாந்திகள் விளக்கம் அளிப்பர்.

இவ்வாறு பொருளை அளந்தறிந்து அளவையாய் நிற்கும் அந்த அறிவே, தான் நேரிது என்பதையும் அறியும். அதற்கு வேறு கரணங்கள் தேவையில்லை.

ஆயினும் பெத்தான்மாகிய பிரமாதாவின் சிற்சக்தி பாசபந்தத்தால் தடைப்பட்டிருக்கும். ஆதலால் அந்நிலையில் பிறபொருட்களின் உபகாரம் அதற்கும் தேவைப்படுகிறது. அவையே மூவகை பிரமாணங்கள் என்பது சைவசித்தாந்தத்தின் நிலைப்பாடாகும். இங்கு வேறொன்றால் அறியாமல் தானே அறிதலாகிய 'தன்னாற் பிரமாணியத்தை' மீமாம்சகர் போல சைவசித்தாந்திகளும் ஏற்று நிற்கின்றனர். நியாயவாதிகள் தானே அறிதலின்றி பிறிதொன்றால் அறிதலாகிய 'பிறிதாட் பிரமாணியத்தையே' ஏற்று நிற்பர். இந்த அடிப்படையிலேயே சைவசித்தாந்தம் இந்திரியக் காட்சியை நிர்விகற்பமாகவும் நியாயம் சவிகற்பமாகவும் கூறி நிற்கின்றன.

சைவசித்தாந்திகள் ஆன்ம சிற்சக்தியின் செயல்நிலையை "பொருந்தியிடும் வகையில் புணரும் புனித சக்தி புணர்ந்தே" (Sivapirahasam 39) என்பதன்வழி விளக்குவர். நான்கு வாக்குகளாலும் சுத்தவித்தை முதலிய தத்துவ கர்த்தாக்கள் ஐவராலும் ஆன்மா அறியும் அறிவுக்குத் தக்கபடி, அவ்வான்மாவுக்கு விடய ஞானம் உண்டாகும். கலாதத்துவம் ஆணவ மலத்தை சிறிதே நீக்கி ஆன்மாவினுடைய கிரியா சக்தியை விளக்கி விடய போகங்களில் செலுத்தி நிற்கும். வித்தை ஆன்மாவின் ஞானசக்தியை விளக்கி அப்போகங்களில் செலுத்தி நிற்கும். இச்சிற்சக்தி கன்மத்தை அடிப்படையாகக் கொண்டே செயற்படுவதாக சைவசித்தாந்தம் சுட்டுகிறது. அராகமானது கன்மத்துக்கேற்ப, வரும் போகங்களில் இச்சையைப் பெருக்குவிக்கும். நியதி தத்துவம் அவரவர் செய்த கன்மங்களை அவரவரே அனுபவிக்கும்படி நிச்சயிக்கும். அதன் பின்பு உயிர்கள் போகங்களை அனுபவிக்கும்போது முக்காலமுமாக முத்திறப்பட்டு நின்று காலங்களை வரையறுக்கும் (சிவப்பிரகாசம் 40). மேற்படி விடயங்கள் யாவும் ஆன்ம சிற்சக்தியை உடனாய்க் கொண்டு திகழும்.

நியாயவாதிகளைப் பொறுத்தவரை உயிருக்கு இயற்கையில் அறிவில்லை; மனம், புத்தி முதலானவற்றோடு இணையும்போதே அதற்கு அறிவுண்டாகும். அதனாலே அவர்கள் புறப்பொருளுக்கும் இந்திரியக் காட்சிக்கும் முதன்மை அளிப்பர். சைவசித்தாந்தத்தைப் பொறுத்தவரை ஆன்மா, இயல்பில் அறிவுடையது; செம்பில் களிம்பு போல மலத்தால் பீடிக்கப்பட்டு அறியாமை வசப்பட்டு நிற்கிறது. மலவாசனை நீங்க, சிற்சக்தி துலங்கும் என்பர். காட்சி, கருதல் முதலான பிரமாணங்களால் அறியப்படும் பிரமேயங்களின் இயல்புகளை சாமானிய இலட்சணம், விசேட இலட்சணம் என இரண்டாக எடுத்துரைக்கிறது.

இவ்வாறு இலக்கணம் சுட்டப்படும்போது அவியாப்தி, அதிவியாத்தி, அசம்பவம் எனும் மூன்று குற்றங்களும் வராது வரையரை செய்தல் வேண்டும். இவை இலக்கணத்தைக் கெடுப்பன. 'பசுக்கள் கபில நிறத்தன எனக் கூறின் ஏனைய

நிறமுடைய பசுக்களுக்கு அது பொருந்தாது. அது அவியாப்தி; பசுக்கள் கொம்புடையவை எனில் பசுகள் கொம்புடையன எனினும் ஆடு, மான், மரைக்கும் கொம்புகளுள்ளனவே? ஆகவே அவையும் பசுக்கள் எனும் மயக்கத்தைத் தரும் இது அதிவியாப்தியாகும்; பசுக்கள் ஒற்றைக் குளம்புடையது எனில் இது பசுக்களில் இல்லா இலக்கணம் ஆதலால் அசம்பவம் எனப்படும். குற்றங்கள் அல்லது பொய்மையை நீக்கி உண்மையனுபவத்தைப் பெறுவதாக ஆன்மசிற்சக்தி இலங்கும்போதே முத்திக்கான வாய்ப்பு உண்டு (Selvamanoharan, 2016:45) என்கிறது சைவசித்தாந்தம்.

எல்லா ஆன்மாக்களுக்கும் இச்சை, கிரியை, ஞானம் எனும் மூவகை சக்திகளும் இருக்கும் என்றும் இவையே உலக வாழ்வின் படித்தரங்களுக்கு (இன்பம், துன்பம்...) காரணமாகின்றன என்றும் இவை சிற்சக்தியிலும் பிறிதானவையல்ல என்றும் சைவசித்தாந்தம் கூறுகின்றது. ஆன்மா சிற்சக்தி எனும் இரண்டுக்குமிடையிலான உறவை குண - குணி உறவுடன் ஒப்பிட்டுக் கூறப்படுகின்றது. இவை தம்முள் இச்சாசக்தி - போகரூபம், ஞானசக்தியும் கிரியா சக்தியும் - காரியரூபம் ஆன்ம சிற்சக்தியே காரணரூபம் என விளக்கப்படுகிறது (Bhaskaran, 2006:169). தடையில்லாத சிற்சக்தி பிறபொருளின் உபகாரத்தைப் பெறாது தன்னியல்பால் விளங்கி, பிரமேயங்களை நிர்விகற்பமாக அறியும். அதுவே அனுபூதிநிலையாகச் சுட்டப்படுகிறது.

பௌஷ்கர ஆகமம் சிற்சக்தியை ஆன்ம சிற்சக்தி அனுக்கிரய, சிவசிற்சக்தி அனுக்கிரக என எடுத்துரைத்துள்ளது. சிற்சக்தி கருவி, விளைவு ∴ பெறுபேறு எனும் இருநிலைகளில் உள்ளது. இவை முறையே கரணம், ஞானம் எனப்படுகின்றன (Sivanandamoorththi 2014:194). ஆன்மா மெய்ஞ்ஞானவுணர்வு பெற்ற நிலையில் சிவசிற்சக்தியே உண்மைப் பிரமாணம் எனப்படுகிறது. ஆன்ம சிற்சக்தியானது ஆன்மா பதிஞான நிலை எய்தும் போது சிவசிற்சக்தியாகி அத்துவிதமடையச் செய்கிறது (Thirugnanasambandan, 1982 :104). பிரமாணம் என்பது

1) உபகாரம் செய்வது

2) உபகாரஞ் செய்யப்படுவது

என இரு வகையினதாகும். உபகாரம் செய்வது சிவசிற்சக்தி: உபகாரஞ் செய்யப்படுவது, பாசநீக்கத்தைப் பெறவேண்டியதுவாகிய ஆன்மசிற்சக்தி என அமைகிறது. இங்கு சிவசிற்சக்தி சூரியவொளி, ஆன்மசிற்சக்தி கண், கண்ணாடி - மூன்றளவைகள் என விளக்கப்படுகிறது.

கண்ணில்இருள் போனாலும் கண் தன்னைக் காணாபோல்

எண்ணும் இருள்போனால் எனை அறிய - வொண்ணாதோ

கண்போற் சடமோநீ காட்டியதுங் கண்டறிந்த

ஒண்போதம்நீயென்றுணர்.

(Thugalarubhotham, 32)

என்பது இதற்கோர் எடுத்துக்காட்டாகும். அன்று முதல் இன்றுவரை அண்ணல் அறிவிப்பது அன்றி ஆன்மா ஒன்றும் அறியாது. இவ்வாறு 'தவத்தில் உணர்த்தினர் ஆர்தான்' (துகளறுபோதம் 38) என வினவி சிவசிற்சக்தியை உணர்த்துகிறது சைவசித்தாந்தம்.

## மதிப்பீடு

சைவ சித்தாந்த பிரமாணம் பற்றிய கருத்தியல் மற்றும் தர்க்கப் பிரயோகவியல் வழி ஆன்ம சிற்சக்தி பிரமாணம் பற்றிய ஏகப்பிரமாணக் கொள்கை சார்ந்த மதிப்பீடுகளாக பின்வருவன அமைகின்றன.

- சைவ சித்தாந்தம் ஏனைய இந்திய மெய்யியலாளர்கள் முன்வைக்கின்ற பிரமாணவியல் கருத்துக்களை ஏற்றுக் கொண்டாலும் அவை பாச ஞானத்துக்குரிய உலக அறிவாக அமைகின்றன எனக் கூறுதல் தர்க்கப் பொருத்தப்பாடு உடைய ஒன்றாகக் காணப்படுகின்றது.

- அதேபோல பசுத்துவமுடைய ஆன்மா தன்னை அறிதல் என்னும் பசு ஞானமும் ஒருவகையில் கட்டுண்ட ஞானமாகவே அமைதல் குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் சைவ சித்தாந்தத்தின் படி அத்வைத வேதாந்தம் கூறுகின்ற ஆன்மவிடுதலை என்பது கூட பசு ஞானமே என்பது தெளிவுபடுத்தப்படுகின்றது. சைவ சித்தாந்தத்தின் இறுதி இலக்கு ஆன்மா இறைவனோடு கலந்து முக்தி இன்பம் பெறுதலாக அமைகின்றது.

- இந்திய மெய்யியல் சுட்டும் பத்துப் பிரமாணங்களும் ஆன்மா இறைவனோடு கலந்து முக்தி இன்பம் பெறுதலுக்கு உதவி புரிய வல்லனவல்ல என்பது அவர்களின் கருத்தாகும். ஏனெனில் அது உலக அறிவு. அதற்கு அப்பாலான அறிவை குறிப்பாக பதி ஞானத்தை இக்கரணங்களைப் பயன்படுத்தி அல்லது புலனறிவின் மூலம் அளந்தறிய முடியாத ஒன்றாக அம்முத்தி இன்பம் பற்றிய கருத்தியல் அமைகிறது. அதனாலே தான் அவற்றை கீழான ஞானமாக - அபரஞானமாகக் கருதி

பரஞானம் ஆகிய பதிஞானத்தை அறிய ஆன்ம சிற்சக்திப் பிரமாணமே ஏகப்பிரமாணம் எனும் கருத்தியலை சைவ சித்தாந்தம் முன்வைக்கின்றது.

- காட்சி, அனுமானம், ஆப்தம் என்பன கரணங்களே. இக்கரணங்களின் வழி உண்மையை அறிகின்ற ஒன்று இருக்க வேண்டும். அது மனமோ புத்தியோ சித்தமோ அன்று. ஏனெனில் அவையும் கரணங்களே. இவற்றின் வழி உண்மையை உணரவல்ல பிரமாணமாக ஆன்மாவின் சிற்சக்தி அமைகிறது என்கின்ற சைவ சித்தாந்தத்தின் கருத்தியல் கொள்கை தர்க்கப் பொருத்தமானதாக அமைந்துள்ளது.

- ஆன்ம சிற்சக்தி என்பது தன்னை உணர்தல், தன்னிலும் மேலானதை அறிந்துணர்தல், அறிந்துணர்ந்த உண்மைப் பொருளுடன் இரண்டறக் கலத்தல் ஆகிய பதிஞான வழி சிவ சிற்சக்தியாக பரிணமிக்கின்றது, பேரின்பம் சித்திக்கின்றது எனும் சைவ சித்தாந்த கருத்தியல் மறுக்க இயலாத தர்க்கமாக அமைந்துள்ளது.

## நிறைவுரை

ஸ்வரூபஞானமான சிற்சக்தி முகத்திலே பிரமிதி பேதத்தில் சிவனுடைய இச்சா, ஞானா, கிரியை பிரமாணம் எனப்படுகிறது. முக்தியில் சிவனின் பராசக்தியாகிய ஸ்வரூபசக்தி சிற்சக்தி பிரமாண பேதத்திலே மாயா பதார்த்தங்களே பிரமேயம்; முக்தியில் சிவனே பிரமேயம். சிவஞானம் பெத்தத்திலே விடயத்தைக் கூட்டியும் முத்தியிலே அதை நீக்கி ஞானமாய் நிற்பதும் நேயத்தைக் காட்டி நிற்பதும் சிவசக்தியே; பிரமாண மாத்ரசக்தி பிரமிதி என்றே கொள்ள வேண்டும் என்கிறது. சிவனை ஆன்மா சிற்சக்தி அறியப்போகாது என்பதனால் அவ்வியாத்தி தோசமும் சிவஞானமானது விடயங்கள் யாவற்றையும் அறிவித்து சிவனையும் அறிவிப்பதனால் பிரமேயமல்லாத பொருள் சிவன் எனும் ஒன்று உண்டாதல் அதிவியாத்தி தோசமும் ஆன்ம சிற்சக்தி தானே சிவனை அறியமாட்டாது என்பதால் அசம்பவதோசமும் உண்டு. ஆகவே சிவசிற்சக்தியே பெத்த, முத்தி நிலை இரண்டிலும் பிரமாணமாகும். ஆக, சைவசித்தாந்தம் சிவசிற்சக்தி பிரமாணமே உயர் ஞானமாகிய பதிஞானம் எனும் சிவஞானத்துக்கு இட்டுச்சென்று அத்துவித முத்தியை ஆன்மாவிற்கு நல்கும் என்கிறது. இந்த வகையில் இந்திய மெய்யியலின் பிரமாணவியல் பற்றிய கருத்துகளுக்கு கால, தேச, வர்த்தமானத்திற்கு ஏற்ற புதிய பாய்ச்சலைத் தர வல்லதாகவும் தன்னுடைய மெய்யியல் சிந்தனைக்கு தர்க்கப் பொருத்தபாடு உடையதாக அமைய தக்க

வகையிலும் ஆன்மசிற்சக்தி பிரமாணமே ஏக பிரமாணம் எனும் கொள்கையை சைவ சித்தாந்தம் தர்க்கபூர்வமாக முன் வைத்துள்ளது.

**References**

Arumuganavalar (1967). *Tharkkasangirahamum Tharkkasangiraha Theebigaiyum*, Arumuganavalar. V Achchaham, Chennai.

Arunivadivel Muthaliyar (1991). *Sivagnanabotha Mapadiya Porulnilai Vizhakkam,* Thanjai Palgalaikkazhagam, Thanjavur.

------ (1999). *Sivagnanasiththiyar (suba), Sezhunthamizhurai, Paguthi – 1*, Ottakooththar Manram, Kanchipuram.

Aruvaruri (1900). *Sivagnanasiththiyar, Subaksham*, Sivagnanabotha Yanthrasalai, Chennai.

Bhaskaran.K. (2006). *Saivasiddhanthathil Arivaaraichiyiyal*, Thamizh Palgalaikazhagan, Tanjavur.

Ganganatha Jha (Ed.) (1939). *Nyaya Sutra with Vatsyayana Bhasya*, Oriental Book Agency, Poona.

Gnanakumaran, N. (2017), *Inthiya Arivaaraichiyiyal*, Chemamadu Pathipagam, Colombo.

Jadunath Sinha (1999). *Outlines of Indian Philosophy*, Pilgrims Book Pvt.Ltd, Delhi.

Kandasamy, S.N. (2000), *Indian Epistemology*, International, Institute of Tamil Studies, Chennai.

Selvamanoharan, T. (Ed.) (2016), *Sivashankarapanditham*, Saiva Viddhya Viruththi Sangam, Thirunelvely.

------(ed.), (2017), *Sivagnanasiththiyar Gnanapragasarurai*, Saiva Viddhya Viruththi Sangam, Yaazhpanam.

Sivakrayogigal (1968), *Sivaneri Pragasam*, Thiruvavaduthurai Aadheenam, Thiruvavaduthurai.

Sivananthaiyar (M.P.) (1910). *Tharkkasangiraham, (Urai)Nyayabothini, Patha Kiruththiyam, Annam Patteeyam, Neelakandeeyam*, Sothidapragasa Achchiyanthrasaalai, Kokuvil.

Sivananthamoorthy, K., Antondayas, K. (1998), *Meiyiyl Or Arimugam*, Ambaazh Vezhiyeettaham, Puththur.

Sivanandamoorththi, K. (2014), *Saivasiddhantham – Thamizharmeiyiyal*, Ambaazh Vezhiyeettaham, Puththur.

Thiruvilakkam, M., (Urai) (1933), *Sivapragasam*, Thirumagazh Achchiyanthrasaalai, Sunnaham.

Thirugnanasambandan, P (1982). *The Bearing of Saiva Siddhanta Epistimology on its Metaphysics*, Indian Philosophieal Annaual, vol.14, University of Madras, Madras.

# சுற்றுலாத் தளங்களின் வளவாய்ப்புக்களை அடையாளப்படுத்தல்: தலவாக்கலை பிரதேச செயலகம், நுவரெலியா மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

# Identifying the Tourism Potential of Tourist Destinations: A Study Based on Talawakelle Divisional Secretariat, Nuwara Eliya District

Sindhuja U.[3], Uthayarasa S.[4], Pathmanathan P.[5]

Abstract

*Tourism is a rapidly growing global industry, contributing significantly to cultural exchange and foreign income. Sri Lanka, with its natural beauty, cultural heritage, and strategic location, is emerging as a major tourist destination. Within this context, Nuwara Eliya District—often called "Little England" plays a key role in the tourism sector. However, several areas within the Talawakelle Divisional Secretariat remain underutilized despite their high tourism potential. This study explored three key questions: what are the current tourism centers in Talawakelle, what is the potential for future tourism development, and which areas show the most promise. The objective was to identify the currently developed tourist sites within the Talawakelle Divisional Secretariat, recognizing the resources that hold potential for future tourism development and identifying new tourist sites that possess the best opportunities for future tourism. The research design followed* ***mixed-methods, exploratory case study approach****, combining both qualitative and quantitative techniques. Data collection involved both primary and secondary methods. Primary data came from direct observation at 18 sites, interviews with the public and 13 Grama Niladharis, and a focus group discussion with seven participants. Secondary sources included tourism reports, publications from the Department of Tourism, land use data, and district performance records. The analysis used SWOT techniques to assess strengths, weaknesses, opportunities, and threats of the newly identified sites. Spatial analysis methods, including proximity and buffer zone analysis using Arc GIS, evaluated accessibility to transport and accommodations. The findings identified 18 new sites with greater potential than some existing tourist locations. These have been overlooked due to their proximity to developed sites, limited road access, and lack of government recognition. The study recommends that the Talawakelle Divisional Secretariat prioritize the development of these areas, promote rural and eco-tourism, and encourage water-based adventure tourism to enhance local livelihoods and regional economic growth.*

***Keywords:*** *identify, destinations, mapping, potential, region, tourist*

[3] *Research student, Department of Geography, Faculty of Arts, University of Jaffna*

[4] *Corresponding author; Serving as Senior Lecturer at the Department of Geography, Faculty of Arts, University of Jaffna. Email: subajiniu@univ.jfn.ac.lk.*

[5] *Senior Staff Technical Officer, Department of Geography, Faculty of Arts, University of Jaffna*

# 1. ஆய்வு அறிமுகம்

## 1.1. ஆய்வுப் பின்னணி

உலகளாவிய ரீதியில் அதிக பொருளாதாரத்தை ஈட்டித்தரும் துறையாக சுற்றுலாத்துறை விளங்குகின்றது. இன்றைய தொழில்நுட்ப ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும்; இத்துறையானது நிலைத்து நீடிக்கக்கூடிய தன்மையை தற்போது பெற்றுள்ளது. உலகில் WTTC (The World Travel & Tourism Council கூற்றுப்படி சுற்றுலாத்துறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10.4% பங்களிப்பை கொண்டுள்ளது. அதேசமயம் 2018 ஆம் ஆண்டில் உலக அளவில் மொத்த வேலைவாய்ப்பில் 10% பங்களிப்பைச் செய்துள்ளது. உலகளாவிய சுற்றுலா உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நேரடியாக 3.6%, மறைமுகமாக 10.3% பங்களிப்பையும் வழங்குகின்றது (UNWTO, 2023). உலக சுற்றுலா அமைப்பு (UNWTO) சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்குப் பயனளிக்கும் பொறுப்பான பயணநடைமுறைகளை ஊக்குவிப்பதில் நிலையான சுற்றுலாவின் பங்கை வழியுறுத்தியுள்ளது. இலங்கை சமீபகாலங்களில் வசீகரிக்கும் சுற்றுலாத் தளமாக உருவெடுத்துள்ளது. இதில் மத்தியமாகாணம் இயற்கைவளம், காலநிலை, பசுமையான தேயிலை தோட்டங்கள் மற்றும் இயற்கை காட்சிகளுக்கு பெயர்பெற்றது. இதனால் "லிட்டில் இங்கிலாந்து" என்று நுவரெலியா அழைக்கப்படுகின்றது. தலவாக்கலைப் பிரதேசமானது கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 1200அ உயரத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேசசெயலகத்தில் சில சுற்றுலாத் தளங்கள் காணப்படுவதுடன் வெளிக்கொண்டுவரப்படாத எதிர்காலத்திற்கான சுற்றுலாத் தளங்களும் இங்கு காணப்படுகின்றன. அவ்விடங்களை அடையாளப்படுத்தி எதிர்காலத்தில் நிலையான சுற்றுலாவை மேம்படுத்துவதாக இந்த ஆய்வு அமைக்கின்றது.

## 1.2 ஆய்வுப் பிரச்சினை

நுவரெலியா மாவட்டத்தில் தலவாக்கலை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் சுற்றுலாவுக்கான சாத்தியப்பாடுகளான இயற்கை அழகு, நீர்வீழ்ச்சிகள், மலைத்தொடர்கள் மற்றும் கலாசாரம் ஆகியவற்றால் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை இவ்விடம் ஈர்க்கின்றது. தற்போது இங்கு சில சுற்றுலாத் தளங்கள் வளர்ச்சியடைந்து வினைத்திறனாக செயற்பட்டு வருகின்றன. இருப்பினும் இங்கு முழு சுற்றுலா வளவாய்ப்புகள்; இருந்தும் இன்று வரை சில சுற்றுலாத் தளங்கள் முழுமையாக வெளிக்கொண்டுவரப்படாமலும், அடையாளப்படுத்தப்படாமலும் உள்ளன.

## 1.3 ஆய்வு வினாக்கள்

1. தலவாக்கலை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் வளர்ச்சியடைந்த சுற்றுலாத் தளங்கள் எவை?

2. தலவாக்கலை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் எதிர்கால சுற்றுலாத் தளத்திற்கான வளவாய்ப்புக்கள் எவை?

3. தலவாக்கலை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் எவ்எவ் பிரதேசங்களில் எதிர்கால சுற்றுலாத்துறைகான வாய்ப்பினை ஏற்படுத்தலாம்?

## 1.4 ஆய்வின் நோக்கங்கள்

1. தலவாக்கலை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் தற்போது வளர்ச்சியடைந்துள்ள சுற்றுலாத் தளங்களை அடையாளப்படுத்தல்.

2. தலவாக்கலை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் எதிர்கால சுற்றுலா தளத்திற்கு வாய்ப்பாகவுள்ள வளவாய்ப்புக்களை இணங்காணல்.

3. தலவாக்கலை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் எதிர்கால சுற்றுலாத்துறைக்கு சிறந்த வளவாய்ப்புக்களைக் கொண்ட புதிய சுற்றுலாத் தளங்களை அடையாளம் காணல்.

## 1.5 ஆய்வு வடிவமைப்பு மற்றும் அணுகுமுறை

இவ் ஆய்வானது கலப்பு முறையை கொண்டு அமைந்துள்ளது. அதாவது பண்புசார் மற்றும் அளவைசார் தரவுகள் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே பண்புசார் விடயங்களாக நேர்காணல், இலக்கு குழு கலந்துரையாடல், நேரடி அவதானிப்பு என்பவற்றையும் அளவை சார் தரவுகளுக்கு ArcGIS இடம்சார் பகுப்பாய்வு, SWOT பகுப்பாய்வுயென பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே கலப்பு முறையை கொண்டு வடிவமைக்கப்பட்டு மேலே குறிப்பிட்ட அணுகு முறையையும் கையாண்டுள்ளது.

## 1.6 இலக்கிய மீளாய்வு

பண்டார மற்றும் குணசேகரா (2018) என்பவர்களால் ஆய்வு செய்யப்பட்ட "GIS மற்றும் SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி தலவாக்கலையில் சுற்றுலா சாத்தியத்தை மதிப்பீடு செய்தல்" எனும் ஆய்வு கட்டுரையின் நோக்கங்களாக GIS மற்றும் SWOT பகுப்பாய்வை ஒருங்கிணைத்து தலவாக்கலைவில் சுற்றுலாத்திறனை மதிப்பிடுதல், சுற்றுலா வாய்ப்புகள் மற்றும் சவால்களை மதிப்பிடுவதற்கு SWOT பகுப்பாய்வுடன் GIS வரைபடத்தை ஒருங்கிணைத்தலாகும்.

தரவு சேகரிப்பு முறைகளாக செயற்கைக்கோள் படங்கள், கள அவதானிப்புகள், நேர்காணல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் முடிவாக இயற்கை அழகு மற்றும் கலாசார தளங்களில் பலத்துடன் சுற்றுச்சூழல் சுற்றுலா மற்றும் பாரம்பரிய சுற்றுலாவுக்கு அதிக சாத்தியமுள்ள தலவாக்கலையின் முக்கிய பகுதிகளை அடையாளம் கண்டுள்ளதாகும்.

ஜெயசேகர மற்றும் ராஜபக்ச (2021) என்பவர்களால் ஆய்வு செய்யப்பட்ட "தலவாக்கலைக்கான சுற்றுலா அபிவிருத்தி உத்தி: ஒரு GIS மற்றும் SWOT அடிப்படையிலான அணுகுமுறை" எனும் ஆய்வு கட்டுரையில் GIS மற்றும் SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி தலவாக்கலைக்கான சுற்றுலா மேம்பாட்டு மூலோபாயத்தை உருவாக்குதலாகும். இந்த ஆய்வின் தரவு சேகரிப்பு முறைகள் RS, GIS தரவு, நேர்காணல்களாகும். இந்த ஆய்வின் முடிவுகளாக சுற்றுச்சூழலுக்கு உகந்த சுற்றுலா நடைமுறைகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடுகளை வலியுறுத்தியதும், SWOT பகுப்பாய்வு தலவாக்கலையின் சுற்றுலாத் துறையை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை வெளிப்படுத்தியதாகும்.

விக்கிரமரத்ன மற்றும் பெர்னாண்டோ (2017) என்பவர்களால் ஆய்வு செய்யப்பட்ட "GIS மற்றும் SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி தலவாக்கலையின் சுற்றுலாத் திறனை மதிப்பிடுதல்" எனும் ஆய்வு கட்டுரையின் நோக்கமாக எதிர்கால சுற்றுலா வளர்ச்சிக்கு வழிகாட்ட GIS மற்றும் SWOT பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தி தலவாக்கலையின் சுற்றுலாத் திறனை மதிப்பிடுதலாகும். தரவு சேகரிப்பு முறைகளாக GIS தரவு, மையநாட்டகுழு கலந்துரையாடல்களாக உள . இந்த ஆய்வின் முடிவுகளாக தலவாக்கலையின் சுற்றுச்சூழல் சுற்றுலா திறனை அடையாளம் கண்டுள்ளதும், SWOT பகுப்பாய்வு இயற்கை அழகில் உள்ள பலம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டில் உள்ள சவால்கள், நிலையான சுற்றுலாவுக்கான வாய்ப்புகள் மற்றும் அதிகரித்த சுற்றுலா நடவடிக்கைகளால் சுற்றுச்சூழல் பாதிப்புகளால் ஏற்படும் அச்சுறுத்தல்கள் அடையாளப்படுத்தியதும் ஆகும். இந்த ஆய்வின் நோக்கம், தரவு சேகரிப்பு முறைகள், முடிவு என்பன ஆய்வாளரின் ஆய்வுக்கு பயன்படுத்தப்பட்டன.

பெர்னாண்டோ மற்றும் பெரேரா (2018) என்பவர்களால் ஆய்வு செய்யப்பட்ட "GIS மற்றும் SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி நுவரெலியாவில் சுற்றுலா சாத்தியத்தை மதிப்பிடுதல்" எனும் ஆய்வு கட்டுரையின் நோக்கமாக GIS மற்றும் SWOT பகுப்பாய்வு ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு மூலம் நுவரெலியாவின் சுற்றுலாத் திறனை மதிப்பிடுதலாகும். இந்த ஆய்வின் தரவு சேகரிப்பு முறைகளாக செயற்கைக்கோள் படங்கள், கள ஆய்வுகள்;, நேர்காணல்களாகும். இந்த ஆய்வின் முடிவாக நுவரெலியாவின் இயற்கை அழகு மற்றும் குளிர்ந்த காலநிலை

ஆகியவற்றில் உள்ள பலம், சுற்றுச்சூழல் சுற்றுலா, கலாசார சுற்றுலாவின் சாத்தியக்கூறுகளை அடையாளம் காட்டியதாகும். குணரத்ன மற்றும் சில்வா (2020) என்பவர்களால் ஆய்வு செய்யப்பட்ட "நுவரெலியாவிற்கான GIS மற்றும் SWOT அடிப்படையிலான சுற்றுலா அபிவிருத்தி உத்தி" எனும் ஆய்வு கட்டுரையின் நோக்கமாக GIS மற்றும் SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி நுவரெலியாவுக்கான உத்திசார் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தை உருவாக்குவதாகும். இந்த ஆய்வின் தரவு சேகரிப்பு முறைகளானது GIS தரவு, இரண்டாம் நிலைத்தரவு, நேர்காணல்களாகும். இந்த ஆய்வின் முடிவாக நுவரெலியாவில் சுற்றுலா வளர்ச்சிக்காக முக்கிய பகுதிகள் அடையாளம் காணப்பட்டதாகும்.

குணரத்ன மற்றும் சில்வா (2020) என்பவர்களால் ஆய்வு செய்யப்பட்ட "நுவரெலியாவிற்கான GIS மற்றும் SWOT அடிப்படையிலான சுற்றுலா அபிவிருத்தி உத்தி" எனும் ஆய்வு கட்டுரையின் நோக்கமாக GIS மற்றும் SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி நுவரெலியாவுக்கான உத்திசார் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தை உருவாக்குவதாகும். இந்த ஆய்வின் தரவு சேகரிப்பு முறைகளானது GIS தரவு, இரண்டாம் நிலைத்தரவு, நேர்காணல்களாகும். இந்த ஆய்வின் முடிவாக நுவரெலியாவில் சுற்றுலா வளர்ச்சிக்காக முக்கிய பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சுஜாதா மற்றும் சுபாஜினி (2014), என்பவர்களால் ஆய்வு செய்யப்பட்ட "யாழ்ப்பாண மாவட்ட சுற்றுலாத்துறைக்கான வளவாய்ப்புகளும் சவால்களும்" என்னும் ஆய்வுக் கட்டுரையில் யாழ்ப்பாண மாவட்ட சுற்றுலாத் துறைக்கான வளவாய்ப்புக்களின் இன்றைய நிலையினை அடையாளப்படுத்தல், யாழ்ப்பாண மாவட்ட சுற்றுலாத் துறை எதிர்நோக்கும் சவால்களை அடையாளப்படுத்தல் மற்றும் நிலைத்திருப்புடன் கூடிய அபிவிருத்திக்கான தந்திரோபாயங்களை முன்மொழிதல் ஆகிய நோக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் SWOT பகுப்பாய்வின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவாக யாழ்ப்பாண மாவட்ட சுற்றுலாத் துறைக்கான வாய்ப்புக்கள் அடையாளம் காணப்பட்டு சவால்களுக்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்ஆய்வுக் கட்டுரையில் பயன்படுத்தப்பட்ட SWOT பகுப்பாய்வு நுட்பமானது ஆய்வாளருடைய இவ்ஆய்விற்கும் பயனுடையதாக அமைந்துள்ளது.

மேற்கூறப்பட்ட ஆய்வுகளில் பயன்படுத்தப்பட்ட ஆய்வின் நோக்கங்கள், தரவு சேகரிப்பு முறைகள், பகுப்பாய்வு முறைகள், முடிவுகள் என்பன ஆய்வாளரின் ஆய்வுக்கு பயன்பட்டுள்ளன.

## 2. ஆய்வு முறையியல்

### 2.1 ஆய்வுப் பிரதேசம்

இலங்கையின் மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் தலவாக்கலை பிரதேசசெயலக பிரிவானது துல்லியமாக 6. 5623910 வட அகலக்கோட்டிலும் 80°. 39' 28.52" கிழக்கு நெடுங்கோடுக்கு இடையில் அமைந்துள்ளது. இதன் சார்பு அமைவிடமாக வடக்காக கொத்மலை பிரதேச செயலக எல்லையையும், கிழக்காக நுவரெலியா பிரதேச செயலக எல்லையையும், தெற்காக அம்பேவல பிரதேச செயலக எல்லையையும், மேற்காக அம்பகமுவ பிரதேச செயலக எல்லையையும் கொண்டுள்ளது. ஆய்வு பிரதேசத்தின் வருடாந்த சராசரி வெப்பநிலையானது 18℃ ஆகவும் வருடாந்த சராசரி மழைவீழ்ச்சிக் கிடைப்பனவானது 2500 mm ஆகவும் காணப்படுகின்றது. நுவரெலியா மாவட்டத்தின் சராசரி தரையுயரம் 1363m ஆகவும், அதிகுறைந்த தரையுயரம் 908m ஆகவும், அதிகூடிய தரையுயரம் 2192m ஆகவும் உள்ளது. அதில் ஆய்வு பிரதேசம் 1198m தரையுயரத்தில் உள்ளது. தலவாக்கலை பிரதேசசெயலக பிரிவின் மொத்த பரப்பு 260.474 சதுரkm ஆகும்.



விளக்கப்படம் - 6.1 ஆய்வு பிரதேசத்தின் அமைவிடமூலம்:- ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது 2024




விளக்கப்படம் - 6.2 மூலம்:- ஆய்வாளரால் அய்வுக்காக தயாரிக்கப்பட்டது 2024.

## 3. தரவு சேகரிப்பு முறைகளும் தரவுகளும்

### 3.1 முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகள்

நேரடிஅவதானம், நேர்காணல், இலக்குக்குழு கலந்துரையாடல் மூலம் தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டது. நேர்காணலானது புதிய சுற்றுலாவுக்கு வாய்ப்பாக இருக்கக் கூடிய இடங்களில் வசிப்பவர்கள், கிராமசேவகர்களிடம் மேற்கொள்ளப்பட்டது. இலக்குக்குழு கலந்துரையாடல் பிரதேசசெயலக திட்டமிடல்பிரிவு, பிரதேசசெயலக நிலதிட்டமிடல்பிரிவு, நகர அபிவிருத்திசபை உத்தியோகஸ்தர்களுடன் மேற்கொள்ளப்பட்டது. எண்ணிலக்கமாக்கல் செயற்பாட்டினை மேற்கொள்வதற்காக செய்மதிப்படம், இடவிளக்கப்படங்களோடு ஆய்வு பிரதேசத்திற்குச் சென்று நேரடி அவதானிப்பின் மூலம் புதிய சுற்றுலாவுக்கான வளவாய்ப்புக்கள் தொடர்பான சரியான தரவுகள் பெறப்பட்டு புதிய சுற்றுலாத் தளங்களுக்கான இடங்கள் படமாக்கப்பட்டன. இரண்டாம் நிலைத்தரவுகளாக செய்மதிப்படங்கள் (2012), ஆய்வறிக்கைகள், நிலப்பயன்பாட்டு அறிக்கை (2023), மாவட்ட சனத்தொகை புள்ளிவிபர கையேடு (2022), நகர அபிவிருத்தி கையேடு (2022), வருடாந்த செயலாற்றுகை அறிக்கை (2019) என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 3.2 தரவுப்பகுப்பாய்வு

முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இவ்ஆய்வுப் பிரதேசத்தின் புதிய சுற்றுலாவுக்கான வளவாய்ப்புக்களை SWOT தரவுப்பகுப்பாய்வு மூலம் பகுப்பாய்வுச் செய்யப்பட்டு பின் இடம்சார் பகுப்பாய்வு செய்யப்பட்டு அதில் அணுகல்சார் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

தரவுப்பகுப்பாய்வு - பாய்ச்சல் கோட்டு வரைபடம்




வரைபடம் :- 6.1 தரவு பகுப்பாய்விற்கான பாய்ச்சல் கோடு

## 7. **ஆய்வின் முடிவுகள்**

### நோக்கம் - 01

தலவாக்கலை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் வளர்ச்சியடைந்த சுற்றுலாத் தளங்களை அடையாளப்படுத்தல்.

தலவாக்கலை பிரதேசசெயலகத்துக்குட்பட்ட பிரதேசங்களில் வளர்ச்சியடைந்த சுற்றுலாத் தளங்களை அடையாளப்படுத்துவதற்காக ஆய்வுப்பிரதேசத்திற்கு உட்பட்ட வளர்ச்சியடைந்து வினைத்திறனாக செயல்படும் சுற்றுலாத் தளங்களை அடையாளப்படுத்தல் என்ற ரீதியில் இரண்டாம் நிலைத் தரவுகளான பிரதேசசெயலக திட்டமிடல்பிரிவு அறிக்கை மற்றும் சுற்றுலா அறிக்கை மூலம் எடுக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அதாவது திட்டமிடல்

பிரிவு அறிக்கை மூலம் சுற்றுலாத் தளங்கள் எத்தனை?, எங்கு உள்ளன? என்பது பற்றியும் GPS மூலம் துல்லியமான அமைவிடத்தையும்; அடையாளப்படுத்தி பின் இடஞ்சார் தொழில்நுட்ப முறை (ArcGIS) மூலம் படமாக்கப்பட்டது. இவ்வாறான தரவு பகுப்பாய்வின் மூலம் முதலாவது நோக்கம் அடையப் பெற்றது.

அதன் அடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்தில் 8 வளர்ச்சியடைந்த சுற்றுலாத் தளங்கள் உள்ளன. அவையாவன, டெவன் நீர்வீழ்ச்சி, சென். கிளேர்ஸ் நீர்வீழ்ச்சி, மளிஸ்னா டீ கெஸ்டல் சென். சென். கிளேர்ஸ், NLDB டயகம பண்ணை, மேல்கொத்மலை நீர்த்தேக்கம், டயகம பவர் ஹவுஸ், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம், யுனிலீவர் சீடீ தொழிற்சாலை அக்கரப்பத்தனை என்பவையாகும்.




விளக்கப்படம் - 4.1 ஆய்வு பிரதேசத்தில் வளர்ச்சியடைந்த சுற்றுலாத் தளங்கள் மூலம் :- ஆய்வாளரால் உருவாக்கப்பட்டது 2024.

**நோக்கம் - 02**

**தலவாக்கலை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் எதிர்கால சுற்றுலாத் தளங்களுக்கான வளவாய்ப்புக்களை இனங்காணல்.**

எதிர்கால சுற்றுலாத் தளங்களுக்கான வாய்ப்புக்களுடைய இடங்களுக்கு நேரடியாகச் சென்றும் இரண்டாம் நிலையின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இத்தரவை அடிப்படையாக வைத்துக் கொண்டு SWOT தரவுப் பகுப்பாய்வானது மேற்கொள்ளப்பட்டது. அதாவது இவ்விடங்களில் உள்ள பலம், பலவீனம், வாய்ப்புகள், அச்சுறுத்தல்கள் என்பன தரவு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு பின், இடம்சார் பகுப்பாய்வு, அணுகல்சார் பகுப்பாய்வு மூலம் பெறுபேறுகள் பெறப்பட்டுள்ளன.

அந்தவகையில் SWOT தரவுப்பகுப்பாய்வு, இடம்சார் பகுப்பாய்வு அணுகல்சார் பகுப்பாய்வு மூலமாக 18 சுற்றுலாத் தளங்கள் ஆய்வில் அடையாளப்படுத்தப்பட்டன. இயற்கைசார், கலாசார, சாகச சுற்றுலாக்கள் என

வகைப்படுத்தி புதிய சுற்றுலாவுக்கு வாய்ப்பாகவுள்ள இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. அவற்றில் இயற்கைசார் சுற்றுலாவுக்கு ஏற்ற இடங்களாக மவுன்வனன் நீர்வீழ்ச்சி, கொமர்சல் ஏரி, தலவாக்கலை ஏரி, டிரைட்டன் ஏரி, டயகம ஈஸ்ட் நீர்வீழ்ச்சி, டயகம வெஸ்ட் நீச்சல் தடாகம், திம்புள்ள நீர்வீழ்ச்சி என்பன அடையாளப்படுத்தப்பட்டன. அதேபோல கலாசார சுற்றுலாவுக்கேற்ற இடங்களாக தலவாக்கலை புகையிரத நிலையம், வட்டக்கொட புகையிரத நிலையம், கொட்டக்கலை புகையிரத நிலையம், கிரேட் வெஸ்டன் புகையிரத நிலையம், பத்தனை காட்டுமாரியம்மன் கோயில், வூட்டன் கோயில், பரி. மாகிறட் கொட்டக்கலை தேவாலயம், All Saints' தேவாலயம் அக்கரப்பத்தனை என்பனவும் சாகச சுற்றுலாக்கு ஏற்ற இடங்களாக கொமர்சல் 60அடி புகையிரத பாலம், கிரேட்வெஸ்டன் மலைத்தொடர், கொட்டக்கலை சுரங்கம் என்பன ஆய்வாளரால் அடையாளப்படுத்தப்பட்டன.

எதிர்கால சுற்றுலாத் தளத்திற்கு ஏற்ற இடங்களில் உள்ள வளவாய்ப்புக்களை அவதானிக்கலாம். அதில் இயற்கை சுற்றுலாவுக்கு வாய்ப்பாக உள்ள **மவுன்வனன் நீர்வீழ்ச்சியின்** பலம், பலவீனம், வாய்ப்புகள், அச்சுறுத்தல்கள் என்பவை இனங்காணப்பட்டன. இந்த நீர்வீழ்ச்சியானது 120m உயரத்துடன் நாவலப்பிட்டி - திம்புள்ள வீதியில் மவுன்வனன் எனும் ஊரில் திம்புள்ள 475B கிராமசேவக பிரிவில் அமைந்துள்ளது. தலவாக்கலையிலிருந்து 7km தூரத்தில் உள்ளது. நீர்வீழ்ச்சியின் பலமாக அமைவிடம் உள்ளது. 5.5 km தலவாக்கலையிலிருந்து A7 வீதியில் பயணித்து பத்தனை சந்தியில் வலது புறம் திரும்பி போகாவத்தை - நாவலப்பிட்டிய வீதி ஊடாக 1.5km பயணத்தால் இவ்விடத்தை அடையலாம். இதன்மூலம் அமைவிடம் மிகவும் அருகாமையில் உள்ளதை அவதானிக்க கூடியதாகவுள்ளது. இந்த நீர்வீழ்ச்சியானது டெவன் நீர்வீழ்ச்சியில் இருந்து 1 km தொலைவில் உள்ளதால் நீர்வீழ்ச்சியை எதிர்காலத்தில் சுற்றுலாத்தளமாக மாற்றுவதன் ஊடாக அணுகக் கூடியத் தன்மை இலகுவாக காணப்படும். மவுன்வனன் பிரதேசமானது 19℃ வெப்பநிலையைக் கொண்டிருந்தாலும் இந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ள துல்லியமான இடத்தில் 18℃ வெப்பநிலையைக் கொண்டு காணப்படுகின்றது. இயற்கை அழகாக நான்கு புறமும் தேயிலை தோட்டத்தையும் மலைத்தொடர்களையும் கொண்டுள்ளன. உயிர்ப்பல்வகைமை இங்கு காணப்படுவதனால் புகைப்படம் எடுப்பதற்கு அருமையான காட்சியமைப்பைக் கொண்டுள்ளது. இயற்கை தாவர இனங்களாக Ferns, Mosses, Aquatic Plants விலங்கு இனங்களாக தவளைகள், சாலமண்டர்கள், நீர்வாழ் பூச்சியினங்கள், அட்டைகள் காணப்படுகின்றன. திம்புள்ள - நாவலப்பட்டி வீதியில் மவுன்வனன் பேருந்து தரிப்பிடத்திலிருந்து 1/2 கிலோமீற்றரில் இவ்விடம் அமைந்துள்ளது.

வாகனத்தரிப்பிடமானது நீர்வீழ்ச்சிக்கு முன் 50mக்குள் உள்ளது. பொழுதுபோக்கு நடவடிக்கைகளான குளியல் நடவடிக்கைக்கு ஏற்றவாறு இந்நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. தங்குமிட வசதிகள் 1.5kmக்குள் காணப்படுகின்றன. நீர்வீழ்ச்சியானது வருடம் முழுவதும் பாய்ந்து ஓடக்கூடிய தன்மை கொண்டது. மழைக் காலங்களில் இதன் நீரின் கொள்ளளவானது அதிகமாக இருப்பதினால் இது பார்ப்பதற்கு மிகஅழகாக காணப்படும். பலவீனம் என்று அவதானிக்கையில் அங்குள்ள பாறைகளில் நீர்த்தாவரங்கள் மற்றும் பாசிகள் காணப்படுவதினாலும் நீரினால் இப்பாறைகள் அரிக்கப்பட்டதினாலும் மென்மையான தன்மையில் காணப்படுகின்றதால் வழுக்கும் தன்மையைக் கொண்டிருக்கின்றது. அட்டை இனங்களின் செல்வாக்கு குறைந்த அளவில் உள்ளது. வாய்ப்புக்கள் எனும்போது நீர்வீழ்ச்சிக்கு செல்வதற்கான வழிகள் தேயிலை தோட்டங்களின் நடுவே செல்வதனால் இயற்கை காட்சிகளை இரசித்து செல்லக்கூடிய தன்மையை கொண்டுள்ளது. இயற்கை சார்ந்த பொழுதுபோக்கு நடவடிக்கைகளும் இடம்பெற வாய்ப்புக்கள் உள்ளன. கிராமியச்சுற்றுலா மிகப்பெரிய வாய்ப்பாக இங்கு அமையும். பிரதேசத்தின் குடியிருப்பானது லயன் குடியிருப்புகளாக உள்ளன. நீர் சாகச விளையாட்டுக்களான குறைந்த உயரத்தைக் கொண்டிருப்பதினால் கேபிள் மூலமாக நீர்வீழ்ச்சியில் மேலிருந்து கீழே குதித்தல் செயல்பாடு மற்றும் Thrilling Water Rafting, White Water Rafting, Heart – Pounding Canyoning, Ziplining போன்ற நீரச்சாகச விளையாட்டுக்களை நடைமுறைப்படுத்த வாய்ப்புக்கள் உள்ளன. பிரதேச செயலக அபிவிருத்தி திட்டங்கள், நகர சபை முன்மொழிவு திட்டங்கள் பெரும் வாய்ப்பாகவுள்ளன. அரசகொள்கைகள், தேசிய பௌதிக கொள்கைகள், சுற்றுலா பாதுகாப்பு திட்டங்களானது இலங்கையில் எவ்வாறான முறையில் சுற்றுலா துறையை அதிகரிக்கச் செய்யலாம் என்பதை அடிப்படையாக கொண்டுள்ளது. இது சிறந்த வாய்ப்பாக உள்ளது. அச்சுறுத்தலாக இங்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வரும்போது சூழல் மாசடைவதோடு அபிவிருத்தி நடவடிக்கையை மேற்கொள்ளும் போது இயற்கை தாவரப்போர்வை சிறிய அளவில் அழிவடையும். இந்த நீர்வீழ்ச்சி வருடம் முழுவதும் நீரோட்டத்தை கொண்டிருப்பதினால் காலநிலை மாற்றத்தினால் நீரின் அளவு குறைவதற்கான அச்சுறுத்தல் அதிகமாக உள்ளது.

அடுத்த இடமாக **கொமர்சல் ஏரி** உள்ளது. இந்த ஏரியானது ஹட்டனிலிருந்து நுவரெலியாச் செல்லும் A7 நெடுஞ்சாலையில் கொமர்சல் எனும் இடத்தில்; அமைந்துள்ளது. ஏரியின் பரப்பளவு 16,502 சதுரKm ஆகும். இது 475A கிராம சேவகர் பிரிவின் கீழ் உள்ளது. இதன் பலமாக அமைவிடம் உள்ளது. இந்த இடம் தலவாக்கலை நகரில் இருந்து 12.8 km உம் ஹட்டனில் இருந்து 4.5 km தூரத்திலும்

உள்ளது. இயற்கையான ஈரநிலமானதால் நீரின் அளவு வருடம் முழுவதும் மாறாத நிலைத்தன்மையைக் கொண்டுள்ளது. கொட்டக்கலையில் இருந்து வரும் ஓர் ஆறானது இதற்கு நீர் வழங்கிக் கொண்டிருக்கிறது. ஈரப்பதன் 85%, முகில் போர்வை 97% யும் கொண்டுள்ளது. பறவையினங்களாக Yellow - Wattled apwing, Common Moorhen, River Lapwing, Crow, Black Billed Magpie, Semipalmateid Plover, Beetle Water Boutman, Butterflys என்பனவும் நன்னீர் மீன், நண்டு, தவளை போன்ற விலங்கினங்களும் உள்ளன. தாவர இனங்களாக Cattail, Marsh – Marigold , Water – Starwort, European Bistort காணப்படுகிறன. இந்த ஏரியானது இயற்கையாகவே அமைந்துள்ளதால் அதிக இயற்கை வளத்தைக் கொண்டுள்ளது. இந்த ஏரியானது தேயிலை தோட்டங்கள், மலைகளின் நடுவே உள்ளது. மேலும் ஏரியின் நடுவே சிறியதீவு போல் குன்று அமைந்துள்ளது. மாலை நேரங்களில் சூரியன் மறைவையும் பறவை இனங்களை இரசிப்பதற்கும் ஓர் இடமாக உள்ளது. இங்கு இயற்கையான நடை பாதை மற்றும் உல்லாசமாக இங்கு பொழுதை போக்கக் கூடிய தூண்டில் மீன்பிடியும் உள்ளது. போக்குவரத்து வசதி என்கின்ற போது A7 வீதியில் இருந்து 25M தூரத்திலே உள்ளது. ஏரி ஆரம்பிப்பதற்கு முன் இருந்தே வாகன தரிப்பிடத்திற்கு பாதுகாப்பான பரந்தளவிலான இடவசதியை கொண்டுள்ளது. இரு புறமும் வாகனம் தரிப்பதற்கான வசதிகள் இங்கு உள்ளன.

ஏரியைச் சுற்றி களி மண்ணாலான சுவர்கள் காணப்படுவதால் மழைக்காலங்களில் பக்க மண்ணரிப்பு ஏற்படும். அபிவிருத்தியில்லாததால் உட்கட்டமைப்பு வசதி ஒப்பிட்டளவில் குறைவு. அவ்வாறே வாய்ப்பு என்று பார்க்கையில் இயற்கை சார்ந்த சுற்றுலாவுக்கு வாய்ப்பாகவுள்ளது. பல உயிர்ப்பல்வகைமைகள் காணப்படுவதினால் Birds Watching சுற்றுலாவை மேம்படுத்தலாம். இதனை வெளிப்பகுதியில் இருந்து பல பறவைகளைக் கொண்டு வந்து இதை மேம்படுத்தலாம். மத்திய மலைநாட்டை பொறுத்தவரை 34 சிறப்பான உள்ளூர் பறவை இனங்கள் காணப்படுகின்றன. இதில் சில இனங்களான Saatula Querquedula, Charadrius, Asiaticus, Little Cormorant, White – Breasted Waterhen, Pied Kingfisher இனங்களை இந்த ஏரியின் நடுவில் உள்ள குன்றில் வளர்க்கலாம். கலாசார சுற்றுலாவுக்கும் பங்களிக்கிறது. ஏரியின் அருகில் உள்ள ஆற்றில் சமய சம்பிரதாய சடங்குகள் இடம்பெறும். நீர் தொடர்பான சாகச விளையாட்டுகளான Boating, Sailing Water Skiling, Jet Skiing போன்றவற்றை மேற்கொள்வதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அடுத்ததாக வாகன தரிப்பிடமானது பரந்த அளவில் உள்ளது. இதில் ஒரு பகுதியை சிறுவர்களுக்கான கவரக்கூடிய விளையாட்டுக்கள், பூங்காக்கள் அமைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. மேலும் உள்ளூர் உற்பத்திகளை விற்பனை செய்வதற்காக கடைகளை அமைப்பதற்கும் ஏனைய வணிக நடவடிக்கையை மேற்கொள்ள வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. பிரதேசசபை, நகரசபை, பிரதேசசெயலக

அபிவிருத்தி திட்டங்கள் பல முன்மொழிவுகள் உள்ளன. இதன் மூலம் பிரதேசம் அபிவிருத்தி அடைவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. மேலும் Tour Policy போன்றவை அதிகமாக காணப்படுவதனால் அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் உள்ளது. அச்சுறுத்தலாக ஏரியை அபிவிருத்தி செய்யும் போது ஏரியானது அசுத்தமடைவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இதனால் இயற்கை அழகு, சூழல் பாதிப்படையலாம். ஆக்கிரமிப்பு இனமான Common Sandpiper குளிர்காலங்களில் புலம்பெயர்ந்து இந்த ஏரிக்கு வந்து சிறிய மீன் இனங்களை உண்ணும். இதனால் ஆக்கிரமிப்பு இனம் அச்சுறுத்தலாக உள்ளது. தற்போது காலநிலை மாற்றத்தினால் நீர் ஆவியாதல் தன்மை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

அடுத்ததாக **தலவாக்கலை ஏரியானது** மேல்கொத்மலை நீர்த்தேக்கத்திற்குச் செல்லும் கொத்மலை ஓயாவின் ஒரு பகுதியாகும். பிரதானமான ஆக்ரோ ஓயா, நானோயா ஓயா என்பன இதனுடன் கலக்கின்றன. அந்த வகையில் தலவாக்கலை நகர மத்திய பகுதியில் அமைந்துள்ள இந்த கொத்மலை ஆறு ஏரி போன்ற அமைப்பில் உள்ளதால் எதிர்கால சுற்றுலாத் தளத்திற்கு ஏற்றதாக இருக்கும். அந்த வகையில் இவ்விடமானது ஹட்டன் பிரதான வீதியான A7 வீதியில் தலவாக்கலை நகரத்தில் அமைந்துள்ளது. இந்த நீர்த்தேக்கமானது லிந்துலை தொடக்கம் பூண்டுலோயா வரை நீண்டுள்ளது. இதன் பலமாக இதன் அமைவிடம் உள்ளது. அதாவது இந்த தலவாக்கலை நகரமானது மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக உள்ளது. கொத்மலை ஓயாவில் மண்சரிவை தடுப்பதற்கு இருபுறமும் பாதுகாப்புச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. இது ஓயாவின் கீழ்ப்புறத்தில் இருந்து 30 m வரை அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாதுகாப்பு வலயம் கொத்மலை ஓயா ஆரம்பம் முதல் இறுதி வரை கட்டப்பட்டுள்ளது. இதனால் பாதுகாப்புச் சுவர்; மிகப்பெரிய பலமாக காணப்படுகின்றது.

பொழுதுபோக்கு நடவடிக்கைகளாக தூண்டில் மீன்பிடியைக் கொண்டுள்ளது. A7 வீதியின் அருகில் உள்ளதால் போக்குவரத்து அணுகல் 500 m இடையில் பெறலாம். தங்குமிட வசதி இலகுவாக அணுகக் கூடிய வசதியினை கொண்டுள்ளது. 0.513 m இடையில் தங்குமிட வசதிகள் உள்ளன. பலவீனமாக வெப்ப காலங்களில் மின்சார உற்பத்திக்கு நீரின் அளவு அதிகம் தேவைப்படுவதினால் வெப்பகாலங்களில் நீரின் அளவு குறையும். வாய்ப்பாக போட்டிங் (Boat Tour), Sailing Water Skiing, Jet Skiing போன்ற நீர்விளையாட்டுக்களை நடைமுறைப்படுத்தலாம். மேல் கொத்மலை நீர்த்தேக்க திட்டங்கள் வாய்ப்பாக உள்ளன. இந்த ஆறு ஆரம்பித்து 1 Km வரை சிறுவர் பூங்காக்கள், ஓய்வு இருக்கைகள், அமர்ந்து இளைப்பாற குடில்கள் என்பவற்றை அமைக்கலாம். சுற்றுலாப் பணிகள் அதிகரிக்கும் போது சூழல் மற்றும் நீர் அசுத்தமாவதற்கான அச்சுறுத்தல்கள் உள்ளன.

அடுத்த இடமாக **டிரைட்டன் ஏரியானது** கொட்டக்கலை நகரத்தில் இருந்து 0.5 km தூரத்தில் இருந்து டிரைட்டன் பிரதேசத்தின் ஊடாக செல்லும் போது சில குடியிருப்புகளைக் கடந்து சென்றால் இதையடையலாம். இது 475 கிராம சேவகர் பிரிவின் கீழ் அமைந்துள்ளது. இதன் பரப்பளவானது 41, 635சதுரkm. தலவாக்கலை நகரத்தில் இருந்து 11.5 km அயும் கொண்டுள்ளது. ஏரியின் பலமாக காலநிலையை கூறலாம். ஆய்வுப்பிரதேசமானது பொதுவாகவே குளிர் நிலைமையைக் கொண்டு காணப்படுகின்றது. இயற்கை அழகைக் கொண்டுள்ளது. அதாவது நான்கு புறமும் தேயிலைத் தோட்டங்களும் மலைகளும் சூழ்ந்து காணப்படுவதனால் ஏரியின் அழகு மிகவும் அழகாக காட்சியளிக்கும். அத்துடன் பல உயிர்ப்பல்வகைமைகளைக் கொண்டு காணப்படுகின்றன. அந்த வகையில் தாவரங்களாக Water Lattuce, Muskgrass, Alligator Weed, Wetland Rushes, Yellow Flag Iris என்பவற்றை கொண்டுள்ளன. Great Blue Heron, Dragonfly, Mayfly போன்ற பறவை இனங்களை கொண்டிருக்கின்றது. போக்குவரத்து வசதி மற்றும் வாகன தரிப்பிட வசதியானது மிகவும் பரந்தளவில் காணப்படுகின்றது. அதாவது A7 வீதியிலிருந்து டிரைட்டன் வீதியின் ஊடாக ½ முஅ தூரம் வரை போக்குவரத்து வீதியை அணுகலாம். வாகன தரிப்பிடமானது ஏரிக்கு அருகாமையிலேயே வாகனங்களை நிறுத்தக்கூடிய இடவசதி உள்ளது. இங்கு ஏரியின் நீர் முகாமைத்துவமானது சிறப்பான முறையில் பேணப்பட்டு வருகின்றது.

பலவீனம் என்று நோக்குகையில் மழைக்காலங்களில் பக்கமண்ணரிப்பு ஏற்படும். ஏரியின் ஓரங்களில் மண் சுவர் காணப்படுவதனால் உறுதியற்ற தன்மையை கொண்டுள்ளது. ஏரியைச் சுற்றி விவசாய நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இதனால் விவசாயக் கழிவுகள் சில ஏரி ஓரங்களில் படிந்து காணப்படுகின்றன. இவ்ஏரியானது இயற்கையாக உருவாகி உள்ளமையினால் இயற்கைச் சுற்றுலாவுக்கு ஏற்ற இடமாக இந்த ஏரி அமையும். ஏரியைச் சுற்றி இயற்கையான நடைப் பாதை காணப்படுவதால் சுற்றுலா பயணிகள் இயற்கையை இரசித்த வண்ணம் நடைப்பயணத்தை மேற்கொள்ளலாம். நீர் தொடர்பான சாகச சுற்றுலாவான Boating, Sailing Water Skiing, Jet Skiing என்பவற்றை கூறலாம். இதற்கு ஏரியின் நீரில் கொள்ளளவு மற்றும் ஏரியின் பரப்பளவு என்பவை செல்வாக்குச் செலுத்துகின்றன.

அடுத்ததாக **டயகம ஈஸ்ட் நீர்வீழ்ச்சி** 476 S என்னும் கிராமசேவகர் பிரிவின் கீழ் அமைந்துள்ளது. இது அக்கரப்பத்தனை டயகம வீதியில் இருந்து ஹோட்டன் சமவெளிக்குச் செல்லும் வழியில் உள்ளது. இது டயகம நகரத்திலிருந்து 4 Km டயகம ஈஸ்ட் சென்று பின் இடது புறமாக 500m கரடு முரடான பாதையில் நடந்து சென்று நீர்வீழ்ச்சியை அடையலாம். தலவாக்கலையில் இருந்து இந்

நீர்வீழ்ச்சியானது 29.4 Km தூரத்தில் உள்ளது. இதன் பலம் என்று பார்க்கையில் இதன் அமைவிடம் உள்ளது. இது காட்டுக்கு நடுவே உள்ளதால் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கக்கூடியதாக உள்ளது. மேலும் இந்த இடம் மிகவும் அமைதியான இடமாக இருப்பதினால் சுற்றுலாப் பயணிகளை விரைவாக ஈர்ப்பதற்கான பலத்தைக் கொண்டுள்ளது. காலநிலையானது சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய வகையிலும் உள்ளது.

இந்த நீர்வீழ்ச்சியானது காட்டுக்கு நடுவே உள்ளதால் பல உயிர்ப்பல்வகைமைகளை தன் வசம் வைத்துக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் தாவர இனமான Ferns And Mosses, Aquatic Plants, Orchids, Shrubs And Trees, Arundinaria, Grass Land Shrublands என்பவையும், விலங்கு வகைகளாக Amphibians (Frogs, Toads), Yellow – Eared Bulbus, Whistling Thrush என்பவற்றையும் கொண்டிருக்கின்றன. நீர்வீழ்ச்சிக்கு செல்லும் வழி முழுவதும் இயற்கை காட்சிகளே அதிகம் உள்ளன. இயற்கை தாவரங்கள் மற்றும் பூக்கும் தாவரங்கள் அதிகமாக நீர்வீழ்ச்சிக்கு அருகாமையில் இருப்பதனால் இயற்கை அழகு மெருகூட்டப்படுகின்றது. போக்குவரத்து மற்றும் வாகன தரிப்பிடமானது சீரான முறையில் உள்ளது. ஆனால் 500m மட்டுமே நடந்து செல்ல வேண்டிய தேவை காணப்படுகின்றது. நீர்வீழ்ச்சிக்கு செல்லும் பாதை ஒற்றையடி பாதையாக காணப்படுவதினால் வாகனங்கள் உட்செல்வதற்கான போக்குவரத்துப் பாதை போதுமானதாகயில்லை. தரைத்தோற்ற அமைப்பானது பள்ளத்தாக்கையும் சமதரையையும் கொண்டு காணப்படுவதால் அனைவரையும் கவரக்கூடிய தன்மையை கொண்டுள்ளது.

பலவீனமாக மழைக்காலங்களில் அங்கு உள்ள பாறைகள் வழுக்கும் தன்மையை கொண்டுள்ளது. மழைக்காலங்களில் பாறைகளின் மேல் பாசித்தாவரங்கள் வளரக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. உட்கட்டமைப்பு வசதிகள் இல்லை. காட்டுக்கு நடுவே நீர்வீழ்ச்சி உள்ளதினால் உட்கட்டமைப்பு வசதி இங்கே இல்லை. இயற்கைச் சுற்றுலாவுக்கு மிகச் சிறந்த இடமாக நீர்வீழ்ச்சி அமைகின்றது. இந்நீர்வீழ்ச்சியானது காட்டுப்பகுதியில் அமைந்துள்ளதால் இயற்கையோடு ஒன்றித்ததாக உள்ளது. இதனால் நடைப்பயணம் (Hiking), முகாம் (Camp) போன்ற இயற்கை சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். மேலும் சூழல் நேயமிக்க விடுதிகளை அதாவது கபானாக்களை அமைப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. சாகச சுற்றுலா நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அதாவது சவ்வாரி (Safari) செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. அதாவது கரடு முரடான 500 m தூரத்தை கடக்க ஜீப் வண்டி மூலம் காட்டுக்கு நடுவே செல்லும் போது அதன் அனுபவம் சிறப்பானதாக இருக்கும். காட்டு விலங்குகளான குரங்கு, மரை, மான்,

பன்றி போன்றவற்றை இந்த பயணத்தில் காணும் போது வனச்சுற்றுலாவையும் அனுபவித்துக் கொள்ளலாம். அரச கொள்கைகள், திட்டங்கள் என்பனவும் இதற்கு வாய்ப்பாக அமையும். அச்சுறுத்தலாக தேனீக்களின் ஆதிக்கம் வெயில் காலங்களில் காணப்படும். சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிக்கும் போது இயற்கை வளம் மற்றும் இயற்கை சூழல் அசுத்தம் அடைவதற்கான அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன.

**டயகம வெஸ்ட் நீச்சல் தடாகம்** 475 L எனும் கிராம சேவகர் பிரிவின் கீழ்; அமைந்துள்ளது. தலவாக்கலையில் இருந்து 15 Kmயிலும் டயகமவில் இருந்து 2 Kmயிலும் அமைந்துள்ளது. இது இயற்கையான பாறைகளால் உருவான இயற்கையான நீச்சல் தடாகம் ஆகும். இதன் பரப்பளவானது துல்லியமாக கூற முடியாது. ஏனென்றால் இது இயற்கையாக இருப்பதினால் இதன் நீர் ஓட்டம் மற்றும் சுற்றியுள்ள சுற்றுச்சூழல்களை பொறுத்து இருக்கின்றது. இதன் வடிவமைப்பு ஒழுங்கற்றவை இருப்பினும் உள்ளூர் மதிப்பீட்டின்படி அண்ணளவாக 20-30 அடி நீளமும் 10-15 அடி அகலமும் ஆழம் 5 அடி (1.52m) கொண்டுள்ளது.

இதன் பலமாக இயற்கையாக அமைந்த நீச்சல் தடாகமாகும். கிரானைட், பசால்ட் போன்ற வலிமையான பாறைகளைக் கொண்டு உருவாகியுள்ளது. நீரமுத்தம், நீரின் அளவை சமனான அளவிலே வைத்திருக்கின்றது. சுற்றுச்சூழலானது இயற்கை தாவரத்தால் சூழ்ந்துள்ளது. அமைதியான சூழல் முறைகளையும் கொண்டு காணப்படுகின்றது. இயற்கையான சிறிய நீரோடைகளில் இருந்து பாயும் நீரை சேகரித்து பாறைப் படுக்கையயை இயற்கையே உருவாக்கியுள்ளது. குளிர்ந்த காலநிலையாகவே எப்பொழுதும் காணப்படுவதனால் அங்குள்ள உயிரப் பல்வகைமைகள் தாவர இனங்கள் மிகவும் பசுமை தன்மையானதாகவும் உயிரினங்களின் உடல் அமைப்புகள் அதற்கு ஏற்றவாறும் இசைவாக்கம் அடைந்தும் காணப்படுகின்றன. அந்தவகையில் தாவரங்களாக Strobilanthes Viscosa, Cinnamomum Dubilum, Osbeckia Lanata, Medical Plants, Cardiospermum Halicacabum And Osbeckiaoctandra என்பனவும் விலங்குகளாக Panther Pardus Kotiya, Simnopithecus, Vetulus Monticola மற்றும் பறவையினங்களாக Srilanka Junglefowl, Otocryptis, Wieegmanni, Butterflies, Dragonflies And Damselflies என்பனவும் உள்ளன.

பலவீனமாக மழைக்காலங்களின் போது பக்றீரியா நீரின் தரத்தை குறைவடையச் செய்கின்றது. மேலும் பருவக் கால மாற்றம் நீர்மட்டத்தின் அளவைக் குறைக்கின்றது. அதேபோல வழுக்கும் மேற்பரப்பைக் கொண்டுள்ளது. இயற்கையான நீச்சல் தடாகத்தில் பெரும்பாலும் பாறை சீரற்ற மேற்பரப்பைக் கொண்டுள்ளது. இது மழைக்காலங்களில் மட்டும் வழுக்கும் தன்மையாக மாறுகின்றது. இங்கு ½ km தூரத்திற்கு செப்பனிடப்படாத பாதைகள் உள்ளன.

அதேபோல வாய்ப்புகளாக சூழல்சார் சுற்றுலா மேம்பாட்டுக்கு வாய்ப்பாக உள்ளது. இப்பகுதியில் இயற்கை அழகு மற்றும் தனித்துவமான அமைப்பு சுற்றுலா பயணிகளை கவரும் தன்மையைக் கொண்டிருக்கின்றது. அதாவது அமைதியான சூழல் அமைப்பைக் கொண்டிருப்பதனினால் தியானம், இயற்கையில் ஓய்வெடுத்தல் போன்ற செயற்பாடுகளை செய்ய வாய்ப்பாக இருக்கும். மேலும் சாகச நடவடிக்கைகளான மலையேறுதல் (Mountain Hiking), பாறையேறுதல் (Rock Climbing), நீச்சல், நீர்வீழ்ச்சி ராப்பிலிங் (Waterfall Rappelling) போன்றவற்றை அறிமுகப்படுத்த வாய்ப்பாக இருக்கும்.

கலாசார சுற்றுலா அனுபவங்களை பயணிகளுக்கு வழங்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. அதாவது இங்கு கிராமத்தை கடந்து செல்வதன் ஊடாக கிராமிய சுற்றுலாவை ஏற்படுத்தலாம். இதன் மூலம் கலாசார நடவடிக்கைகள், திருவிழாக்கள், வாழ்க்;கை முறைகள் மற்றும் உணவு முறைகள் என்பவற்றை சுற்றுலா பயணிகளுக்கு வழங்கலாம். சமூக வலைத்தளங்களில் நீச்சல் தடாகத்தை பற்றி பதிவிடுதல் வீடியோக்கள், ஒளிப்படங்களை பதிவிடல் போன்றவற்றை மேற்கொள்ளும் போது இந்த நீச்சல் தடாகம் அபிவிருத்தி அடைவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. கூட்டமைப்பான டிராவல் ஏஜென்சிஸ் ((Travel Agencies), ரூட் ஆப்ரேட்டர் (Route operators) மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் தேசிய உள்ளூர் திட்டங்கள் என்பவற்றைக் கூறலாம். அச்சுறுத்தலாக இங்கு சுற்றுலா பயணிகள் அதிகரிக்கும் போது நீர், சூழல் பாதிப்பு ஏற்படும். மேலும் நீரோட்டம் வேகப்படும் போது மண்சரிவு அச்சுறுத்தல் உள்ளது.

**திம்புள்ள நீர்வீழ்ச்சியானது** போகாவத்தை - நாவலப்பிட்டிய B 317 வீதியில் திம்புள்ள எனும் பிரதேசத்தில் பிரதான வீதியிலிருந்து 1km தூரத்தில் 475B எனும் கிராம சேவகர் பிரிவின் கீழ் அமைந்துள்ளது. தலவாக்கலையில் இருந்து 12.6 km இல் உள்ளது. இதன் உயரம் 10 m ஆகும். அந்த வகையில் பலம் என்று பார்க்கின்ற போது இயற்கை அழகு, பசுமையான தோட்டங்கள், பரந்த தேயிலை தோட்டங்கள், அழகான தேயிலை புதர்கள் இந்த இடத்தில் சூழ்ந்து காணப்படுகிறன. இந்த நீர்வீழ்ச்சியானது உயரம் குறைவாக இருந்தாலும் அகலமானதாக உள்ளதால் காடுகளின் நடுவே மூங்கில் தோப்புக்குள் நடுவே அமைந்துள்ளதாலும் இயற்கை அழகானது மெருகூட்டப்பட்டிருக்கின்றது. குளிர் காலநிலையையும் பனிமூட்டமான காலநிலையும் கொண்டுள்ளது. போக்குவரத்து அணுகல் தன்மையானது போக்குவரத்து பாதை சீரான முறையில் காணப்படுகின்றது. அதாவது திம்புள்ள - நாவப்பிட்டி பிரதான வீதியும் பிரதேசத்தின் ஊடாக வரும் பாதையும் சீரான முறையிலும் வாகனங்கள் செல்லக்கூடிய தன்மையிலும் காணப்படுகின்றது. தாவரங்களாக Strobilanthes, Rhododen Dron Arboretum, Cinnamomum

Dubium, Michelia Nilagirica, Osbeckia Octandra, Plectranthus Zeylanicus, மூங்கில் என்பனவும் விலங்குகளாக Leopard, Sambar Deer, Birds – Whistling Thrush, Zosterops Ceylonensis, Yellow – Eared Bulbus, Butterflies, Dragonflies, Damselflies என்பன காணப்படுகின்றன. நீர்வீழ்ச்சியின் அடிப்பகுதியானது நீச்சல் தடாகம் போல் இருப்பதினால் குளியல் நடவடிக்கைகளுக்கு ஏற்ற வகையில் உள்ளது. இதனால் சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய பலத்தை கொண்டு காணப்படுகின்றது. இது மழைக்காலங்களில் மட்டும் வழுக்கும் பாறைகளைக் கொண்டு காணப்படுகின்றது. உட்கட்டமைப்பு வசதிகள் இல்லை. 50m வரையான போக்குவரத்து பாதையானது செப்பனிடப்படாத பாதையாக உள்ளது. இயற்கை சுற்றுலாவுக்கு வாய்ப்பாக உள்ளது. சூழல் நேயமிக்க கபானாக்களை அமைக்கலாம். கேம்பிங் (Camping), ஹைகிங்க்கு (Hiking) தகுந்த இடத்தை கொண்டுள்ளது. நீர்வீழ்ச்சியின் மேற்புறமானது இவற்றை அமைப்பதற்கான வசதி வாய்ப்புகளைக் கொண்டுள்ளது. அச்சுறுத்தலாக மழைக்காலங்களில் அட்டை இனங்களின் செல்வாக்கு காணப்படும். மேலும் பருவகால மாற்றத்தினால் நீர்வீழ்ச்சியின் நீர் கொள்ளளவு குறைவதற்கான அச்சுறுத்தல்கள் உள்ளன.

கலாசார சுற்றுலாவுக்கு வாய்ப்பாக **தலவாக்கலை புகையிரத நிலையம்** காணப்படுகிறது. அந்த வகையில் தலவாக்கலை புகையிரத நிலையமானது ஹட்டனில் இருந்து 16 km யில் உள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து 1840 m உயரத்தில் அமைந்துள்ளது. இந்த புகையிரத நிலையத்தின் நீளமானது 183 m ஆகும். இது பிரித்தானிய காலணித்துவ காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது. அமைவிடமானது கேந்திர நிலையத்தில் இருந்து 1/2 km தூரத்தில் அமைந்துள்ளது. இந்த புகையிரத நிலையத்திலிருந்து மேல்கொத்தமலை நீர்தேக்கத்தின் ஒரு பகுதியை காணக்கூடியதாய் உள்ளது. இது ஒரு முக்கிய மையமாக இருந்தது. கட்டடக்கலை காலனித்துவ வடிவமைப்பின் கூறுகளைக் கொண்டுள்ளது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் ஆண்டு முற்பகுதியிலும் இரயில்வே உருவாக்கப்பட்ட போது கட்டிடப்பட்ட புகையிரத நிலையங்கள் இவ்வாறான பொதுவான பண்புகளைக் கொண்டுள்ளது. அந்த வகையில் ஒற்றை அடுக்கு கட்டிடம் (single-storeyed building), எளிமையான அமைப்பு காணப்படுகின்றது. மாடி கட்டமைப்பு இல்லாமல் சாதாரணமான கட்டிடத் தொகுதியாக இருப்பது மிகப் பெரிய பலமாக உள்ளது. கேபிள் ரூவ் (gabled roof) ஆனது பாரம்பரிய பொருட்களால் செய்யப்பட்ட சாய்வான கேபிள் கூரைகளைக் கொண்டுள்ளது. நிலத்தின் அடித்தளம் கல் மற்றும் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. அதிக காலங்களுக்கு தாக்குப் பிடிக்கக் கூடியதாக இன்று வரையும் காணப்படுகின்றது. இந்த நிலையத்தில் தொடர்ச்சியாக செவ்வக ஜன்னல்கள் உள்ளன. வளைவான

கதவுகள், நேர அட்டவணை பலகைகள் மற்றும் ஏனைய பலகைகள் மரத்தால் உருவாக்கப்பட்டுள்ளன.

அணுகல் தன்மையான போக்குவரத்து வசதி என்கின்ற பொழுது நகரில் அருகாமையில் உள்ளதினால் போக்குவரத்து வசதி சிறப்பான முறையில் உள்ளது. தங்குவதற்கு அங்குள்ள தங்கும் அறைகளை பயன்படுத்தலாம். பலவீனமாக இந்த புகையிரத நிலையமானது பிரித்தானிய காலத்தினால் கட்டப்பட்டதனால் இதில் எவ்வித நவீன அணுகுமுறையும் காணப்படவில்லை. அதிக மழையின் போது வெள்ளம் சிறிதளவு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புகைப்படங்களை காட்சிப்படுத்துவதற்கான இடவசதி வாய்ப்புகள் உள்ளன. அரச கொள்கைகள் மற்றும் திட்டங்கள், ஹோாட்டல் மற்றும் டூர் ஆப்ரேட்டர்களின் ஒத்துழைப்பு, சர்வதேச புகையிரத சுற்றுலா ஊக்குவிப்பு திட்டத்தில் இயற்கையான அழகு கொண்ட இரயில் புகையிரத நிலையங்களை யுனெஸ்கோ நிறுவனம் பாரம்பரிய நிலையமாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான வாய்ப்புகள் மூலம் இதை அபிவிருத்தி செய்யலாம். அச்சுறுத்தலாக திடீர் வானிலை குழப்பம் ஏற்படுவதால் எதிர்வு கூறலை கூறுவதற்கு கடினம். சுற்றுலா பயணங்களில் வருகை அதிகரிக்கும் போது அந்த பழமைத்துவம் குன்றுவதற்கான அச்சுறுத்தல்கள் உள்ளன.

**கொட்டக்கலை புகையிரத நிலையம், வட்டகொட புகையிரத நிலையம், கிரேட் வெஸ்டன் புகையிரத நிலையம் போன்றவற்றிலும்** தலவாக்கலை புகையிரத நிலையத்தில் உள்ள பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல்களையே ஒத்துள்ளது.

**பத்தனை காட்டு மாரியம்மன்** ஆலயமானது ஹட்டன் - நுவரெலியா பிரதான பாதையில் பத்தனைச் சந்தியில் இருந்து 1 km காட்டுப்பகுதிக்குள் பள்ளத்தாக்கை நோக்கி செல்லும் பாதையில் அமைந்திருக்கின்றது. இது டெவன் நீர்வீழ்ச்சியின் அடிப்பகுதியில் அமைந்துள்ளது. இதன் பலம் என்று நோக்குகையில் அமைவிடம். அதாவது ஹட்டன் - நுவரெலியா பிரதான பாதையில் காணப்படுவதினால் அனைவராலும் இலகுவாக அடைந்து கொள்ளலாம். இயற்கையாக உள்ள கற்குகைக்குள் அமைந்துள்ளது. மேலும் நான்கு புறமும் மலைகள், காடுகளைக் கொண்டு உள்ளது. டெவன் நீர்வீழ்ச்சியை கோவிலிலிருந்து பார்க்கும் காட்சி மிகவும் அற்புதமானதாக இருக்கும். அடுத்ததாக கிராமிய வழிபாட்டு முறையைக் கொண்டுள்ளது. காடு வழியாக இருந்தாலும் நடைபாதை சீராக உள்ளது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆலயமாக உள்ளது. ஏனென்றால் ஆரம்ப காலங்களில் இவ்வாலயமானது பழமையான வரலாற்றுக் கதைகளை கொண்டு உள்ளதாக கூறப்படுகின்றது. பலவீனமாக போக்குவரத்து வசதியானது

ஏனையவற்றுக்கு உள்ளவாறு இங்கு காணப்படுவதில்லை. வாகனங்கள் ஆலயத்தின் அருகில் செல்லக்கூடிய வசதி இல்லை. இங்கு உட்கட்டமைப்பு வசதிகள் எதுவும் இல்லை. இயற்கை சுற்றுலாவுக்கு வாய்ப்பாகவும் இருக்கின்றது இயற்கை சூழல்நேயமிக்க விடுதிகள் மற்றும் இயற்கைசார் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது இவ்ஆலயம் அபிவிருத்தி அடைவதோடு டெவன் நீர்வீழ்ச்சியையும் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் அதிகமாக இருக்கும். கேபிள் முறையான போக்குவரத்தை அறிமுகப்படுத்துவதற்கான திட்டங்கள் மற்றும் கொள்கைகள் உள்ளன. குரங்குகளின் செயல்பாடு இப்பகுதியில் அச்சுறுத்தலாக உள்ளது.

**வூட்டன் கோவில். ஹட்டன்** - நுவரெலியா பிரதான பாதையில் அமைந்துள்ளது. கொட்டக்கலை நகரத்தில் வூட்டன் 475 எனும் கிராம சேவகர் பிரிவின்கீழ் அமைந்துள்ளது. இது திராவிட கட்டிடக்கலையை கொண்டுள்ளது. இக்கோவிலமைப்பு இந்தியாவிலுள்ள கேரள மாநில கோயில்களின் அமைப்பைப் போல் காணப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டு இவ்ஆலயம் கட்டப்பட்டது. இங்கே ஆகம முறைப்படியே பூஜைகள் இடம்பெறும். கோபுரத்தை சுற்றியுள்ள சுவர்கள் கண்ணாடியால் வடிவமைக்கப்பட்டுள்ளது. பலத்தில் அமைவிடமானது கொட்டகலை நகரில் இருந்து 0.5m யில் அமைந்துள்ளது. மலைப்பகுதியில் அமைந்துள்ளதால் இக்கோயில் நான்கு திசைகளிலும் தெரியக்கூடியதாக உள்ளது. இயற்கை அழகானது தேயிலை தோட்டங்களை சுற்றி உள்ளது. நவீனவசதிகள், போக்குவரத்துப்பாதை, தங்குமிட வசதிகள், அபிவிருத்தி அடைந்துள்ள தியான மண்டபம், விடுதி, திருமண மண்டபம் போன்ற வசதிகளையும் கொண்டு உள்ளது. இந்த கோயில் முற்றுமுழுதாக இந்திய முறைப்படி உள்ளதால் கலாசார சுற்றுலாவுக்கு ஏற்ற இடமாக உள்ளது. மேலும் இந்திய நிதியுதவித்திட்டங்கள் கிடைக்க வாய்ப்புக்கள் உள்ளன. இங்கு எவ்விதமான அச்சுறுத்தல்களும் காணப்படவில்லை.

**பரி. மாகிறட் தேவாலயமானது** ஹட்டன் - நுவரெலியா பிரதான பாதையில் அமைந்துள்ளது. 475 எனும் கிராம சேவகர் பிரிவின் கீழ் அமைந்துள்ளது. இதன் கட்டடக்கலை பிரித்தானிய கால கட்டிடக் கலையைக் கொண்டுள்ளது. வாகனத் தரிப்பிட வசதியையும் போக்குவரத்து வசதியையும் கொண்டுள்ளது. தங்குமிட வசதிகள் அருகில் விடுதி வசதிகள் காணப்படுகின்றது. கலாசார சுற்றுலாவிற்கு வாய்ப்பாக உள்ளது. ஏனென்றால் இது ஏறத்தாழ 100 வருடத்திற்கு மேல் உள்ளது. கத்தோலிக்க சபைகளில் உதவிகள் கிடைக்கும். அச்சுறுத்தல்கள் எவையும் இல்லை.

ஆய்வு பிரதேசத்தில் சாகச சுற்றுலாவுக்கு ஏற்ற வளவாய்ப்புகளைக் கொண்ட அமைந்துள்ள இடங்கள்; இனங்காணப்பட்டன. அதில் **முதலாவது கொமர்சல் 60அடி புகையிரதப்பாதை**. இது கொமர்சல் எனும் இடத்திலிருந்து 0.5 m தூரத்தில் உள்ளது. தலவாக்கலையில் இருந்து 13முஅ இல் உள்ளது. இந்த பாலமானது கொமர்சலிருந்து கிறிஸ்லஸ் பார்ம் எனும் ஊருக்குச் செல்லும் வழியில் அமையப்பெற்றுள்ளது. இது நிலத்திலிருந்து 60அடி உயரத்தில் காணப்படுகின்றது. ஹட்டன் புகையிரதநிலையம், கொட்டக்கலை புகையிரநிலையம் என்பவற்றுக்கு இடையில் இந்தப்பாலம் அமைந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டுக்கு முன் பொறியியல் நுட்ப முறையை பயன்படுத்தி 1885ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இந்தப் பாலத்தின் இருபுறமும் பயணிகள் நடப்பதற்காக நடைபாதைகள் உள்ளன. இதன் பலம் என்று பார்க்கின்ற போது தாங்கும் திறனை கொண்டுள்ளது. எவ்வாறு என்றால் கீழ்புறமானது கல்லால் அமைக்கப்பட்ட தூண் வடிவிலும் மேலே உறுதியான இரும்பினால் அமைக்கப்பட்ட பாலமாக இப்பகுதியில் இவ்வாறான பாலம் இது மட்டுமே காணப்படுவதினால் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கக்கூடிய பலத்தை கொண்டுள்ளது. பலவீனமாக மழைக்காலங்களில் மட்டும் பயணிகள் நடந்து செல்லும் போதும் வழுக்கும் தன்மையை கொண்டுள்ளது. வாய்ப்பு என்று நோக்குகையில் வரலாற்றுச் சுற்றுலா, சாகச சுற்றுலாவுக்கு வாய்ப்பாக உள்ளது. நுட்பமான பொறியியல் முறை கட்டுமானத்தை பயன்படுத்தி இருப்பதனால் இதன் வரலாறு மிகமுக்கியமாக உள்ளது. இது வரலாற்றுச் சின்னமாகவும் காணப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. சாகச சுற்றுலா என்கின்ற பொழுது நடைபாதையில் திகில் அனுபவத்துடன் நடந்து செல்லலாம். ஸ்வைங்கிங் பிரிட்ஜ் (Swinging Bridge) நடவடிக்கை மேற்கொள்ளலாம். அச்சுறுத்தல் எதுவும் இல்லை.

**கிரேட் வெஸ்டன் மலைத்தொடரானது** தலவாக்கலையிலிருந்து 25 km இல் உள்ளது. இந்த மலைத்தொடரை புகையிர போக்குவரத்தின் ஊடாக இலகுவாக அடைந்துக் கொள்ள முடியும். இந்த மலைத்தொடரின் பலமாக இயற்கை சுற்றுச்சூழலையும் தாவரப் போர்வைகளையும் கொண்டு உள்ளது. காலநிலையானது ஒரே மலையில் வேறுபட்ட தன்மையைக் கொண்டுள்ளது. மலைத்தொடரில் ஏறுவதற்கான போக்குவரத்து பாதையானது காணப்படுகின்றது. இதில் வாகனங்கள் செல்வதற்கான போக்குவரத்து பாதை இல்லாமல் நடந்து செல்வதற்கான ஒற்றையடி பாதைகள் உள்ளன. பலவீனமாக மனிதர்களின் நடவடிக்கை இங்கு குறைந்து காணப்படுவதினால் கீழ்தரையானது வழுக்கும் தன்மையாக காணப்படும். வாய்ப்பாக சாகச சுற்றுலாவுக்கு வாய்ப்பாக இருக்கும் அதாவது ட்ராக்கிங் (Trekking), ஹைக்கிங் (Hiking), மௌண்டைன் க்ளைம்பிங்

(Mountain Climbing) என்பவற்றைக் கூறலாம். சுற்றுச்சூழல் சுற்றுலாவுக்கும் வாய்ப்பாக அமையும். அதாவது இந்த மலைத்தொடரானது இயற்கை மலைத்தொடராக அமைந்திருப்பதினால் இயற்கை வளங்களை இரசித்தல், இயற்கையோடு ஒன்றித்து நடைப்பயணங்களை மேற்கொள்ளுதல், இயற்கை நேயமிக்க விடுதிகளை அமைத்தல் போன்றவற்றை இங்கு மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. காட்டுப்பகுதிக்குள் விசத்தன்மையான பூச்சி இனங்கள் காணப்படுகின்றமை, காலநிலை எதிர்வு கூறல்களை கூற முடியாதுள்ளமை, இயற்கை சூழலானது மாசடைவதல் ஆகியன அச்சுறுத்தல்களாக உள்ளன.

இவ்வாறு SWOT தரவு பகுப்பாய்வின் மூலம் 18 இடங்களின் வளம் மற்றும் வாய்ப்புகள் இணங்காணப்பட்டன. அந்த வகையில் சுற்றுலாத் துறைக்கு போக்குவரத்து வசதியும், தங்குமிட வசதியும் மிக முக்கியமாக உள்ளன. ஆய்வு பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட இடங்களில் SWOT பகுப்பாய்வு மூலம் அதன் பலம் இனங்காணப்பட்டது. அப்பலத்தில் போக்குவரத்து வசதி மற்றும் தங்குமிட வசதி; முக்கியமாக இருக்கின்றது. அவ்வாறே அணுக்கள் சார் பகுப்பாய்வின் வள வாய்ப்புகளைக் கொண்ட புதிய சுற்றுலா தளங்களில் இருந்து எவ்வளவு தூரத்தில் போக்குவரத்து பாதையை அடைந்து கொள்ளலாம் என Buffer Zone மூலம் கண்டறியப்பட்டது. அதாவது Buffer Zone மூலம் குறித்த இடத்தில் இருந்து 500m க்கு இடையில் அத்தளத்தை அடைந்து கொள்ளலாமா? என பகுப்பாய்வு செய்யப்பட்டது. இதன் போது 500 மீற்றருக்கு இடையிலே புதிதாக அடையாளம் காணப்பட்ட இடங்கள் உள்ளன என கண்டறியப்பட்டது. இதன் மூலம் போக்குவரத்து பலமானது இவ்விடத்தில் மேலோங்கி உள்ளது.




விளக்கப்படம் - 4.2
மூலம் :- ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது 2024




விளக்கப்படம் - 4.3
மூலம் :- ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது 2024

தங்குமிட வசதியை Near பகுப்பாய்வு மூலம் இதன் பலம் அடையாளப்படுத்தப்பட்டது. அதாவது அடையாளம் காணப்பட்ட சுற்றுலாத்தளங்களில் இருந்து தங்குமிட வசதிகள் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதை Near பகுப்பாய்வு மூலம் பகுத்தாராயப்பட்டது. இந்த தங்குமிடங்களில் உணவு, நீர்வசதி, மருத்துவவசதிகள் என்பன காணப்படுகின்றன. எனவே இவ்வாறு போக்குவரத்து மற்றும் தங்குமிட அணுகலானது பிரதேசங்களில் அடைவுத்தன்மையை காட்டுகிறது. மேலும் அடையாளம் செய்யப்பட்ட சுற்றுலாத் தளங்களில் இருந்து இப்போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகள் அணுகல் பலமாக உள்ளது என்பதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது.

அட்டவணை – 4.1 தங்குமிடத்திற்கும் புதிய சுற்றுலாத் தலத்திற்கான தூரம்

| இடங்கள் | தங்குமிடத்தின் தூரம் (m) |
|---|---|
| கொமர்சல் ஏரி | 205.33 |
| தலவாக்கலை ஏரி | 513.48 |
| கொமர்சல் 60 அடி புகையிரத பாலம் | 540.37 |
| பத்தன காட்டுமாரியம்மன் கோயில் | 540.64 |
| தலவாக்கலை புகையிரத நிலையம் | 119.13 |
| கொட்டக்கலை புகையிரத நிலையம் | 1697.34 |
| ஹூட்டன் கோயில் | 2001.16 |
| மவுன்வனன் நீர்வீழ்ச்சி | 1789.68 |
| வட்டக்கொட புகையிரத நிலையம் | 2530.26 |
| டிரைட்டன் ஏரி | 2647.80 |
| கொட்டக்கலை சுரங்கம் | 2718.81 |
| திம்புள்ள நீர்வீழ்ச்சி | 3126.30 |
| டயகம ஈஸ்ட் நீர்வீழ்ச்சி | 11078.39 |
| பரி. மாகிறட் கொட்டக்கலை தேவாலயம் | 1717.65 |
| யுடட ளுயiவெள’ தேவாலயம் | 3945.02 |
| டயகம வெஸ்ட் நீச்சல் தடாகம் | 11646.33 |
| கிரேட்வெஸ்டன் மலைத்தொடர் | 4029.51 |
| கிரேட்வெஸ்டன் புகையிரத நிலையம் | 3457.06 |

**நோக்கம் - 03**

### ஆய்வு பிரதேசத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் எதிர்கால சுற்றுலாத்துறைக்கு வாய்ப்பாகவுள்ள புதிய சுற்றுலாத் தளங்களை அடையாளம் காணல்.

இரண்டாவது நோக்கத்தில் அடையாளம் காணப்பட்ட 18 இடங்களில் பலம், வாய்ப்புகள் அதிகமாகவும் பலவீனம், அச்சுறுத்தவர்கள் ஒப்பீட்ட அளவில் குறைவாகவும் உள்ளன. சுற்றுலாவின் பிரதான கட்டளை கூறுகளான போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதி என்பன இவ்விடங்களுக்கு சார்பாக உள்ளதால் எதிர்காலத்தில் இவ்விடங்களை சுற்றுலாத் தளங்களாக மாற்றப்படலாம். அவ்விடங்களில் துல்லியமான அமைவிடங்கள் இவ்நோக்கத்தின் பெறுபேறாக அமைகின்றது. அதாவது நேரடியாக களத்திற்குச் சென்று GPS மூலம் அவ்விடங்கள் அமைந்துள்ள GPS புள்ளிகளானது ArcGIS மூலம் படமாக்கப்பட்டுள்ளன.

தலவாக்கலை பிரதேசசெயலகப் பிரிவின் முக்கிய சிறப்பம்சமாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது. ஏனெனில் இதன் பௌதிக அம்சமான காலநிலை, தரைத்தோற்றம், நீரோட்டம், உயிர்ப்பல்வகைமை, இயற்கைக்காட்சிகள் என்பன சுற்றுலாத்துறைக்கு மிகப்; பிரதான சிறப்பம்சமான காரணிகளாகும். ஆய்வுபிரதேசத்தில் சில சுற்றுலாத் தளங்கள் வினைத்திறனாக செயல்பட்டாலும் இவைகளைத் தவிர சில சுற்றுலாத்தளங்களுக்கு வாய்ப்பான இடங்கள் உள்ளன. இதனை ளுறுழுவு பகுப்பாய்வு மற்றும் இடம்சார் பகுப்பாய்வின் மூலம் சுற்றுலாவுக்கு வாய்ப்பான இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. அந்த வகையில் ளுறுழுவு; பகுப்பாய்வு மூலம் புதிய சுற்றுலா இடங்களுக்கான பலம், பலவீனம், வாய்ப்புகள், அச்சுறுத்தல்கள் இனங்காணப்பட்டன. அதன் மூலமாகவே அணுகல்சார் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது இதனை ஆழமாக அறிய முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறான தரவு பகுப்பாய்வின் மூலம் ஆய்வின் முடிவுகள் பெறப்பட்டன. அவை பின்வருமாறு,

### வினைத்திறனாக செயல்படும் சுற்றுலாத் துறைகள் அடையாளப்படுத்தப்பட்டது

ஆய்வு பிரதேசத்தில் இன்றுவரை சுற்றுலாத்தளமாக இயங்கி வரும் சுற்றுலாத் தளங்கள் படமாக்கப்பட்டது. இதன் மூலம் ஆய்வு பிரதேசத்தில் உள்ள சுற்றுலாத்தளங்கள் இயங்கு நிலையிலேயே இன்றுவரையும் உள்ளது என்பது உறுதியாகின்றது.

**எதிர்கால சுற்றுலாத்தளத்திற்கான வளவாய்ப்புகளை இனங்காணல்**

புதிதாக 18 இடங்கள் எதிர்கால சுற்றுலாத் தளங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அவ்விடங்களிலும் உள்ள பலம், பலவீனம், அச்சுறுத்தல்கள், வளவாய்ப்புகள் என்பன அடையாளம் காணப்பட்டன. இதன் மூலம் எதிர்காலத்தில் அதிக வாய்ப்புகளைக் கொண்டு பல சுற்றுலாத் தளங்கள் இவ் ஆய்வு பிரதேசத்தில் உள்ளது என உறுதியாகின்றது. மேலும் தங்குமிட வசதி, போக்குவரத்து வசதி சுற்றுலாத்துறைக்கான சாத்தியப்பாடாக உள்ளதால் எதிர்காலத்தில் சுற்றுலாத் தளமாக நடைமுறைப்படுத்தலாம். அவை கிராமிய, சாகச, கலாசார சுற்றுலாவாக அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும் இவ்வாறு அடையாளம் காணப்பட்ட இடங்கள் படமாக்கள் மூலம் அவைகளின் துல்லியமான இடம் படங்களாக பெறப்பட்டன. எனவே இவ்வாறான முடிவுகள் ஆய்வின் மூலம் பெறப்பட்டன.

**பரிந்துரைகள்**

**சுற்றுலாவுக்கு வாய்ப்பாக அமைந்த இடத்தில் உள்ள பலவீனம் அச்சுறுத்தல் என்பவற்றை சீர் செய்ய வேண்டும்.**

அடையாளப்படுத்தப்பட்ட புதிய சுற்றுலா இடங்களில் உள்ள பலம், வாய்ப்புகளை வைத்துக்கொண்டு பலவீனம், அச்சுறுத்தல்களை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கொமர்சல் ஏரியில் போக்குவரத்து வசதி பலமாக இருக்கின்றது. இதை வைத்துக்கொண்டு பலவீனமாக உள்ள அபிவிருத்தியின்மையை நீக்கலாம். அதாவது போக்குவரத்து வசதி இருக்குமானால் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்தலாம். அதேபோல அங்கு நகர சபையின் அபிவிருத்தித் திட்டங்கள் வாய்ப்பாக இருக்கும் போது கழிவு முகாமைத்துவத்தை தீவிரப்படுத்தி அச்சுறுத்தலை தடுக்கலாம். பலவீனத்தை அபிவிருத்தி மூலமும் அச்சுறுத்தல்களை சமூக விழிப்புணர்வு மூலமும் குறைத்துக் கொள்ளலாம்.

**கிராமிய சுற்றுலாவை துரிதப்படுத்தல்**

தலவாக்கலை பிரதேசமானது பெருந்தோட்ட தேயிலைச் செய்கையையும் இயற்கை அழகையும் கொண்ட இடமாகும். அந்தவகையில் இங்கு அனேகமாக லயன் குடியிருப்புகளை கொண்ட கிராமங்களே காணப்படுகின்றன. வாழ்க்கை முறை, கலாசாரம், உணவு முறை பற்றி சுற்றுலாத் துறையை துரிதப்படுத்தும் போது சுற்றுலாப் பயணிகளை அதிகம் ஈர்த்துக் கொள்ளலாம். ஆய்வின் மூலம் அடையாளப்படுத்தப்பட்ட கிராமிய சுற்றுலாவுக்கு வாய்ப்பான இடங்களான மவுன்வனன் நீர்வீழ்ச்சி, டிரைட்டன் ஏரி, டயகம வெஸ்ட் நீச்சல் தடாகம் போன்ற இடங்களை எல்ல, ரம்பொட, ஹங்குரங்கெதென்ன, பட்டிபொல, அம்பேவெல

போன்ற சுற்றுலா இடங்களில் உள்ளவாறு கிராமிய சுற்றுலாவை துரிதப்படுத்தலாம். மேலும் தங்குமிடமானது தொலைவில் உள்ள புதிய இடங்களில் கிராமிய சுற்றுலாவை மேம்படுத்தும் போது உள்ளூர் மக்களின் பொருளாதாரம் மற்றும் நிலைதிருப்புத் தன்மை அதிகரிக்கும்.

**உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்**

அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்தும் போது சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிக்கும். பத்தனை அம்மன் கோயில், தலவாக்கலை ஏரி என்பவற்றில் இதை மேற்கொள்ளலாம்.

**விளம்பரப்படுத்தல்**

சுற்றுலாவுக்கு வளவாய்ப்பாக உள்ள இடங்களில் விளம்பரப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அவ்விடங்களைப் பற்றிய வீடியோக்கள், புகைப்படங்கள் என்பவற்றை சமூக வலைத்தளங்களில் பதிவிடும்போது இவ்விடம் பற்றி தெரிந்து கொள்ள முடியும்.

**நீர் சாகச நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டும்**

அடையாளப்படுத்தப்பட்ட கொமர்சல்ஏரி, டிரைட்டன்ஏரி, தலவாக்கலை ஏரிகளில் நீர்சார்ந்த நடவடிக்கைகளை மேம்படுத்தலாம். உதாரணமாக நுவரெலியா Gregory ஏரியில் செயல்படுத்தப்படும் நீர்சார் நடவடிக்கைகளை இவ்வேரியில் செயல்படுத்தும் போது சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிக்கலாம்.

**குறைந்த முதலீடு**

இயற்கை சுற்றுலாவாக காணப்படுவதனால் குறைந்த முதலீட்டில் சுற்றுலாத் தளங்களை துரிதப்படுத்தலாம். ஆய்வு பிரதேசத்தில் உள்ள இடங்களில் 8 இடங்கள் இச்சுற்றுலா சார்ந்ததாகவே உள்ளது. குறித்த பிரதேசத்தில் பல சுற்றுலாத் தளங்கள் ஒன்றாக காணப்படுவதனால் அதற்கான வழிகாட்டல் மற்றும் வரைபடம் வழங்குவதன் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு இலகுவாக சுற்றுலாத் தளங்களை அடைந்து கொள்ள முடியும். இதற்கு பிரதேச செயலகமானது அதிக கவனம் செலுத்த வேண்டும்.

**முடிவுரை**

உலகளாவிய ரீதியில் இன்று சுற்றுலாத்துறை மிகப்பெரிய பங்கை வகிக்கின்றது. அதிலும் தென்னாசிய நாடுகளில் இலங்கை முக்கிய இடத்தில் உள்ளது. இங்கு வளவாய்ப்புகள் இருந்தும் சில சுற்றுலாத் தளங்கள் அடையாளப்படுத்தப்படாமல் உள்ளன. இதை வெளிக்கொண்டு வரும் விதமாகவே இந்த ஆய்வு

மேற்கொள்ளப்பட்டது. இவ்ஆய்வில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுசேகரிப்பு நுட்பமுறை மூலமாக பெறப்பட்ட தரவுகள் SWOT மற்றும் அணுகல்சார் பகுப்பாய்வு முறைகள் மூலம் முடிவுகள் பெறப்பட்டன. வளவாய்ப்புகளில் போக்குவரத்து மற்றும் தங்குமிடம் இங்கு முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆய்வின் முடிவுகள் விளக்கப்படங்கள் மற்றும் விபரண ரீதியாக கொடுக்கப்பட்டுள்ளது. ஆய்வாளரால் சில பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டன. தற்போது சுற்றுலாத்துறையானது அதிக செல்வாக்கை செலுத்துகின்றது. இங்கே வினைத்திறனான வளர்ச்சியடைந்த சுற்றுலாத்தளங்கள் உலக அளவில் பிரசித்தி பெற்றுள்ளன. இருப்பினும் இவ் சுற்றுலாத் தளங்களை விட வளவாய்ப்புக்களை அதிகம் கொண்ட சில இடங்கள் இன்றும் அடையாளப்படுத்தப்படாமல் உள்ளன. இதனால் ஆய்வின் மூலம் அடையாளப்படுத்தப்பட்ட சுற்றுலா இடங்களை எதிர்காலத்தில் சுற்றுலாத்தளமாக மாற்றியமைக்கும் போது ஆய்வு பிரதேசம் பொருளாதாரத்தில் வளர்ச்சியடையும்.

## References

Bandara, S., & Gunasekara, J. (2018). *Assessment of tourism potential in Talawakelle using GPS and SWOT analysis*, *International Journal of Scientific and Research Publications*, 8(11), pp.302–308. https://doi.org/10.29322/IJSRP.8.11.2018.p8360

Fernando, R., & Perera, D. (2018). *Assessment of tourism potential in Nuwara Eliya using GPS and SWOT analysis, Sri Lankan Journal of Tourism and Community Development*, 6(2), pp.150–163.

Gunaratna, P., & Silva, M. (2020). *A GPS and SWOT-based tourism development strategy for Nuwara Eliya*, *Journal of Regional Tourism Studies*, 7(1), pp.95–109.

Jayasekara, M., & Rajapaksha, R. (2021)., *Tourism development strategy for Talawakelle: A GPS and SWOT-based approach*, *International Journal of Tourism and Regional Development*, 5(2), pp.115–127.

UNWTO. (2023). *Tourism highlights: 2023 edition*. *United Nations World Tourism Organization*. https://www.unwto.org

Wickramarathna, L., & Fernando, K. (2017). Assessment of tourism potential in Talawakelle using GPS and SWOT analysis, *Journal of Tourism and Sustainability Studies*, 4(1), pp.88–97.

Sujitha.N & Subajini.U (2014). யாழ்ப்பாண மாவட்ட சுற்றுலாத்துறைக்கான வளவாய்ப்புகளும் சவால்களும், *Jaffna University International Research Conference – 2014*, University of Jaffna. Sri Lanka. pp.431-438.

# இலங்கையின் மத்தியகால சிங்களக் கல்வெட்டுக்களில் தமிழ்ச் சமூகம்

# Tamil Society in Medieval Sinhala Inscriptions in Sri Lanka

Mrs. Chrisdina Nirojini Mosasrupan[6] & Mrs. Gowry Luxmykanthan[7]

***Abstract***

*Tamils are one of the ethnic groups of Sri Lanka. Although archaeological and literary evidence play a leading role in revealing the history of the Tamils, archaeological evidence is a contemporary source. Brahmi inscriptions and Pali literature provide evidence that Tamils have lived in Sri Lanka since the third century BC. Apart from Tamil inscriptions, Sinhala inscriptions also play a significant role in revealing the history of the Tamils. The purpose of this study is to examine the Tamil presence mentioned in medieval Sinhala inscriptions. It can be understood how Tamils were given importance in Sinhala inscriptions based on this. The research question is 'What kind of information is there regarding the role of Tamils in medieval Sinhala inscriptions?' Since this study uses Sinhala inscriptions that have been read and compiled, it can be classified as desk research. This research method is based on historical analysis. This research draws upon Sinhala inscriptions and the Cūḷavaṃsa as primary sources, while relying on other books, scholarly articles, and online materials as secondary sources. The medieval inscriptions of the 10th to 13th centuries have been used in this limited study. Tamil Viharaya, Tamil land, Tamil wage, Tamil officer (Tamilathikari), Tamil forces, and Tamil irrigation have a prominent place in these Sinhala inscriptions. Among these, it can be observed that the figure of the Tamilatikāri held significance in the history of the 10th–13th centuries. An examination of Sri Lankan history during the 10th–13th centuries reveals the significant role played by the Tamils, and it may be concluded that Tamil–Sinhala cooperation existed within the sphere of political history. On other fronts as well, Tamils, like the Sinhalese, played a significant role, which can be demonstrated on the basis of Sinhala inscriptions. These inscriptions are widely found in the north-central, north-western, and eastern regions of Sri Lanka. Based on the locations and contents of these Sinhala inscriptions, it can be affirmed that Tamils inhabited the northern, north-central, north-western, and eastern regions of Sri Lanka during the 10th–13th centuries.*

***Keywords***: *Anuradhapura, Kooli, Sinhala inscriptions, Tamil officer, Polonnaruwa, Viharaya*

## 1. அறிமுகம்

தென்னாசியாவில் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட நாடாக இலங்கை விளங்கியமைக்கு ஏராளமான தொல்லியல், வரலாற்றுச் சான்றுகள் காணப்படுகின்றன. இயக்கர், நாகர் எனும் பூர்வீக மக்கள் குடியிருப்பைக் கொண்ட இலங்கையில் காலப்போக்கில் மொழி, பண்பாடு, சமயம் என்பவற்றில் ஏற்பட்ட மாற்றங்களும், இந்தியர், அரேபியர், ஐரோப்பியர் முதலான வெளிநாட்டவர்களின் வருகையும் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர் எனப்படும் பல்லின சமூகக் கட்டமைப்பை ஏற்படுத்தியிருந்தன. அந்தவகையில் கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதலாக தமிழ் மக்கள் இலங்கையில் வாழ்ந்தமைக்கு பிராமிச்

[6] *Lecturer (Probationary), Department of History, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka,* nirojinic@esn.ac.lk
[7] *Senior Lecturer, Department of History, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka,* gowryl@esn.ac.lk

சாசனங்களும் (மட்பாண்டங்கள், கல்வெட்டுக்கள்) பாளி இலக்கியங்களும் சான்றுகளாக அமைகின்றன. அந்தவகையில் மத்திய காலத்தில் தமிழரின் இருப்பினை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு கட்டமைக்கப்பட்டுள்ளது.

மத்திய கால இலங்கை வரலாற்றைக் கட்டமைப்பதில் சிங்கள, தமிழ் கல்வெட்டுகள், நாணயங்கள் முக்கியம் பெறுகின்றன. வரலாற்று நிகழ்வுகளைக் குறிப்பிடும் இலக்கியங்களில் இடைச்செருகல், கற்பனை, மிகைப்படுத்தல், பக்கச்சார்பு என்பன காணப்படுகின்றமையால் இவற்றிற்கிடையே அவைகளின் உண்மைத் தன்மையை நிருபிக்க சான்றுகள் அவசியமாகின்றன. ஆயினும் கல்வெட்டுக்கள் சமகாலத்து ஆவணங்களாக காணப்படுவதனால் இலக்கியங்களை விட உண்மைத்தன்மை கொண்டது. எனினும் நிஸங்கமல்லனது கல்வெட்டுக்களில் மிகைப்படுத்தல்கள் காணப்படுகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

10-13 ஆம் நூற்றாண்டு கால வரலாற்றில் சோழர் காலமும் (993-1055) உள்ளடக்கப்படுகின்றது. இக்காலப்பகுதியில் அவர்களால் வெளியிடப்பட்ட தமிழ்க் கல்வெட்டுகளில் தமிழர் தொடர்பான அரசியல், பொருளாதார, சமூக, கலாசார விடயங்களை அறிந்துகொள்ள முடிகின்றது. இது தவிர்ந்த ஏனைய காலப்பகுதியில் தமிழர் தொடர்பான விடயங்களை அறிந்து கொள்ள சிங்களக் கல்வெட்டுக்கள் அவசியமாகின்றது. சிங்களக் கல்வெட்டுக்கள் கிடைத்த இடங்களில் தமிழர்கள் வாழ்ந்துள்ளதை உறுதிப்படுத்தலாம்.

### 1.1 ஆய்வின் நோக்கம்

மத்தியகால இலங்கை வரலாற்றில் தமிழ்ச் சமூகத்தின் நிலையை சிங்களக் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படுத்துவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

### 1.2 ஆய்வுப் பிரச்சினை

பிற்காலத்தில் இலங்கை வரலாற்றை கட்டமைத்தோர் தமிழ்ச்சமூகத்தின் வரலாற்றுக்கு அதிகளவு முக்கியத்துவம் வழங்கியிருக்கவில்லை. இது போன்ற காரணிகள் தமிழர்களை இத்தீவின் பூர்வீக மக்களாக நோக்காத சிந்தனைக்கு வித்திட்டது எனலாம். இதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு "மத்தியகால சிங்களக் கல்வெட்டுக்களில் தமிழரின் வகிபங்கு தொடர்பாக எத்தகைய தகவல்கள் உள்ளன?" என்கின்ற ஆய்வு வினாவிற்கு சிங்களக் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு விடை காண்பதாக இவ்வாய்வு கட்டமைக்கப்பட்டுள்ளது.

### 1.3 ஆய்வு முறையியல்

மத்தியகால சிங்களக் கல்வெட்டுக்களிலுள்ள தமிழர் தொடர்பான செய்திகள் பகுப்பாய்வு செய்ய ஏலவே வாசிக்கப்பட்டு தொகுக்கப்பட்ட கல்வெட்டுப் பிரதிகள் பயன்படுத்தப்படுவதால் இதனை மேசை ஆராய்ச்சியாக (Desk Research ) வகைப்படுத்தலாம். ஒரு பொருளின் தோற்றத்தினையும் வளர்ச்சியையும் முறையாக விளக்கும் நோக்கில் கிடைத்துள்ள தகவல்களைப் பயன்படுத்திக்கொண்டு, படிப்படியாக அதன் பழைய நிலையைக் கண்டறிந்து ஆராய்கின்ற வரலாற்று அணுகுமுறை இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கு முதலாம் நிலைத் தரவுகளாக மத்தியகால சிங்களக் கல்வெட்டுக்கள், சூளவம்சம் போன்றவற்றின் மூலம் பெறப்பட்ட தகவல்களும் இரண்டாம் நிலைத் தரவுகளாக Epigraphia Zeylanica, Inscriptions of Ceylon தமிழர் இருப்புத் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகளில் வெளியான கட்டுரைகள், இணையத்தள தகவல்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 1.4 ஆய்வுப் பரப்பும் காலமும்

ஆய்வுப் பரப்பானது இலங்கையின் மத்திய காலத்தை மையப்படுத்தியதாயினும்; ஆய்வுச் சுருக்கம் கருதி மத்திய காலத்துக்குள் உள்ளடக்கப்படுகின்ற 10-13 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தை மையமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. ஏலவே கண்டறியப்பட்டு வெளியிடப்பட்ட சிங்களக் கல்வெட்டுக்களும் சூளவம்சமும் ஆய்வுக்காக பயன்படுத்தப்படுகின்றது. இலங்கை தொல்லியல் திணைக்களத்தினால் ஆவணப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்ட சிங்களக் கல்வெட்டுக்கள் ஆய்வுக்காக பயன்படுத்தப்படுகின்றன. ஆய்வுக் காலப்பகுதிக்குரிய கல்வெட்டுக்கள் வடமத்திய, வடமேற்கு, கிழக்குப் பகுதிகளில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 1.5 ஆய்வின் முக்கியத்துவம்

10 - 13 ஆம் நூற்றாண்டு காலத்தில் இலங்கை வரலாற்றில் மீள்பார்வை செலுத்தி வரலாற்றை மீளக்கட்டியெழுப்புதல் இவ்வாய்வின் முக்கியத்துவமாகும். தமிழர் இருப்பை வெளிக்காட்டும் சிங்களக் கல்வெட்டுக்கள் ஆய்வுக் காலப்பகுதியில் அதிகளவு காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்களில் தமிழ் விகாரை, தமிழர் நிலம், தமிழ்க் கூலி, தமிழதிகாரி, தமிழ்ப் படைகள், தமிழர் நீர்ப்பாசனம் போன்றன முக்கிய வரலாற்றுச் செய்திகளாக இடம்பிடித்துள்ளன. இக்கால அரசியலில் நிலவிய தமிழ், சிங்கள நல்லுறவுத் தன்மையும் ஆய்வில் வெளிப்படுத்தப்படும்.

### 1.6 இலக்கிய மீளாய்வு

சிங்களக் கல்வெட்டுக்கள் தொடர்பாக பல ஆய்வுகள் நடைபெற்றுள்ளபோதிலும் அவற்றில் தமிழர் தொடர்பான ஆய்வுகள் குறைவாகவே காணப்படுகின்றன. ஆரியபாலவின் Society in Mediaeval Ceylon என்ற நூலில் 10-15 ஆம் நூற்றாண்டு கால இலங்கை வரலாற்றின் சமூகநிலை குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலிலுள்ள விடயங்கள் Epigraphia Zeylanica பூஜாவலிய, சத்தர்மரத்னாவலிய, சத்தர்மலங்கார்ய ஆகிய இலக்கியங்களை முன்னிலைப்படுத்தியுள்ளதுடன் தமிழர் தொடர்பான சில விடயங்கள் அவரது நூலில் ஆங்காங்கே இணைக்கப்பட்டுள்ளன.

சோழராட்சி இலங்கையில் மறைந்த பின்னர் தமிழகத்திலிருந்து வந்த படைவீரர்கள், கலைஞர்கள், நிர்வாகிகள், பிராமணர்கள், பல்தொழில் சார்ந்த சமூகப்பிரிவுகள் இலங்கையிலே நிரந்தரமாக குடியேறியதன் விளைவாக தமிழர்களுக்கென ஒரு தமிழரசு உருவாகியதென கா.இந்திரபாலா தனது இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆகவே அது பற்றி ஆராயவேண்டியுள்ளது. மேலும் இலங்கையில் நிலவிய தமிழ் பௌத்தம் தொடர்பான விடயங்கள் ஆய்வுக்கு முன்னோடியாகும். மத்தியகாலக் கல்வெட்டுக்களை கண்டுபிடித்தவர்கள், படியெடுத்தவர்கள் பின்னர் அவற்றை மீள்வாசிப்புக்கு உட்படுத்தியவர்கள் கல்வெட்டில் வருகின்ற விடயங்களை தனித்தனியான பார்வையில் நோக்கியுள்ளனர். 10-13 ஆம் நூற்றாண்டு கால தமிழர் வரலாற்றை தொடர்ச்சியாக எழுதுவதற்கும் ஆராய்வதற்கும் அவற்றை பயன்படுத்தவில்லை. இதனை ஆய்வின் இடைவெளியாகக் கொண்டு அதைப் பூர்த்தி செய்யும் வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## 2. புராதன, மத்திய கால இலங்கை வரலாற்றில் தமிழர்கள்

இலங்கையின் வரலாற்றில் அரசியல், கலாச்சாரம், மொழி, சமயம், வர்த்தகம், சமூக அமைப்புகள் போன்றவற்றில் தமிழர்கள் ஆழமான தாக்கத்தை புராதன, மத்திய காலத்தில் ஏற்படுத்தியுள்ளனர். தமிழர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் புராதன காலம் முதலாக வாழ்ந்து வந்தமைக்கு, தமிழ் பிராமிச் சாசனங்கள் தக்க சான்றுகளாகும். சோழர் ஆட்சி இலங்கையில் நிலவிய காலத்தில் தமிழர்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தனர். எனினும் அவை பற்றி சமகால பாளி நூல்கள் அதிகம் குறிப்பிடவில்லை. சோழர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்கு, வட மத்திய பகுதிகளில் நிர்வாக அமைப்புகளை நிறுவி கோயில்கள் கட்டி சைவ சமயத்தை ஆதரித்தனர். அரச மொழியாக தமிழ்மொழி பயன்படுத்தப்பட்டது. தமிழர்கள் வர்த்தகத்தில் முன்னுரிமை பெற்றிருந்தனர். 13 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்

யாழ்ப்பாண இராச்சியம் தனித்த தமிழ் இராச்சியமாக முக்கியம் பெற்றது. தமிழ் அரசராக இருந்த ஆரியச்சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்தை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்தனர்.

கிழக்கிலங்கையானது சில சமயங்களில் இராசரட்டை இராசதானியுடன் இணைந்திருந்தது. சோழர், கலிங்கமாகோன் ஆட்சிக் காலங்களில் இப்பிராந்தியத்தில் தமிழர் முக்கியம் பெற்றுள்ளனர். கலிங்க மாகோன் தொடர்பான கோமரன்கடவெல கல்வெட்டு இவன் சோழர்களின் ஆதரவோடு படையெடுத்து பொலன்னறுவையை ஆட்சி செய்தவன் என்பது தெரிகின்றது. அதாவது இடைப்பட்ட காலத்திலும் தமிழர் செல்வாக்கு இருந்துள்ளதை இலங்கேஸ்வரர்களது ஆட்சியும் உணர்த்துகின்றது. வடகிழக்கிலங்கையில் இக்காலப்பகுதியில் தென்னிந்திய வணிக குழுக்களின் செல்வாக்கும் நிலவியமை நோக்கத்தக்கது. வடக்கு, கிழக்கு தமிழரின் இன்றைய செறிவு நிலைக்கு மத்தியகாலம் பெரும்பங்காற்றியுள்ளது எனலாம்.

ஒன்பதாம் நூற்றாண்டு சிங்களக் கல்வெட்டுக்களில் தமிழர் தொடர்பான விடயங்களில் தமிழதிகாரிகளும் இடம்பெற்றுள்ளனர். இரண்டாம் சேனன் காலத்துக்குரிய சிகிரியாவிலுள்ள கிபிஸ்ஸ கல்வெட்டில் (கிபிஸ்ஸ-வாவல) திறை செலுத்துவதற்காக சோழ நாட்டின் ஆணையுடன் வருகைதந்த தமிழதிகாரி என்ற குறிப்பு காணப்படுகின்றது (IC V:85,86). ஆயினும் கல்வெட்டு சிதைந்துள்ளமையால் தமிழதிகாரியின் பெயரை அறியமுடியவில்லை. இம்மன்னன் காலத்துக்குரிய அனுராதபுரம் நாச்சதூவக் குளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டிலும் தமிழதிகாரி ஹெலித்தன் தொடர்பான குறிப்புண்டு (IC V:87-89). அனுராதபுர மாவட்டத்தில் தாமரவெவ (துடுவதுலான-தாமரவெவ) எனுமிடத்தில் கிடைத்த கல்வெட்டில் தமிழதிகாரி மகாசாத்தன் பற்றிய குறிப்புண்டு (IC V:83,84).

## 3. மத்தியகால சிங்களக் கல்வெட்டுக்கள் குறிப்பிடும் தமிழ்ச் சமூகம்

### 3.1 அனுராதபுர இராசதானியின் இறுதிப் பகுதி

இலங்கை வரலாற்றில் ஏறத்தாழ 1300 ஆண்டுகள் நிலைத்திருந்த அனுராதபுர இராசதானியின் இறுதி நூற்றாண்டு காலம் சிக்கல்கள் நிறைந்ததாகக் காணப்பட்டது. இவ் இராச்சியம் மௌரிய, இலம்பகர்ண அரச வம்சத்தினரால் மாறி, மாறி ஆட்சி செய்யப்பட்டது. தாதுசேனன் (460-478) முதல் மானவர்மன் (676-711) வரையிலான காலப் பகுதியில் மௌரிய, இலம்பகர்ண வம்சத்திடையே அரசு உரிமை பெறுவதற்கு பெரும் சண்டைகள் நடைபெற்றன. இதன் விளைவாக ஒரே பிரிவினர் தொடர்ந்து ஆட்சி செய்ய முடியாது போனது. அரசாட்சியைப்

பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட போர்களில் இந்திய கூலிப்படைகளும் பயன்படுத்தப்பட்டன. இலங்கையின் அரசியல் வரலாற்றில் தென்னிந்தியரின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியது.

நான்காம் காசியப்ப மன்னனின் (கி.பி 896-913) ஐந்தாம் ஆட்சியாண்டிற்குரிய அயிட்டிகெவாவ தூண் கல்வெட்டில் லொஹொலுவில என்னுமிடத்திலிருந்து தமிழ்ப் பெண்கூலித் தொழிலாளிகள் பராமரிப்புப் பணிக்காக வருகை தந்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது (EZ II:37,38). ஆயினும் இக்கல்வெட்டின் பிரதான நோக்கம் ஒரு நிலத்துக்குரிய கொடுப்பனவு வழங்க படைத்தளபதிக்கு தலைமை அதிகாரியால் கட்டளை இடப்பட்டதை குறிப்பிடுகின்றது. எனினும் கல்வெட்டில் தமிழ் கூலிப் பெண்ணின் செயற்பாடுகள் குறித்து எவ்வித விளக்கமும் இல்லை. கல்வெட்டுச் செய்தியின் அடிப்படையில் பராமரிப்புப் பணியில் ஈடுபட்ட தமிழ் கூலிப் பெண் தொழிலாளிகள் கொடுப்பனவு பெற்றிருந்தனர் எனக் கருதலாம். இம்மன்னன் காலத்து பண்டைய பொலன்னறுவை நகரின் மேற்கு வாசல் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டில் இங்கு வந்த தமிழர் என்ற குறிப்பு காணப்படுகின்றது (IC V, Part I:187-189). ஆனால் கல்வெட்டில் மேலதிக விளக்கங்களை அறியமுடியவில்லை. எனினும் தொழில் நிமித்தம் வருகை தந்தவர்களாக இவர்களைக் கருதமுடியும். சிகிரியாவிலுள்ள மாபாகல, குடாஎல, சிகிரிய போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட இம்மன்னன் காலத்துக்குரிய கல்வெட்டுக்களில் தமிழ் கூலி வரிகளை அறவிடச் செல்லக் கூடாது என்ற செய்தியுண்டு (IC V, Part I:173-179). அனுராதபுரம் சென்னருகம எனும் ஊரில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டிலும் தமிழ் கூலி தொடர்பான செய்தியுண்டு (IC V, Part I:218,219).

ஐந்தாம் காசியப்பன் கால பொலன்னறுவை ரன்கொத் விகாரைக் கல்வெட்டில் பிதர்வட்டு குழிய எனும் கிராமத்திற்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அதைக் கண்காணிப்பதற்கு அதிகாரிகளை நியமித்தல் தொடர்பான செய்திகள் வெளிப்படுத்தப்படுகின்றன. சேனவிரத் பிரிவெனா பள்ளிக்குரிய ரணகம என அழைக்கப்பட்ட நிலம் தமிழர் ஒருவரின் நிலத்திலிருந்து தனியாகப் பிரித்து வைக்கப்பட்ட செய்தியை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது (IC V, Part I:306). இதனூடாக இப்பகுதியில் இருந்த பரந்த நிலப்பகுதி தமிழர்களுக்கு சொந்தமாக இருந்துள்ளமை புலனாகின்றது. இதிலிருந்து ஒரு பகுதியை பௌத்த பள்ளிக்கு பிரித்து எடுத்துள்ளதுடன் பிற்காலத்தில் பிணக்குகள் ஏற்படாமல் இருக்க இவ்விடயத்தை கல்வெட்டில் பொறித்துள்ளதை அறியலாம்.

அதேபோன்று பொலன்னறுவை நிஸ்ஸங்கமல்ல ராஜசபை மண்டபப் பகுதியில் கிடைத்த இம்மன்னனது கல்வெட்டில் அரச சேவையில் இருந்த தமிழர்களுக்காக

ஒதுக்கப்பட்ட நிலங்கள் பற்றிய குறிப்புண்டு. "இந்தக் கிராமத்தில் தமிழரின் நிலங்களில் பிணக்குகள் ஏற்பட்டால் சபையின் தலைவர் அல்லது அவரின் பிள்ளைகள் அதில் தலையிட்டு பிணக்குகளைத் தீர்த்து வைத்தல் வேண்டும்" என்பதாகும். அதாவது இது அரசரின் சேவையில் இருந்த தமிழர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள் எனவும், இந்நிலங்களில் பிணக்குகள் ஏற்பட்டால் அரசனால் நியமிக்கப்பட்டிருக்கும் சபையினரால் இப்பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. தெமழ் கபல்லா (தமிழர் நிலம்) எனும் சொற்பதத்தை தெமலத் வலதெமின், தெமழ் கினிகம் ஆகிய சொற்தொடர்களுடன் ஒப்பிடலாம்;. இது அரசனின் சேவையில் இருந்தவர்களுக்கு வழங்கப்பட்டமையால் ஒன்பது, பத்தாம் நூற்றாண்டு காலப்பகுதியில் அரச சேவைப் பணிகளில் தழிழர்கள் ஈடுபட்டுள்ளதை அறியலாம். ஐந்தாம் காசியப்ப மன்னன் கால கல்வெட்டுக்கள் எதிரிகளின் பயத்தை நீக்கினான் (EZ I:51) என குறிப்பிட்டாலும் எதிரிகள் யார் என்பதைக் குறிப்பிடவில்லை.

நான்காம் உதய (946-954) மன்னனின் பதுளை தூண் கல்வெட்டு, ஹேப்பட்டிகம என்ற சந்தையின் விதிகள், நிர்வாகம் தொடர்பான விடயங்களைப் பதிவு செய்துள்ளது. இக்கல்வெட்டு சோரபொர என்னும் குளக்கட்டின் அருகில் கண்டெடுக்கப்பட்டு தற்போது பதுளை பொது நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஹேப்பற்றிகம என்ற கிராமத்தின் நிர்வாகத்திற்காக இயற்றப்பட்ட சில விதிகளை வெளியிடுவதே இக்கல்வெட்டின் நோக்கமாகும். மஹியங்கனைக்கு விஜயம் செய்தபோது மன்னரிடம் உள்ளூர் நீதிபதிகள் செய்த புகாரின் விளைவாக சில வணிக நிறுவனங்களுக்கு அரசரால் வழங்கப்பட்ட விடயங்கள் கல்வெட்டில் உள்ளன. பத்தாம் நூற்றாண்டு இலங்கையில் விவசாயிகள், வணிகர்களின் வாழ்க்கையைப் பற்றிய சில விடயங்களை வழங்குகின்றன. உள்ளூர் வணிக மற்றும் பிற நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கவும், கொலைகாரர்களைக் கைது செய்யவும், பிற வழிகளில் அரச அதிகாரிகளுக்கு நீதி நிர்வாகத்தில் உதவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதைகயும் காணலாம் (EZ III:74). ஹேப்பட்டிகம வணிகக் கிராமமாக விளங்கியுள்ளதை கல்வெட்டு விளக்குகின்றது (EZ III:75, A, Line 42). இக்கல்வெட்டில் மாவட்ட தலைமைப் பொறுப்பு (Rat-na) தமிழர்களுக்கு வழங்கப்படக்கூடாது எனவும், ஹேப்பட்டிகமவிலுள்ள பெண்களை அவர்களுக்கு திருமணம் செய்து கொடுக்கக்கூடாது போன்ற குறிப்புக்களும் காணப்படுகின்றன (EZ III:80). இப்பகுதியின் தமிழர்களின் தயவை ஏற்றுக்கொண்ட ஒரு பிரபு ஹேப்பட்டிகம கிராமத்திற்கு வந்தால் அவர் அக்கிராமத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார் (EZ V:194) எனவும் இரு வித விளக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறு இருப்பினும் பத்தாம் நூற்றாண்டு கால இலங்கை வரலாற்றில் இப்பகுதிகளில் தமிழர்கள் முக்கியம் பெற்றுள்ளமை புலனாகின்றது.

ஆரியபாலா 'இடைக்காலத்தில் தீவின் வர்த்தகம் இந்துத் தமிழர்களின் கைகளில் இருந்ததாகத் தெரிகிறது' என குறிப்பிடுகின்றார் (Ariyapala, 1968:336).

நான்காம் உதய மன்னனின் அனுராதபுர வேவெல்கெட்டிய கல்வெட்டு அக்காலத்தில் நடைமுறையில் இருந்த சட்டங்கள் பற்றிக் குறிப்பிடும் மிக முக்கிய ஆவணமாகும். இக்கல்வெட்டு மதவாச்சியிலிருந்து ஹொரவபொத்தானைக்கு செல்லும் வீதியில் கஹவல சந்திக்கு அருகில் வேவெல்கெட்டிய குளத்தின் தென்மேற்கு பகுதியிலுள்ள வனப்பகுதியில் காணப்படுகின்றது. அக்கல்வெட்டில் பத்து கிராம நிர்வாகம், குற்ற வழக்குகளைத் தீர்க்கும் சட்டங்கள் விபரிக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் இக்கல்வெட்டின் பிரதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையால் மன்னன் சட்ட திட்டங்களைப் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தான் என அறியமுடிகின்றது. மேலும் இக்கல்வெட்டின் தமிழர் மடாலயங்களை அமைத்து சமயப் பணி செய்துள்ளமை தெரிகின்றது. இது தமிழர் அமைத்த சைவ சமய மடாலயமாக அல்லது பௌத்தப் பள்ளியாக இருந்திருக்கலாம் (IC V, Part I:181,182). இம்மன்னனின் வெஸ்ஸகிரிய (அனுராதபுரம்) கல்வெட்டிலும் தமிழர் மடாலயம் தொடர்பான குறிப்புண்டு (IC V, Part II:199,201).

இம்மன்னன் காலத்துக்குரிய கல்வெட்டுக்கள் மழுவோயா, குமார எல்ல கல்வெட்டுக்களில் தமிழ் விகாரை, தமிழதிகாரி தொடர்பான குறிப்புண்டு. மழுவோயா கல்வெட்டு தம்புள்ள நகரின் கிழக்குப்பக்கமாக ஹெப்பட்டிப்பொல ஊடாகச் மகியங்கனைக்குச் செல்லும் பாதை வழியே மழுவோயா அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது (IC V, Part II:185,186). குமார எல்லக் கல்வெட்டு கிரித்தலை குளத்தின் தென்மேற்கு பக்கத்தில் கிரித்தலை எலஹர வீதியில் பக்கமுன என்னுமிடத்தில் தெற்காக அமைந்துள்ளது (IC V, Part III:40-42). இக்கல்வெட்டுக்களில் வெவல்கட்டிய, வன்னடிபாலம கல்வெட்டுக்களை ஒத்த தன்மை காணப்படுகின்றது. ஆனால் தசம நிர்வாகத்தை பாதுகாக்கும் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளில் ஒருவராக தமிழதிகாரியும் இடம்பெற்றுள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது.

திஹின்னாறு கொட்டசாராவில் (கொட்டியாரம்) உள்ள தமிழ் விகாரைக்கு மன்னரால் வழங்கப்பட்ட சட்டத்தை வன்னடி பாலம (அல்லை-கந்தளாய் வீதி, வண்ணாத்தி பாலம்) கல்வெட்டு எடுத்துக்காட்டுகின்றது. இச்சட்டத்தை அமைக்க அனுப்பப்பட்ட அதிகாரிகளின் பெயர்கள் கல்வெட்டில் காணப்படுகின்றது. இராஜரட்டையின் கிழக்குப் பகுதியில் இத்தமிழ் விகாரை அமைந்துள்ளது. இலங்கையில் நிலவிய தசம நிர்வாக முறையின் முக்கிய அம்சங்களை

எடுத்துரைக்கின்றது. ஒவ்வொரு தசம கிராமத் தலைவர்களின் குத்தகைக்காரர்கள் சிறிய கிராமங்களுக்கு பாதுகாப்பு வழங்கிய தலைவர்களின் குத்தகைக்காரர்கள் குற்றம் செய்தால் இந்த அதிகார எல்லைக்குள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்ட பின்னர் விசாரிக்கப்பட்டு அவை பதிவு செய்யப்பட வேண்டும். மேலும், கொலைகாரர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும். கொள்ளையர்கள் தூக்கிலிடப்பட வேண்டும். மீட்கப்பட்ட சொத்துக்களை உரிமையாளர் மீட்டெடுக்கலாம். இதற்கு மாறாக தசம கிராமத்துப் பெரியவர்கள் குற்றத்தில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்யத் தவறினால் 45 நாட்களுக்குள் கைது செய்து தண்டிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் அவர்கள் 25 பொன் தசம கிராம அரசுக்குச் செலுத்த வேண்டும். கடுமையான காயத்தை ஏற்படுத்துபவர்களிடமிருந்து 50 கஜந்தா தங்கம் வசூலிக்கப்படும். காவலில் வைக்கப்பட்டால் அல்லது 45 நாட்களுக்குள் அவரை கைது செய்ய முடியாவிட்டால் 50 கஜந்தா தங்கம் வசூலிக்கப்படும். ஒரு நபர் குற்றவாளிக்கு உதவி செய்து குற்றவாளியாக கருதப்பட்டால் அரசுக்கு 50 கஜந்தா தங்கம் வழங்க வேண்டும். அவ்வாறு செய்ய சாத்தியமில்லையென்றால் கை, கால் வெட்டி தண்டிக்கப்பட வேண்டும். எருமை, மாடு, ஆடு போன்ற விலங்குகளைக் கொலை செய்பவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும். விலங்குகள் திருடப்பட்டு கண்டறியப்பட்டால் குற்றவாளிக்கு உடலில் முத்திரையிடப்பட வேண்டும். இவ்விதியை மீறினால் இரும்புச் செருப்பில் நிற்கவைக்கப்படுவார்கள்.

பத்து கிராமத்தின் குத்தகைக்காரர்கள் திருவிழா, இறுதிச் சடங்குகளில் போது ஆபரணத்தின் அலங்காரத்துடன் தொடர்புடைய சலுகைகளை மீறாமல் கடைபிடிக்க வேண்டும். தசம கிராமச் சட்டம் இயற்றப்பட்ட திகதிக்குப் பின் வாடகைக்காரர்கள் ஒருவர் புதிதாக வந்திருந்தால் அவர் அனுமதி பெற்ற பின்பு தங்கியிருக்க அனுமதிக்கப்படுவார். முறையற்ற செயலை செய்து வேறு இடத்திலிருந்து யாராவது இங்கு வந்தால் அவருக்கு அனுமதி பெறப்பட்டாலும் அவர் முதல் வாழ்ந்த கிராமத்து பெரியவரிடம் சட்டப்படி திருப்பி அனுப்பப்படுவார். தசம கிராம பெரியவர்கள் தங்களின் கடமைகளின் போது மேற்கூறப்பட்ட விடயங்களை மீறினால் அவர்கள் அரசமாளிகை அதிகாரிகளின் விசாரணையில் பங்கு பற்றி அவர்களது கட்டளைகளை பின்பற்ற வேண்டும். இவ்வாறு தசம கிராம நிர்வாக சட்டப் பொறிப்பு தமிழ் விகாரையில் பொறிக்கப்பட்டுள்ளது. (IC V, Part II: 187 – 190).

இக்கல்வெட்டின் நகல் பிரதியை திருகோணமலையின் கொட்டியாரப்பற்று, கட்டுக்குளப்பற்று ஆகிய பகுதிகளிலும் காணலாம். நான்காம் உதய மன்னனின் இரண்டாம் ஆட்சியாண்டை சேர்ந்த சேதமடைந்த கல்வெட்டொன்று சேருவெல

பகுதியில் (கொட்டியாரப்பற்று) கண்டெடுக்கப்பட்டது. 61 வரிகளைக் கொண்ட இக்கல்வெட்டில் 37-51 வகையான வரிகள் அதிகளவு சேதமடைந்துள்ளன. இக்கல்வெட்டு தமிழ் விகாரை தொடர்பானதாக அமையப் பெற்றுள்ளதுடன் வன்னடி பாலம கல்வெட்டை ஒத்ததாக காணப்படுகின்றது. ஆயினும் இக்கல்வெட்டு ராஜா என்ற சிம்மாசனப் பெயரால் அறிமுகப்படுத்தப்படாமல் 'உடமகாராஜா' என்று தனிப்பட்ட பெயரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது (IC V, Part II: 202 – 204). பெரிய புளியங்குளம் (கட்டுக்குளப்பற்று) நாதனார் கோவிலில் (வேல்கம் விகாரை) இம்மன்னனின் இரண்டாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு காணப்படுகின்றது. இதுவும் அரசாணை நகலின் அறிமுகப் பகுதியாகும். கல்வெட்டில் எட்டு வரிகள் தெளிவாக உள்ளன. மீதம் அழிவடைந்து உள்ளது. மானா வட்டத்திலுள்ள தமிழ் விகாரையின் தசம கிராம நிர்வாகம் தொடர்பான கட்டளையைப் பதிவு செய்கின்றது (IC V, Part II: 209 – 210).

அனுராதபுரத்தின் விலச்சி கோரளையில் அத்தக்கடவள என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இம்மன்னன் காலத்து கல்வெட்டில் தமிழர் கைப்பற்றிய மீபலத (Mipalata) காணி தொடர்பான குறிப்புண்டு. மேலும் கல்வெட்டில் மீபலத, தெலிச (Telisa) எனுமிடங்களிலுள்ள தமிழர் காணிகளுக்கு அதிகாரிகள் செல்லக்கூடாது என குறிப்பிடுகின்றது (IC V, Part III:34,35).

நான்காம் மகிந்த மன்னன் கால கல்வெட்டுக்கள் தமிழர் இருப்பை உறுதி செய்கின்றன. இவன் சமூகத்துக்கு ஆற்றிய பணிகள் வேவெல்கெட்டிய கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் அம்கம்குளியாவில் (Amgam-kuliya) உள்ள கிபிநிலத்தில் (Kibi-nilam) உள்ள தமிழ் மடாலயத்துக்கு வழங்கப்பட்ட நன்கொடைகள் மத்தியில் தசகம (Dasagam) நிர்வாகமுறை பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. தமிழ் மடாலயத்துக்கு வழங்கப்பட்ட கொடைகளிலிருந்து தலைவர்களை பாதுகாத்தல், கொலையாளி, திருடர்களைக் கண்டறிதல் போன்ற விடயங்கள் இடம்பெற்றுள்ளன (EZ I:249). ஒரு பிராந்தியப் பிரிவைக் குறிக்கும் பெயராக குளியா பயன்படுத்தப்படுகிறது. தாக்குதல் நடத்தியவர்கள் ஒளிந்து கொண்டாலோ அல்லது சிறையில் இருந்து தப்பிச் சென்றாலோ, குற்றவாளியைப் பிடிக்க உதவுவது கிராமத்தின் கடமையாகும். மறுபுறம், அவர்கள் அவ்வாறு செய்யத் தவறினாலோ, நடவடிக்கை எடுக்கத் தவறினாலோ, மக்கள் கூட்டாகப் (முழு சமூகமும்) பொறுப்பேற்று அபராதம் விதிக்கப்பட்டதை கல்வெட்டு கூறுகிறது. குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாவிட்டால், தசமத்தில் வசிப்பவர்கள் அவர்களைக் கண்டுபிடித்து நாற்பத்தைந்து நாட்களுக்குள் தண்டிக்க வேண்டும். அவர்கள் அவர்களைக் கண்டுபிடிக்கவில்லை என்றால், தசகம் அரசுக்கு 125 கலன்டாஸ் தங்கம் அபராதம் செலுத்த வேண்டும் (EZ I:250). தசகம் என்பது

மன்னரின் அதிகாரத்திற்கு உட்பட்ட தலைவர்கள், பொறுப்பான வீட்டுக்காரர்களைக் கொண்டு ஒரு பொது நீதிமன்றம் மூலம் நிர்வகிக்கப்பட்டது. இங்குள்ள நீதிமன்றம் ஜனநாயக ரீதியில் செயற்பட்டது. உதாரணமாக, கொலை மற்றும் கொள்ளை வழக்களை விசாரிக்கவும், சட்டத்தை மீறுபவர்களிடமிருந்து பரிந்துரைக்கப்பட்ட அபராதங்களை வசூலிக்கவும், சில சந்தர்ப்பங்களில் மரண தண்டனையை கூட விதிக்கவும் இது அதிகாரம் பெற்றது. ஆங்கில வரலாற்றில் சாக்சன் (Saxon) , நோர்மன் (Norman) காலங்களின் சில நிர்வாக அம்சங்கள் தசம நிர்வாக முறையில் வெளிப்படுகின்றது.

குறிப்பிட்ட சில கிராமங்களுக்கு மானியங்கள் வழங்கும் பொருட்டு சில அதிகாரிகளுக்கு அரசனால் விடுக்கப்பட்ட கட்டளைக் கல்வெட்டில் (அனுராதபுரம் தொல்பொருட்காட்சியகம்) தமிழ்க் கிராமங்களில் உள்ளவர்கள் மானியங்கள் வழங்கப்பட்ட கிராமங்களுக்கு வரக்கூடாது எனவும் அங்குள்ள கூலிகளைக் கூட்டிக் கொண்டு செல்லக்கூடாது எனவும் கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு அனுராதபுரத்தின் கிழக்கு கனாவெவ எனும் குளத்திலிருந்து வழங்கப்படும் நீர் அத்வெஹெர எனும் விகாரைக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிடுவதுடன் இது பண்டைய பழக்கவழக்கங்களின் படி தமிழர் ஆட்சி செய்த காலத்தில் இது நடைமுறையில் இருந்தது என மிகிந்தலைக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது (EZ I:97,112,113). இக்கல்வெட்டுத் தகவலின்படி பத்தாம் நூற்றாண்டு கால நீர்ப்பாசனச் செயற்பாடுகளில் தமிழருக்கு இருந்த முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது. அதாவது முன்பு தமிழர்கள் ஆட்சி செய்த காலத்தில் அவர்கள் கட்டிய கோயில்களை மட்டும் பராமரிப்பதோடு நின்றுவிடாமல் மிகுந்தலையிலுள்ள விகாரைகளுக்கும் குளத்திலிருந்து கிடைக்கும் நீரை உரிய முறையில் பங்கிட்டு அவற்றை சரியான முறையில் பராமரிக்கவும் உதவியுள்ளார்கள்.

அனுராதபுரத்திலுள்ள தூபராம தூபியின் கிழக்கிலுள்ள கல் தோணி என்றழைக்கப்படும் இடத்திலுள்ள நான்காம் மகிந்த மன்னனின் கல்வெட்டில் தமிழ்க் கிராமங்கள் மற்றும் நான்கு திசைகளிலும் அமைந்துள்ள காணிகளில் இருக்கும் மரங்கள் மற்றும் புதர்களின் விளைவுகள் முந்தைய வழக்கத்தின்படி தலதாமாளிகையின் பாராமரிப்புக்காக ஒதுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது (EZ I:118-120). இதற்கு அருகாமையிலுள்ள ஜேத்தவனராம கல்வெட்டில் தமிழ் விகாரை பற்றிய குறிப்புண்டு (EZ I:221). இதன்படி தமிழர் கிராமங்கள், காணிகளில் அறவிடப்படும் வரிகள் தலதாமாளிகையின் பராமரிப்பு செலவுக்கு ஒதுக்கப்பட்டது எனக் கருதலாம்.

ஜோத அலயின் வலது கரையில் அமைந்துள்ள ரம்பாவை கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டில் (அனுராதபுரம்) தமிழ்க் கூலி தொடர்பான குறிப்புண்டு (EZ I:174). இக்கல்வெட்டுக் குறிப்பிடும் அபயசாலமேவன், இரண்டாம் சேனனுக்கும் ஐந்தாம் காசியப்பருக்கும் இடையில் ஆட்சி செய்த இரண்டு மன்னர்களில் ஒருவராக இருக்கலாம் எனக்கருதப்படுகின்றது. அதாவது முதலாம் உதய (952-963) அல்லது நான்காம் காசியப்ப (963-980) எனக் கருதலாம் (EZ I:165,166). பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த ரம்பாவைக் கல்வெட்டில் மகாவிஹாரத்தில் தலைமைத் தளபதி குத்தாவால் கட்டப்பட்ட சென்-செனெவிரத்-பிரிவெனா (Sen-Senevirad-pirivena) மடத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட காலிந்துரு கோமண்ட்லாவில் (Galinuru Gomandla) உள்ள நான்கு வயல்களின் விதைப்பு அளவு நிலத்தை வரையறுத்து அறிவிக்கப்பட்டுள்ள அரச உத்தரவுச் செய்தியில் தமிழ்க் கூலிகள் நுழையக்கூடாதென குறிப்பிடப்பட்டுள்ளது (EZ I:175). பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரிபின்னியாவ கல்வெட்டில் (அனுராதபுரம்) சுலின்னாறு கிராமத்திலுள்ள போசோனவுல்லா (Posonavulla in Sulinnaru) சென்-செனிவிரத்-பிரிவேனாவிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. இது தலைமைத் தளபதி குத்தாவால் மகாவிகாரத்தில் கட்டப்பட்ட மடத்திற்கு வழங்கப்பட்ட சலுகைகள் அதிகரிக்கப்பட வேண்டுமென குறிப்பிடுவதுடன் பகுதிக்குள் போசோனவுல்லா தமிழ்க் கூலிகள் நுழையக்கூடாதென குறிப்பிடப்பட்டுள்ளது (EZ I:168-170).

இம்மன்னனின் அரசமாளிகைக் கல்வெட்டு முதலாம் பராக்கிரமபாகுவின் அரண்மனை வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்டு தற்போது அனுராதபுரம் தொல்பொருட்சாலையில் உள்ளது. இது கிழக்குப் பகுதியிலுள்ள கினிகம என்னும் கிராமத்திலுள்ள தமிழ் மடாலயத்துக்கு அரசினால் விதிக்கப்பட்ட விலக்குகளைப் பதிவு செய்கின்றது (EZ II:52-56). தமிழ் கிராமங்களில் உள்ளவர்கள் மானியங்கள் வழங்கப்பட்ட கிராமங்களுக்கு வரக்கூடாது எனவும் அங்குள்ள கூலிகளை அழைத்துச் செல்லக்கூடாது எனக் கூறுகின்றது.

நான்காம் மகிந்தவின் (956-972) கல்வெட்டுக்கள் பொதுவாக வளமான லங்காவை பல்வேறு நாடுகளிலிருந்து வந்த பல்வேறு தோற்றங்களைக் கொண்ட பல்வேறு மக்களுக்கு ஒரு பொதுவான இடமாக மாற்றினார் என்று அறிவிக்கிறது. இம்மன்னனின் ஜேதவனராம விகாரைக் கல்வெட்டில் 'உதய சூரியன் வானத்தில் இருந்து இருளை அகற்றுவது போல இலங்கையில் இருந்து மன்னன் திராவிட எதிரிகளை விரட்டியடித்தான்' என கூறப்பட்டுள்ளது (EZ I:215). இதனூடாக தமிழ்ப்படைகள் சமகாலத்தில் காணப்பட்டதோடு அரசுக்கு சவால் கொடுப்பதாகவும் அமைந்திருந்ததை அறியலாம்.

பொலன்னறுவையில் காணப்படும் 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்களில் கோத்தகம (Kotthagama) அல்லது கோட்டநகர (Kotanagara) தொடர்பான குறிப்புக்களைக் காணலாம். பொலன்னறுவை கவுன்சில் சாம்மர் கல்வெட்டில் நிலத்தை குத்தகையை பரம்பரையாக அனுபவிக்கும் உரிமம் கொட்டியாரப்பற்று தமிழருக்கு வழங்கப்பட்டதை பதிவு செய்கின்றது (EZ IV:44). மகாவலிகங்கையின் கிழக்கு மற்றும் மேற்காக பரந்து விரிந்த ஒரு கணிசமான பகுதியாக இருந்த கிரிவதுன்ன-தனவியா மாகாணத்தில் சில இடங்களைக் குறிப்பிடுகிறது (EZ IV:39). தமிழ் கபல்லாவிலிருந்து தமிழர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களாக இவை இருக்கலாம்.

பத்தாம் நூற்றாண்டுக்குரிய பொலன்னறுவை கிரிதலே தூண் கல்வெட்டில் தெமெலாகபல்லா என்பது தமிழர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு கிராமத்தில் நில ஒதுக்கீடாகும் என்பது தெளிவாகிறது (EZ III:140). இது தமிழர் நிலம் கிழக்குப் பகுதியில் இருந்துள்ளதை குறிப்பிடுகின்றது. அநேகமாக மன்னனின் சேவையில் இருந்தவர்களுக்கு இந்நிலங்கள் பரிசாக வழங்கப்பட்டதென கிரித்தலை கல்வெட்டு குறிப்பிடுகின்றது (EZ III:143). இதுபோன்று தமிழர்களுக்காக ஒதுக்கப்பட்ட தமிழ் கபல்லா நிலங்கள் இருந்ததை பொலன்னறுவை இராஜசபை, கொழும்பு அருங்காட்சியக கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இக்கல்வெட்டில் இடம்பெறும் உல்வாடு பெரினாட்டியம் (Ulvadu perenattiyam) (EZ III:139, C, Line 8,9) என்பதை பேராசிரியர் பரணவிதான மேல்வருமாறு கருதுகின்றார். 'தமிழ் மொழியிலுள்ள உல்பாடன் (Ulpadan) போலவே இருப்பதாக பரிந்துரைக்கின்றார். மேலும் இது தென்னிந்திய கல்வெட்டுகளிலிருந்து ஒரு கோயில் அதிகாரியின் பெயராகத் தெரிகிறது. உல்வாடு என்ற சொல் பதுளைத் தூண் கல்வெட்டிலும் காணப்படுகிறது. வரி விலக்கு மானியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உல்வாடு அரச அதிகாரிகளாக இருக்க வேண்டும். இந்தியாவிலும் இலங்கையிலும் மன்னரின் அரண்மனை, கோயில், சடங்குகள் ஒன்றுக்கொன்று ஒத்திருந்தன என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். கோயில் அதிகாரிகளில் சிலர் இதே போன்ற செயற்பாடுகளைச் செய்ய அரச அரண்மனையின் அதே பதவியைக் கொண்டிருந்திருக்க வேண்டும்' (EZ III:144). உல்வாடு என்பது அரச அதிகாரிகளாக இருக்க வேண்டுமே தவிர கோயில் ஊழியர்கள் அல்ல என்பதை ஆவணங்கள் வெளிப்படுத்துகின்றன.

கொழும்பு அருங்காட்சியகத்தில் உள்ள தூண் கல்வெட்டில் தமிழ் உயர் அதிகாரி (Demela Adhika Utur Pandiradun) ஒருவர் நியமிக்கப்பட்டமை பற்றி குறிப்பிடப்படுகின்றது (EZ III:274, Line C,8-11). இக்கல்வெட்டின் தமிழ் அதிகாரிக்கு 'உதூர் பாண்டிராட்' என்ற பெயர் இருந்தது. இந்தப் பெயரிலுள்ள பாண்டிராட்

(பாண்டிய மன்னர்) என்பது ஒரு விருதுப் பட்டமாகும். அதே விருதை நான்காம் காசியப்பனின் மெய்க்காப்பாளரின் தளபதியான தபுல்லா வைத்திருந்ததை கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. ஆகவே இவ்விருதை வைத்திருப்பவர்கள் பாண்டிய அரச குடும்பத்துடன் தொடர்புடையவர்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை என்பதும் உணர்த்தப்படுகின்றது. நான்காம் காசியப்பனின் மற்றொரு அமைச்சர் சோழராஜா (சோழ மன்னர்) என்ற பட்டத்தால் அறியப்பட்டதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. தென்னிந்தியாவின் சோழ, பாண்டிய கல்வெட்டுகளில் நிலப்பிரபுக்கள் கலிங்கராயர் (கலிங்க மன்னர்), ஈழத்தரையர் (இலங்கை) போன்ற விருதுகளைக் கொண்டிருந்ததற்கான பல உதாரணங்களுள்ளன. இக்கல்வெட்டுக் குறிப்பிடும் தமிழ் உயர் அதிகாரி வடபகுதியை நிர்வகிப்பவர் என உறுதியாகக் கூறலாம். ஏனெனில் கல்வெட்டில் ஆறு அதிகாரிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் இருவர் அரசனின் தளபதிகளாகவும் வேறு இருவர் பிரிட்டிரட்டை எனும் பிரதேசத்தின் முதன்மை அதிகாரிகளாகவும் மற்றையவர் தலைமை அதிகாரிக்கு உதவிசெய்பவராகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வரிசையில் ஆறாவது அதிகாரி உத்தர பாண்டி ரட்டை பிரதேசத்தின் தமிழ் அதிகாரியாவார். இத்தமிழதிகாரியை நிலப்பிரபுத்துவத்துடன் தொடர்புடையவராகக் கருதலாம்.

ஐந்தாம்; மகிந்தன் தமிழ் எதிரிகளால் இருள் மயமாகி இருந்த இலங்கையை ஒளி பெறச்செய்த மன்னன் என பொலன்னறுவை கிரி விகாரைக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது (IC V, Part I:187,189). மேலும் இக்கல்வெட்டில் தமிழ் கூலி தொடர்பான சொற்தொடர் காணப்படுகின்றது. இதனூடாக அரசுக்கு சவால் கொடுப்பதாக தமிழ்ப்படைகள் இருந்துள்ளமை புலனாகின்றது.

3.2 பொலன்னறுவை இராசதானி காலக் கல்வெட்டுக்களில் தமிழர்

அனுராதபுர இராச்சியத்தின் வீழ்ச்சிக்குப் பின்பு பொலன்னறுவை வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு ஆட்சியாளர்களால் ஆளப்பட்டது. சோழ வம்ச ஆட்சி முடிவுறுத்தப்பட்ட பின்னர் விஜயபாகு, கலிங்க, பாண்டிய வம்ச ஆட்சியாளர்கள் ஆட்சி செய்துள்ளனர். சோழர் காலத்தில் இலங்கையில் தமிழ் மொழி அரச மொழியாக செல்வாக்குப் பெற்றதுடன் தமிழர் நிர்வாகத்தில் முக்கியம் பெற்றனர். இதனைத் தொடர்ந்து சிங்கள வம்ச ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. முதலாம் விஜயபாகு (1055-1111) முதலாக கலிங்க மாகோன் (1215-1232) வரை இவ்வாட்சி நடைபெற்றது.

விஜயபாகு சோழர் ஆட்சியில் இருந்து (1017-1070) பொலன்னறுவையைக் கைப்பற்றியமை அவரால் மேற்கொள்ளப்பட்ட பிரதான அரசியல் சேவையாகும்.

பானாகடுவ செப்பேட்டில் (1085) தமிழர்களால் (சோழர்கள்) ஏற்பட்ட பேரழிவின் விளைவாக சொந்த இராச்சியத்தை இழந்து மலைக்காடுகளில் மறைந்திருந்தோம் என்ற குறிப்பைக் காணலாம். மேலும் இவரது நிர்வாகத்திலுள்ள தமிழ் எழுத்தாளர்களைப் பற்றியும் 'விஜயபாகு தனது சொந்தப் பலத்தால் தமிழ் படை வீரர்கள் உண்டாக்கிய இருளை அகற்றி இலங்கை முழுவதையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவந்தான்' என்ற குறிப்பும் இதில் காணப்படுகின்றது (EZ V:11-27). அதேபோல பொலன்னறுவை வேளைக்காரர் கல்வெட்டில் தந்ததாது வைக்கப்பட்டிருந்த தலதாவின் பாதுகாப்பிற்காக வேளைக்காரர் எனப்படும் காவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தமை பற்றிக் குறிப்புள்ளது. அம்பகமுவ பாறைக் கல்வெட்டில் தமிழ்ப் படைகளை விரட்டி தீவு முழுவதையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவந்து 38 ஆண்டுகள் அரசாண்டான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (EZ II:216, Line 22-27).

பொலன்னறுவை மன்னம்பிட்டி சந்திக்கு தெற்காக அமைந்துள்ள திம்புலாகல பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட திம்புலாகல மாறாவீதிப் பாறைக் கல்வெட்டில் தமிழர் பாசடா தொடர்பான குறிப்புண்டு. சுந்தரமாதேவி எனும் எங்களால் தமிழர் பாசடாவில் செய்யப்பட்ட புனித பாத்திரம் இவ்வுலகம் இருக்கும் வரை மடாலயத்தில் உள்ளவர்க்கு ஆகாரம் (சோறு, கூழ்) வழங்க வேண்டுமென்கிறது (EZ II:196).

முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் கால சூளவம்சக் குறிப்புக்களில் கன்னோசியர்கள், கேரளர்கள், தமிழர்கள் போன்ற பெயர்கள் இடம்பெற்றுள்ளன. பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை தமிழர்கள் பெற்றுள்ளனர். உள்நாட்டுப் போர்களில் மேற்குக் கரையில் தாக்குதல் நடத்திய தளபதி மலையராயன், தெற்கில் சுகலா அரசிக்கு எதிராக படை நகர்த்தியவன் தமிழதிகாரி ரக்கா (CV 75:20,69), பர்மிய நாட்டுக்கு எதிரான படையெடுப்பில் தமிழதிகாரி ஆதிச்சன் (CV 76:39) என்பவரும் ஈடுபட்டதை சூளவம்சம் காட்டுகின்றது. தெவனகலக் கல்வெட்டில் இப்படையெடுப்பில் தலைமைதாங்கிய கீர்த்தி என்பவருக்கு பரிசாக வழங்கப்பட்ட நில தானங்கள் (நீகரகிரி கிர்த்தில்) பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. குசுமியத்துறை தாக்கப்பட்டதையும், பர்மிய தூதுவர்கள் உடன்படிக்கை செய்ய இலங்கை வந்ததையும் இக்கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது (EZ III:325). பராக்கிரமபாகு தெமலமகாசாயாவை கட்டினான் என சூளவம்சம் குறிப்பிடுகின்றது (CV, 78:81). ஏனெனில் பாண்டிய நாட்டிலிருந்து போர்க் கைதிகளாகக் கொண்டுவரப்பட்ட தமிழர்களே அதைக் கட்டுவதற்காக பணியமர்த்தப்பட்டனர் (EZ II:189)

மத்திய கால கல்வெட்டுகளில் வரும் அதிகாரன் என்ற பதவி தமிழில் அதிகாரியைக் குறிக்கின்றது. இந்தப் பட்டப்பெயர் சூளவம்சத்திலும் இடம்பெற்றுள்ளது. கெய்கர் இச்சொல் ஒரு அதிகாரிக்கான பொதுவான சொல்லா அல்லது அது கண்டிப்பாக வரையறுக்கப்பட்ட செயல்பாட்டுடன் தொடர்புடையதா என்பதைத் தீர்மானிப்பது எளிதானது அல்ல என குறிப்பிடுகின்றார். இதற்கு உதாரணமாக, அதிகாரன் மற்றும் ஆதிந்த்யகா (அதிந்த்தா) (Adhindyaka (Adhindtha)) ஆகியவற்றை குறிப்பிடுகிறார் (Ariyapala 1968:110). ஆயினும் பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த நான்காம் புவனேகபாகுவின் கடலாதேனிய பாறைக் கல்வெட்டில் 'அதிகார செனவிரத் அர்த்தநாயக்கா' (Adhikara senevirat artthanayaka) எனக் உள்ளது (EZ IV:103, Line 7). மேலும் அதிகார என்ற வார்த்தை இந்தச் சூழலில் பரணவிதானவால் 'அரச அதிகாரிகள்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் லங்காதீவில் ஒரு கற்சிலை வீட்டை அமைப்பதற்காக மன்னர்கள், துணை மன்னர்கள், அரசு அதிகாரிகள், படைத் தளபதிகள், நீதிபதிகள், தலைவர்கள், எழுத்தாளர்கள், சத்திரியர்கள், பிராமணர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் போன்ற உயர் மற்றும் தாழ்ந்த மக்கள், சிங்களவர்கள், தமிழர்கள் அடங்கிய படைகள் உருவாக்கப்பட்டது. சுமார் ஒரு இலட்சம் பணம், முந்நூறு யால நெல் ஆகியவற்றைக் கொடுத்து சிங்குருவாணாவின் இரண்டு நகரங்களுக்கு இடையில் உள்ள 'திக்லா' என்ற தட்டையான பாறையின் பரப்பளவில் இதனைக் கட்டிய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. மடத்திற்கு அடிமைகளை (Vahal) வழங்கியதையும் பதிவு செய்கிறது (EZ IV:107). இதற்கு அர்ப்பணிக்கப்பட்ட நிலங்கள் மற்றும் சேவகர்களின் பட்டியலையும் நமக்கு வழங்குகிறது. இந்த அடிமைகளின் சில பெயர்கள் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவையாகும். லங்கா, தமிழ் அதிகாரி ஆகிய பட்டங்கள் தம்பதேனியா காலத்தில் பயன்படுத்தப்பட்டதை சத்தர்மரத்னாவலிய நூல் கூறுகின்றது (Ariyapala 1968:111, 112).

நிஸங்கமல்லனின் பொலன்னறுவைக் கல்வெட்டு தமிழர் மீது வெற்றி பெற்று, சோழர்களைப் பணியாளர்களாக்கினேன் என்று குறிப்பிட்டுகின்றது. பொலன்னறுவை வடக்கு வாசல், கல்பொத்த கல்வெட்டுக்களில் "புத்தரின் மதத்தைச் சேர்ந்த இலங்கைத் தீவில், பிற நாடுகளைச் சேர்ந்த புத்த மதத்தைச் சேராத இளவரசர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடாது. அவர்களுடன் சேர்ந்து குழப்பம் விளைவிப்பவர்கள் துரோகிகள் என்று அழைக்கப்படுவார்கள்." என குறிப்பிடப்பட்டுள்ளது (EZ II:122,164).

நிஸங்கமல்லன் மனைவி கல்யாணவதியின் (1202-1208) ஆட்சியில் நடைபெற்ற தமிழ் படையெடுப்பே அவ்வரசியின் ஆட்சி இழப்புக்கு காரணமானது. கல்யாணவதியின் ஆட்சி முடிவுக்கு வழிவகுத்த வரலாற்று நிகழ்வுகளில்

தம்மாசோகர் வருகையை மட்டுமே சூளவம்சம், பூஜாவலியா நூல்கள் பதிவு செய்கின்றன. இருப்பினும், ராணியின் ஆட்சி முடிவுக்கு வழிவகுத்த நிகழ்வுகளை வெளிப்படுத்தும் இரண்டு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவற்றில் போபிட்டியக் கல்வெட்டிலே தமிழ் கிளர்ச்சியின் போது ராணியின் கோட்டை உடைக்கப்பட்டதால் அவள் தோளில் சுமந்து செல்லப்பட்ட நிகழ்வு கூறப்பட்டுள்ளது (EZ II:192). மினிப்பேக் கல்வெட்டு ராணி கல்யாணவதியின் எட்டாவது ஆண்டில் தமிழர்கள் இலங்கை மீது படையெடுத்து தளபதி ஆதியைக் கொன்றதாக கூறுகின்றது (EZ V:151, 159). கல்யாணவதி ஆறு மாதங்கள் ஆட்சி செய்ததாக சூளவம்சமும் ஆறு ஆண்டுகள் என பூஜாவலியவும் கூறுகின்றன. மினிப்பே கல்வெட்டு ராணியின் ஆட்சியின் எட்டாவது ஆண்டைக் குறிப்பிடுகின்றது. கல்வெட்டுச் சான்றைக் கருத்திற் கொண்டால் சூளவம்சத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஆறு மாதங்கள் ஆட்சி செய்தாள் என்ற கருத்து பொய்யானதாகும். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு பொலன்னறுவையில் ராணி கல்யாணவதி ஆட்சியானது நிறைவடைந்திருந்தாலும், அவர் பிற்காலத்திலும் உயிருடன் இருந்திருக்கலாம் என்றும், சில பகுதிகளில் சட்டப்பூர்வமான ஆட்சியாளராகக் கருதப்பட்டிருக்கலாம் என்றும் பேராசிரியர் பரணவிதான குறிப்பிடுகின்றார்.

சோழர்களை அப்புறப்படுத்துவதில் லோகே அரக்மேனா (Loke Arakmena) காட்டிய வீரத்திற்காக ஒரு பமுனு நிலம் ஸ்ரீசங்கபோ லோகேஸ்வரபாகுவால் வழங்கப்பட்டதாக கோட்டாங்கேயில் உள்ள 13 ஆம் நூற்றாண்டின் பாறைக் கல்வெட்டு கூறுகின்றது (EZ IV:88).

இலங்கையில் இந்து மத வழிபாட்டு முறைகள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த மக்களால் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். இங்குள்ள மக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி இந்து, பிராமணிய சடங்குகளை ஏற்றுக் கொண்டுள்ளனர் (Ariyapala 1968:182). முதலாம் பராக்கிரமபாகு தனக்குச் செய்த மதிப்புமிக்க சேவைகளுக்காக இரண்டு பிராமணர்களுக்கு சில நிலங்களை வழங்கி மகிழ்ச்சியடைந்ததை கல்வெட்டு குறிப்பிடுகின்றது (EZ III:68). பளமோட்டையில் கிடைத்த தமிழ் கல்வெட்டில் ஒரு பிராமணப் பெண் நங்கைச்சானி தனது கணவரின் நினைவாக சிவனுக்கு அளித்த நன்கொடைகளைப் பதிவு செய்கிறது (EZ IV:195). உரோகணத்தைச் சேர்ந்த ஒரு சைவ பூசகரின் (Sivaite paribbajaka) கதையை சத்தர்மலங்காரய (Saddharmalamkaraya) விவரிக்கின்றது (Ariyapala 1968:185).

### 3.3 இடம்பெயர்வு இராசதானி கால தமிழ்ச் சமூகம்

பொலன்னறுவை இராச்சியத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து மூன்றாம் விஜயபாகு (1232-1236) மன்னன் தம்பதெனியாவைத் தலைநகரமாக்கினான். அக்காலத்திற்குரிய கோயில் அடிமைகளின் பட்டியலைக் கொடுக்கும் முக்கிய சிங்கள கல்வெட்டுக்களில் ஒன்று இரண்டாம் பராக்கிரமபாகு காலத்தை சேர்ந்த கலபத (Galapata) கல்வெட்டாகும். பரம்பரையாகவும், பெறுமதிமிக்க தங்கம் முதலானவை செலுத்தி வாங்கிய அடிமைகளும் விகாரையில் வசிக்கும் பிரபுக்களுக்கும் துறவிகளுக்கும் சேவைகளைச் செய்வதற்காக பயன்படுத்தப்பட்டனர். இந்த அடிமைகளின் பெயர்களில் சில தமிழ்ப் பெயர்களாகும். ஆனால் இன்று சிங்கள மக்களின் பெயர்களை நன்கு அறிந்த எவரும் இத்தமிழ் பெயர்களைத் தாங்கியவர்கள் தேசிய அடிப்படையில் தமிழர்கள் என்று கருத மாட்டார்கள் என பெல் (Bell) குறிப்பிடுகிறார் (EZ IV:201). இதில் கோண்டா போகந்த, அவரது தாயார் உபா, அவரது தங்கை மிண்டி, அவரது தந்தை உயவந்தா, அவரது தம்பி கெட்காமி லோகேயி, அவரது தம்பி பொன்வாணி மிண்டா, அவரது தம்பி ரகு, அவரது தம்பி சுவர் மிண்டல்-காமியா...ராயா, அவரது மகள் கோதாலி தேவா... நட்டா, அவரது மூத்த சகோதரர் போரண மணியா, அவரது இளைய சகோதரர் போரானா புடு, தாமி தேவா, அவரது மகன்; கோதலி, ஹெலிலி, ரகஹாலா, சிகிலியா அவரது மகள் சாதியா, அவரது மகன் கரடி... அவரது தங்கை செல்லியா கோதலி... அவரது மகள்... கலி ராகா, மணியாவின் மகள் சுவா கோதாலிய, சேனான் கொட்டிய, அவரது மகள் கொட்டிய, அவரது தங்கை ராகா, அவரது தம்பி...... அவரது மனைவி மிண்டி, அவரது தந்தை.. நட்டு.. லி தேவா, அவரது மகன் மத்தலா சாதா, அவரது தம்பி போரானா சாலா மற்றும் மத்தலா கோரலா தேவு, சாத்தான் சி..., அவரது தம்பி லோகேயி, அவரது தம்பி...., அவரது தம்பி கோலு மிண்டா, அவரது தம்பி புடு, பெம்டோட்டா கிதா, அவரது மகன் சுவா.... தேவா, அவரது மகன்..... கலீ கிது, எண்டெரா பாய், ஹெலிலி தேவாவின் மகன் சுவாயா கோரா நாதா, அவரது அத்தை சதியா, அவரது தங்கை சத்தியா, அவரது மகன் சுவாயா, அவரது தம்பி...... அவரது தம்பி லோகேயி, அவரது தம்பி ரகா, அவரது தம்பி... ஆவேரி தேவு, தமிழ் பாயா, அவரது மனைவி சுபனியா, அவரது மகள் நம்பியா, அவரது மகன் கோரா நம்பாமட்டல, .... கரடி தேவர் அம்பலவா நியா, கில, கிய.., கங்க, .கங்கையர் லா.... தியா, நவியா, தமிழர், சுந்தா, ஜெயவந்தா செலே ஹெலாலு ராமர் கலு ராமர் குடா ராம் சைன்... தெமாழி கவியா பாதல் பெரியா, அவன் மகள்...... அவரது மகன் யா, ...... அவரது மனைவி ஆதித்தியா மற்றும் அவரது மகன் கோவிவா போன்றோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சிங்கள பௌத்த சங்கத்திற்கு நெருக்கடிகள் ஏற்படும் போதெல்லாம் அவர்கள் சோழநாட்டுப் பௌத்த சங்கத்தினரின் உதவியை நாடினர். அந்தவகையில்

இரண்டாம் பராக்கிரமபாகு காலத்தில் சீர்கெட்டிருந்த பௌத்த சங்கத்தினை சீர்திருத்தி அதனை மீளமைக்கும் நோக்கில் சோழ நாட்டிற்கு பல கொடைகளை அனுப்பி ஒழுக்கம் நிறைந்த பௌத்த திரிபீடகத்தை கற்றுத் தெளிந்த சோழ நாட்டு தமிழ்ப் பௌத்த துறவிகளை இலங்கைக்கு வரவழைத்ததாக சூளவம்ச செய்தி குறிப்பிடுகின்றது (இந்திரபாலா, 2006:296).

தமிழதிகாரி மகிந்தா (Demalaadhikara Kahambalkulu Mindal (Mahendra)) மற்றும் அவரது குடும்பத்தினரால் வழங்கப்பட்ட மானியத்தை இரண்டாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த கலபத விகாரைக் கல்வெட்டு பதிவு செய்கிறது. பஸ்யோதின் (Pasyodun) மாவட்டத்தை நிர்வகித்து வந்த மின்டால் (மகேந்திரா) என்ற பிரமுகர், தனது தாயார், அவரது மருமகன்கள் மியாங்குனுபிமின் கோடனாவன் (Kodanavan of Miyangunubim), தெகலதுருபிமின் விஜயானவன் (Vijayanavan of Degalaturubim) அவரது உறவினர் கடுவித்னா சதும்பா அல்லது தேவு (Katuvitna Satumba or Devu) ஆகியோரின் ஒத்துழைப்புடன், அரச ஒப்புதலுடன் கலபத விஹாரத்தை நிறுவினார் என்று கூறுகிறது. கோயிலுக்கு அதன் நிறுவனர்களால் வழங்கப்பட்ட நிலங்கள் மற்றும் அடிமைகளின் நீண்ட பட்டியலையும் இந்தப் பதிவு வழங்குகிறது, மேலும் ஆவணத்தில் நன்கொடையாளர்கள் மற்றும் சாட்சிகளின் கையொப்பங்களுடன் முடிகிறது (EZ IV:198).

தமிழதிகாரி என்ற அதிகாரபூர்வ பட்டப்பெயர் முதலாம் பராக்கிரமபாகுவின் (1153 - 1186) ஆட்சிக் காலத்தில் இருந்ததை சூளவம்சம் எடுத்துக்காட்டுகின்றது. முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் மகிந்த என்ற பெயரில் உயர் பதவிகளை வகித்ததாக மூன்று நபர்களின் பெயர்களை சூளவம்சம் குறிப்பிடுகின்றது. இவர்களில் ஒருவர் இரண்டாம் கஜபாகுவுக்கு எதிராக பராக்கிரமபாகுவின் பக்கம் போரிட்ட ஒரு தலைவர் ஆவார் (EZ IV:198). இரண்டாவது நபர் நகரகிரி என்ற பட்டத்தைக் கொண்ட முதலாம் பராக்கிரமபாகுவின் மற்றொரு தளபதி ஆவார் (CV 70:89, 146, 158). மூன்றாவது நபர் பொலன்னறுவையில் புனித தலதாவைக் கட்டிய ஒரு உயர் பிரமுகர் ஆவார் (CV 73:124-129). இந்த மகிந்தர்களில் ஒருவர் முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சியின் முடிவில் தமிழதிகாரப் பதவியை வகித்தார் எனக் கருதலாம் (EZ IV:200). அதைத் தொடர்ந்து இரண்டாம் பராக்கிரமபாகுவின் (1236-1271) காலம் வரையிலான ஐந்து தசாப்தங்கள் இப்பதவி தொடர்ந்து இருந்திருக்கலாம்.

**4. முடிவுரை**

அனுராதபுர காலத்தில் மௌரிய, இலம்பகர்ண வம்சத்திடையே அரசுரிமை பெறுவதில் ஏற்பட்ட சண்டைகளில் இந்திய கூலிப்படைகளும்

பயன்படுத்தப்பட்டமையால் இலங்கையின் அரசியல் வரலாற்றில் தென்னிந்தியரின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியது.

கலிங்க ஆட்சியாளருக்கும் இலங்கைப் பிரதானிகளுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் பெரும்பாலும் கலிங்கக் குழுவினர் வெற்றி பெற்றனர். அரசியற் சூழ்ச்சிகள் நிறைந்திருந்தமையால் எந்தவொரு மன்னராலும் நீண்ட காலம் ஆட்சி செய்யமுடியவில்லை. அரசியலில் தளபதி, பிரதானியின் செல்வாக்கு மேலோங்கியிருந்தது. இவ்வாறு தமிழகத்திலிருந்து இலங்கை மீது ஏற்படுத்தப்பட்ட படையெடுப்புக்கள் பொலன்னறுவை அரசை (1196-1215) வலிகுன்றச் செய்த அதேவேளை தமிழரின் எண்ணிக்கைப் பெருக்கத்திற்கும் தனித்துவத்திற்கும் வழிகோலின.

சிங்கள கல்வெட்டுகளில் தமிழர்களின் பெயர்கள், பதவிகள், தான செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன. பௌத்த பள்ளிகளுக்கு தமிழர்கள் பராமரிப்புப் பணி அல்லது பரிசளிப்பு செய்தவர்களாக இருந்துள்ளனர். சிங்களக் கல்வெட்டுகள் தமிழர்களை துரோகிகள், போர் புரிந்தவர்கள் என்று மட்டுமே காட்டவில்லை. அவர்கள் சில இடங்களில் அரசியற் பதவி, சமூக, சமய, வணிகப் பங்குகள் வகித்ததாகவும் தெரிவிக்கின்றன. தமிழர்கள் இலங்கையின் ஒரு நிலையான பாகமாக இருந்தனர் என்பதற்கு இவை முக்கிய ஆதாரமாக இருக்கின்றன. ஆயினும் இவர்களுக்கும் இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்களுக்குமான தொடர்புகள் பற்றிய எவ்வித குறிப்புகளையும் பெற முடியவில்லை. ரொபேட் நொக்ஸ் 17 ஆம் நூற்றாண்டில் இலங்கையிலிருந்து வெளியேறிய போது அனுராதபுர பகுதியில் வாழ்ந்த மலையாள மொழி பேசியோர் தொடர்பான தகவல் திராவிடரைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. இவ்வாறு வடமத்திய, வடமேற்கு பிரதேசங்களில் வாழ்ந்த தமிழர்கள் காலப்போக்கில் சிங்கள மக்களுடன் கலந்திருக்கலாம்.

சிங்களக் கல்வெட்டுகளை ஆதாரமாகக் கொண்டு ஒன்பதாம் நூற்றாண்டு தொடக்கம் பதின்நான்காம் நூற்றாண்டுவரையான தமிழர் இருப்புக்களை உறுதிப்படுத்தமுடியும். ஆயினும் ஆய்வுக் காலப்பகுதியான 10-13 ஆம் நூற்றாண்டு வரையான சிங்களக் கல்வெட்டுக்களில் தெமழ் (னுநஅநட) என்கின்ற சொல் பயன்பாட்டில் இருந்துள்ளதை அவதானிக்கலாம். இவற்றில் தமிழ் விகாரை, தமிழர் நிலம், தமிழ்க் கூலி, தமிழதிகாரி, தமிழ்ப் படைகள், தமிழர் நீர்ப்பாசனம் போன்றவற்றில் தமிழர் பெற்றிருந்த முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றன. பரவலாக இக்கல்வெட்டுக்கள் இலங்கையின் வடமத்திய, வடமேற்கு, கிழக்குப் பகுதிகளில் கிடைத்துள்ளன. சிங்களக் கல்வெட்டுக்கள் கிடைத்த இடங்களையும்

கல்வெட்டுச் செய்திகளையும் ஆதாரமாகக் கொண்டு 10-13 ஆம் நூற்றாண்டு கால இலங்கையின் வடக்கு, வடமத்திய, வடமேற்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழர்கள் வாழ்ந்துள்ளதை உறுதிப்படுத்தலாம்.

**உசாத்துணை**

1. Ariyapala, M.B (1968). *Society in Mediaeval Ceylon*, Department of Cultural Affairs, Colombo.
2. Codrington H.W and Paranavithana, S (1934). *Epigraphia Zeylanica, Vol. IV*, Oxfort University Press, Britan.
3. Geiger, Wilhelm (Trans.) (1998). *The Culavamsa* (CV), Asian Educational Services, New Delhi, Madars.
4. Indrapala, K (2006). *Ilankaiyil Thamilar Or Inakkulu Aakkam Petta varalaru* P.A.M 300- P.A 1200, Kumaran Puththaka Illam, Colombo – Chennai.
5. Paranavithana, S (1955). *Epigraphia Zeylanica, Vol.V, Part I*, Government Press, Ceylon
6. Paranavithana, S and Codakumbura (1963). *Epigraphia Zeylanica, Vol.V, Part II*, Government Press, Archaeological Department, Ceylon.
7. Ranawella, G.S (2001). *Inscription of Ceylon* (IC), Vol V, Part I, II, III Department of Archeology, Sri Lanka.
8. Wickremasinghe, D.M.De.Z (1912). *Epigraphia Zeylanica (EZ), Vol. I*, Oxfort University Press, Britan.
9. Wickremasinghe, D.M.De.Z (1928). *Epigraphia Zeylanica, Vol. II*, Oxfort University Press, Britan.
10. Wickremasinghe, D.M.De.Z and Codrington H.W (1933). *Epigraphia Zeylanica, Vol. III*, Oxfort University Press, Britan.

# கிழக்கிலங்கை வரலாற்றில் குறியீடுகள்

# Symbols in the History of Eastern Sri Lanka

Ms. Gowry Luxmykanthan[8]

***Abstract***

*A symbol that serves as a representation or identification of an object or concept, and which is universally accepted and continuously used within a society, is referred to as a symbol. In the tradition of the Eastern Tamils of Sri Lanka, the use of symbols can be observed from the megalithic period to the present day. Therefore, this study aims to reveal the historical development of such symbols, investigate the purposes for which they were used, and examine whether there have been changes in the ideas they conveyed. Primary data for this study includes inscriptions discovered in Eastern Sri Lanka, as well as symbols obtained directly from fieldwork involving cattle and laundry workers. Secondary data consists of articles and books related to the research. This inquiry is structured using historical methodology. Symbols such as the two-headed and three-headed trident, which were used as megalithic symbols, are still used among the communities of Eastern Sri Lanka. Similarly, the swastika symbol, known as vikata cakkaram, appears in Brahmi inscriptions from the 2nd century BCE and is still used today as a symbol of cattle. The star-shaped symbol, known as ettukaal (eight-legged), is used on both livestock and laundry clothing. From the pre-Christian era to the present, certain symbols have been in continuous use among the Tamil people of Eastern Sri Lanka. However, many symbols also exhibit variations. Nonetheless, there is no doubt that the usage, purposes, and meanings conveyed by these symbols have changed over time.*

***Keywords****: Cattle, Inscriptions, Symbols, Vikada Chakra, Brahmi*

## அறிமுகம்

ஒரு செயலையோ, ஒரு கருத்தினையோ, ஒரு சிந்தனையையோ உணர்த்த வெறொன்றை பயன்படுத்தும்போது அவ்வேறொன்று அடையாளம் எனப்படுகின்றது. அவ்வாறு அடையாளமாக அமைகின்ற ஒன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் சமுதாயத்தில் தொடர்ந்து பயன்படுத்தப்படுமானால் அவ்வடையாளம் குறியீடு என்ற நிலையை அடைகின்றது. பொதுவாக குறியீடுகளும் வரைபுகளும் பண்பாட்டியல் ஆய்வு அணுகுமுறையில் மிகுதியான பயன்பாட்டினையும் வெளிப்பாட்டினையும் பெற்றுத் திகழ்கின்றன என மானிடவியலாளர்களின் அணுகுமுறையில் உணரப்படுகின்றது. புராதன நாகரிகங்களிலும் குறியீடுகளின் பயன்பாட்டை நோக்கலாம். இக்குறியீடுகள் மக்களின் எண்ணங்களை ஒலி வடிவமாகவோ கருத்து வடிவமாகவோ வெளிப்படுத்தக்கூடிய கருவியாக விளங்கியிருக்க வேண்டும். ஈமச்சின்னங்கள், பாறை ஓவியங்கள், நாணயங்கள், மட்பாண்டங்கள் என்பவற்றில் இவற்றை அடையாளங் காண முடிகின்றது.

---

[8] *Senior Lecturer, Department of History, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka. Email: gowryl@esn.ac.lk*

குறியீடுகளின் தோற்றமும் வளர்ச்சியும் பரவலாகப் பாறை வரைபுகளின் தொடக்கமாகவும் முத்திரைகளின் பதிவுகளில் இடம்பெறும் வடிவங்களின் தொடக்கமாகவும் விளங்கின. இவை இனக்குழுவின் வாழ்க்கையையும் பண்பாட்டையும் அறிய உதவுகின்றன. தாம் சார்ந்த குலங்களையும், சமூகப் பிரிவுகளையும் அடையாளப்படுத்தப் பெருங்கற்காலம் முதலாக தமிழகத்திலும் இலங்கையிலும் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. புராதன ஓவியங்களின் வரைவுகளும் வடிவமைப்பும், அவை உணர்த்தும் பொருள்களும், கற்கால மக்களின் பழக்கவழக்கங்களையும் அவர்களுடைய நம்பிக்கைகளையும் வெளிப்படுத்தின.

தென் தமிழகத்தையும் இலங்கையையும் இணைக்கும் பெருங்கற்காலப் பண்பாட்டு அம்சங்களில் மட்பாண்டங்களில் இடப்பட்டுள்ள குறியீடுகளுக்கு முக்கிய பங்குண்டு. தென்னாசியாவில் சிந்துவெளி நாகரிகத்தின் வீழ்ச்சிக்கும் பிராமி எழுத்தின் தோற்றத்திற்கும் இடைப்பட்ட 900 ஆண்டு காலத்தில் வழக்கிலிருந்த ஒரு வகை எழுத்து வடிவமே குறியீடுகள் ஆகும். இவற்றில் 80 வீதமான குறியீடுகள் சிந்துவெளியில் புழக்கத்திலிருந்த குறியீடுகளை ஒத்தவையாகும்.

சிந்துவெளி மறைவுக்குப் பின்னர் தென்னிந்தியாவில் பயன்பாட்டில் இருந்த குறியீடுகளில் எழுபத்தைந்து விழுக்காடு தமிழகப் பெருங்கற்கால மட்பாண்டங்களில் காணப்படுகின்றன. இக்குறியீடுகளில் பல இலங்கைப் பெருங்கற்கால மட்பாண்டங்களில் பெறப்பட்டிருப்பதுடன் அவை பெருமளவுக்கு தமிழகப் பெருங்கற்கால மட்பாண்டங்களில் உள்ள குறியீடுகளை ஒத்தவையாகவும் காணப்படுகின்றன (புஷ்பரட்ணம், 2017:34). அறிஞர்கள் பிராமி எழுத்து, பயன்பாட்டுக்கு வருவதற்கு முன்னர் இக்குறியீடுகள் அக்கால மக்களிடையே ஒருவித ஒலிப்பெறுமானத்தை அல்லது கருத்துப் பெறுமானத்தைக் கொண்டிருந்ததுடன் குறியீடுகளில் இருந்து பிராமி எழுத்து உருவாகியிருக்க வேண்டும் என்ற புதிய கருத்தை முன் வைத்துள்ளனர் (ராஜன், 2005:31). தமிழகத்தைக் காட்டிலும் இலங்கையில் இவை அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளமையை பிராமிக் கல்வெட்டுக்களில் காணமுடிகின்றது. ஆயினும் காலப்போக்கில் இலங்கையின் பிற சமூகங்களில் இக்குறியீடுகள் படிப்படியாக வழக்கொழிந்துபோக அவற்றுள் சில தற்காலத்திலும் இலங்கைத் தமிழர் சமூகத்தில் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருவதைக் காணலாம் (புஷ்பரட்ணம், 1993:80- 83). வட கிழக்குத் தமிழர் வாழும் பிரதேசங்களில் காணப்படுகின்ற கலவோடுகள், பிராமிச் சாசனங்கள் என்பவற்றிலும், கால்நடைகள், சலவைத் துணி முதலானவற்றிலும் இப்பயன்பாட்டினை அறியமுடிகின்றது.

**நோக்கம்**

கிழக்கிலங்கைத் தமிழர் மரபில் பெருங்கற்கால முதல் சமகாலம் வரை குறியீடுகளின் பயன்பாட்டை அவதானிக்க முடிகின்றது. எனவே அவற்றின் வரலாற்று வளர்ச்சியை வெளிப்படுத்துவதுடன், ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளாக அவை பயன்படுத்தப்பட்டதன் நோக்கம், அவை வெளிப்படுத்திய கருத்துக்களின் தன்மையில் மாற்றங்கள் காணப்படுகின்றதா என்பதை கண்டறிவதை நோக்காகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

ஒரு பொருளின் தோற்றத்தினையும் வளர்ச்சியையும் முறையாக விளக்கும் நோக்கில் கிடைத்துள்ள தகவல்களைப் பயன்படுத்திக்கொண்டு, படிப்படியாக அதன் பழைய நிலையைக் கண்டறிந்து ஆராய்கின்ற வரலாற்று முறையியல் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது கடந்த கால வரலாற்று நிகழ்வுகளின் தாக்கங்களான குறியீடுகள் காலந்தோறும் எவ்வாறு பதிவாகியுள்ளன என்பதை அறியச் செய்யத்தக்கதாக இவ்வாய்வு கட்டமைக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு மூலங்கள்**

கிழக்கிலங்கையில் கண்டறியப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ள கல்வெட்டுக்கள், நேரடியான களவாய்வின் ஊடாக கால்நடைகள் மற்றும் சலவைத் தொழிலாளர்களிடமிருந்து பெறப்பட்ட குறியீடுகள் என்பவற்றை முதன்நிலைத் தரவுகளாகவும், ஆய்வுடன் தொடர்புடைய கட்டுரைகள், நூல்கள் என்பவற்றை இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் கொண்டு இவ்வாய்வு கட்டமைக்கப்பட்டுள்ளது.

**இலங்கைப் பெருங்கற்காலக் குறியீடுகள்**

இலங்கையிலும், தமிழகத்திலும் பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்த குறியீடுகள் அப்பண்பாட்டின் மறைவைத் தொடர்ந்து அவை முற்றாக மறைந்ததெனக் கூறமுடியாது. பிற்காலத்தில் நாணயங்கள், முத்திரைகள், கல்வெட்டுக்கள் என்பவற்றில் பயன்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் இரு பிராந்தியங்களிலும் காணப்படுகின்றன. ஏறத்தாழ 43 குறியீடுகளை பேரா.பரணவிதான அடையாளப்படுத்தியுள்ளார் (1970: xxvi). ஆனைக்கோட்டை முத்திரை இதில் குறிப்பிடத்தக்கது (புஷ்பரட்ணம், 2017:56).

கிழக்கிலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டுக் கூறுகள் கண்டறியப்பட்டபோதிலும் முழுமையான தொல்லியல் அகழ்வாய்வுகள் நடைபெறாமையினால் இங்குள்ள மட்பாண்டங்களை ஆய்வு செய்யமுடியாதுள்ளது. ஆயினும் மட்டக்களப்புக் கதிரவெளியில் இப்பண்பாட்டிற்குரிய பானையோடுகளில் இருதலை, முத்தலைச் சூலக் குறியீடுகளை க.தங்கேஸ்வரி அடையாளங் கண்டுள்ளார் (தங்கேஸ்வரி, 2007). இக்குறியீடுகள் தமிழகத்திலும், இலங்கையின் ஏனைய பாகங்களிலும் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

### கிழக்கிலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் குறியீடுகள்

இலங்கையிலுள்ள 1500 இற்கு மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களில் ஏறத்தாழ 43 குறியீடுகளை பேரா.பரணவிதான அடையாளப்படுத்தியுள்ளார். கிழக்கிலங்கையில் கண்டறியப்பட்டுள்ள ஏறத்தாள 245 பிராமிக் கல்வெட்டுக்களில் மீன், சுவஸ்திகா, பீடத்துடன் கூடிய சுவஸ்திகா, நட்சத்திரம், படகு, இலை, நந்தி பாதம், கோடுகள், கிரிடம் முதலான பல குறியீடுகள் காணப்படுகின்றன (Paranavitana, 1970: xxvi). பொதுவாக ஆரம்ப காலத்தில் இனக்குழுக்கள் தமது அடையாளத்தை வெளிப்படுத்தும் குலச்சின்னங்களாக இவற்றைப் பயன்படுத்தினர் எனக் கருதமுடிகின்றது.

கிழக்கிலங்கையில் கண்டறியப்பட்டுள்ள கதிர்காமச் சத்திரியர்களுக்குரிய கல்வெட்டுக்களில் மீன் சின்னமும், பீடத்துடன் கூடிய சுவஸ்திகா வடிவமும் பயன்படுத்தப்பட்டுள்ளன (Paranavitana, 1970: Plate. XLI ). இக்கல்வெட்டுக்குரிய அரசர்களில் தலைமை அரசனது பெயர் கல்வெட்டில் 'மஜிமராஜ' என பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுக்களை ஆராய்ந்த மெண்டிஸ், மயிலை சீனி வேங்கடவாமி போன்றோர் இக்கல்வெட்டுக்குரியவர்களைப் பாண்டிய வம்சத்துடன் தொடர்புபடுத்தி இவர்கள் சிங்கள மன்னர்களுக்கு கட்டுப்படாமல் அக்காலத்தில் இலங்கையில் சுதந்திரமாக ஆட்சி புரிந்த சிற்றரரசர்கள் என விளக்கம் கொடுத்துள்ளனர் (வேங்கடசாமி, 1983). எனினும் தமிழக மீன் சின்னத்திற்கும் இக்கல்வெட்டுக்களில் வரும் மீன் சின்னத்திற்கும் இடையில் வடிவமைப்பில் பல வேறுபாடுகள் உள்ளன. அதாவது தமிழ்நாட்டில் மீன் வடிவங்கள் கோட்டுருவ வடிவில் ஒரு குறியீடாகவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் அது மீன் வடிவமாக கலைநயத்துடன் பொறிக்கப்பட்டுள்ளது (புஷ்பரட்ணம், 2002:13). இந்த வேறுபாட்டிற்கு காரணம் இலங்கையில் வாழ்ந்தோர் பெருங்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு இடம்பெயர்ந்தமையின் காரணமாக ஏற்பட்ட தொடர்பாக இருத்தல் கூடும்.

அல்லது இலங்கையில் வாழ்ந்த மக்கள் தாம் முன்பொரு காலத்தில் பாண்டி நாட்டிலிருந்து வந்து குடியேறியதை நினைவுபடுத்துவதாக இருக்கலாம்.

சுவஸ்திகா வடிவமானது தென்னாசியாவில் சமணம், பௌத்தம், வைதீக நெறிகள் என்பவற்றிற்கு பொதுவான குறியீடாகும். இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் இது அதிகளவில் இடம்பெறுகின்றது. இதில் பீடத்துடன் கூடிய சுவஸ்திகா வடிவமானது இலங்கைக்கே உரித்தான தனித்துவமான வடிவமாகும். இவை கல்வெட்டுக்களில் காணப்பட்டமையானது இனக்குழுநிலையிலிருந்து அரசு தோற்றம் பெற்றமையை வலியுறுத்துகின்றது. எனினும் காலப்போக்கில் இச்சின்னங்கள் கல்வெட்டுக்களிலிருந்து மறைந்து செல்கின்றபோக்கைக் காண முடிகின்றது. கி.பி முதலாம் நூற்றாண்டுக்கு பிந்திய கல்வெட்டுக்களில் எண்ணிக்கையைக் குறிப்பதற்கும் கல்வெட்டுக்களில் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## இடைக்காலக் கல்வெட்டுக்களில் குறியீடுகள்

மத்திய காலத்திற்குரிய தமிழ்க் கல்வெட்டுக்கள் பல கிழக்கிலங்கையில் கண்டறியப்பட்டுள்ளன. பொதுவாக அவை அக்காலத்தில் கோயில்களுக்கு வழங்கப்பட்ட தானங்களைப் பதிவு செய்பவையாக அமைகின்றன. அவற்றில் பல குறியீடுகள் காணப்படுகின்றன. பெரும்பாலானவற்றில் சூலாயுதத்தின் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது. திருமங்களாய், கங்குவேலி, திருக்கோவில் கல்வெட்டுக்கள் என்பவற்றில் இவற்றைக் காணலாம். இவை கோயிலுக்குரிய உடமைகளின் பாதுகாவற் குறியீடாக பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

மனித குல வரலாற்றில் பெண்கள் பயன்படுத்திய விவசாய கருவியாக தோண்டுகழி காணப்பட்டது. பெரும்பாணாற்றுப்படையில் (91) ‘இரும்புத் தலையாத்த திருந்துகளை விழுக்கோல்’ என்கிறது. தமிழகப் பழங்குடிகள் இதனை பாறைக்கோல், குழிக்கோல், காம்பு எனப் பலவாறு கூறியுள்ளனர். இது பல்லாயிரமாண்டுகளுக்குப் பின்னர் தற்காலத்தில் சூலாயுதம் என அழைக்கப்படுகின்றது என பேராசிரியர். பக்தவத்சலபாரதி குறிப்பிடுகின்றார். இன்று இவை தாய்த்தெய்வங்களின் கைகளில் அதிகம் காணப்படுகின்றன. கற்காலம் முதலாக பயன்படுத்தப்பட்ட சூலாயுதக் குறியானது கிழக்கிலங்கையின் பெருங்கற்காலச் சின்னங்களிலும், மத்திய கால தமிழ்க் கல்வெட்டுக்களிலும், அண்மைக்காலம் வரை கால்நடைகளிலும் குறியீடுகளாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

மத்திய கால தமிழ்க் கல்வெட்டுக்களின் இறுதியில் ஒம்படைக்கிளவி இடம்பெறும். அண்மையில் திருகோணமலை கோமரங்கடவலவில்

கண்டறியப்பட்ட கல்வெட்டில் இத்தானத்தை அகிதம் செய்வோர் நாயாகவும், காகமாகவும் பிறப்பர் என்கின்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதன் கீழே வலது பக்கம் நாய் வடிவமும், இடது பக்கம் காகத்தின் உருவமும் செதுக்கப்பட்டுள்ளது. இதே கல்வெட்டின் மேலே திருவாசி போன்ற வட்டமும் அத்துடன் இணைந்த ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கமும் உள்ளது. மேலே உள்ள வட்டம் சக்தி வழிபாட்டிற்குரிய சக்கரமாக இருக்கலாம் எனவும் பேரா.புஷ்பரட்ணம் கருதுகின்றார்.

அம்பாறை திருக்கோவில் சித்திரவேலாயுதர் சுவாமி கோயிலில் உள்ள தானக் (தூண்) கல்வெட்டின் ஒரு பக்கத்தில் மயில் செதுக்கப்பட்டுள்ளது. மற்றைய பக்கத்தில் சூரியனும் சந்திரனும் செதுக்கப்பட்டுள்ளது. இது வழங்கப்பட்ட தானமானது சூரிய, சந்திரன் (இயற்கைச் சக்திகள்) உள்ளவரை நிலைபெற வேண்டும் என்ற கருத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

**மட்டக்களப்பு பூர்வசரித்திரம் கூறும் குறியீடுகள்**

மட்டக்களப்பு பூர்வசரித்திரம் சமூக வகுப்புக்களின் அடிப்படையில் மேல்வருமாறு குறியீடுகளைக் குறிப்பிடுகின்றது.

குலவிருதுக் கல்வெட்டு

**தோணி** கரையார்க்குத் **தொப்பி** துலுக்கருக்கு

காணியுழு **மேழிசுழி** காராளர்க்கு

நாணி **வில்லம்பு** நாட்டிலுள்ள வேடுவர்க்கு

**எழுத்தாணிசுழி** முற்குகர்க்குக் கமலமலர் கோயிலார்க்கு

**கைச்சங்கு** பண்டாரப் பிள்ளை கட்கு

திமிலர்க்குப் **பால்முட்டி** சேணியர்க்கு **நூலச்சு**

அமலருக்குத் **தேர்க்கொடிகள்** அம்பட்டருக்குக் **கத்தரிக்கோல்**

விமலருக்கு **மத்து** வேதியர்க்குப் **பூணூல்**

வண்ணார்க்குக் **கல்லு** வாணியர்க்குச் **செக்கு**

**சுண்ணாம்பு** சுடு கடையருக்குக் கூடையாம் தொல்லுலகில் '

மன்னவர்க்குஞ் **செங்கோல்** வள்ளுவர்க்கு மேளம்

பன்னுங் குசவருக்குக் **கும்ப குடம்** பகருவேன்

இன்னுந் தட்டார்க்குக் **குறடு** சாணார்;க்குக் **கத்தி**

செட்டி குலத்தோர்க்குத் தேடும் **தராசு கொடி**

இட்டமுடனெச் சிறைக்கும் எல்லாவம் விரு தாகுமென்று

பட்டமது கட்டிவைத்தான் பாண்டி மன்னன்;

(கமலநாதன், 2005:77-78)

இக்குறியீடுகள் நீண்ட காலமாக மட்டக்களப்பு தேசத்தில் புழக்கத்தில் இருந்தவை எனக்கொள்ளலாம். எனினும் பூர்வ சரித்திரத்தின் காலத்தை உறுதியாகக் கூற முடியாத நிலையில் இக்குறியீடுகளின் பயன்பாட்டுக் காலத்தின் ஆரம்பத்தை உறுதிப்படுத்த முடியாது. எனினும் ஒல்லாந்தர் காலப்பகுதியில் இவை மட்டக்களப்பு தேசத்தவரிடையே புழக்கத்தில் இருந்தன என்பதில் மாற்றுக் கருத்தில்லை. பொதுவாக குறிப்பிட்ட சமூகத்தவர்கள் செய்கின்ற தொழில்களின் அடிப்படையில் அவர்களால் பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்கள், அல்லது குறித்த சமூகத்தின் பண்பாட்டம்சங்களில் முதன்மையானவை இவர்களுக்குரிய குலச்சின்னமாக்கப்பட்டுள்ளன. அக்காலம் முதலாக இக்குறியீடுகள் அவர்களை அடையாளப்படுத்தும் வகையில் அவர்களுக்குச் சொந்தமான கால்நடைகளிலோ, சலவை ஆடையிலோ பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

## கால்நடைகளில் குறியீடுகள்

இறக்காமத்தில் ஏற்பட்ட குடியேற்றங்கள் பற்றிக் கூறும் நாடுகாடுபரவணிக் கல்வெட்டு சீதாவாக்கையிலிருந்து வந்த குடிகளின் மாட்டினது குறியீடு என விலங்கு சம்மட்டியும் பசும்பையும், பசும்பைக்கு மேல் தாமரைப் பூவும் இணையிளம்பிறையும் கொழுக்குறியும் எனக் குறிப்பிடுகின்றது. தமிழர்களின் புனிதச் சின்னமாகக் கருதப்படும் மாடுகளுக்கு குறியீடு மரபு தற்காலத்திலும் காணப்படுகிறது. மாடுகளின் உரிமையாளர்கள் தமது பெயரின் முதல் எழுத்தை ஆங்கிலத்தில் அல்லது தமிழில் குறிப்பிட்டிருப்பதுடன், குறியீடுகளையும் வரைவது மரபாகும். இக்குறியீடுகள் மாடுகளின் உரிமையாளரின் சமூக, சமய, பிரதேச, குடி, குடும்ப வேறுபாடுகளை அடையாளப்படுத்துவதற்காக இடப்படுகின்றன. ஆயினும் குறியீடுகளின் வடிவமைப்புகளை நோக்கும் போது அவற்றில் பெரும்பாலானவை பெருங்கற்கால மட்பாண்டங்களிலும் பண்டைய கல்வெட்டுக்களிலும் இடம்பெற்றுள்ள குறியீடுகளை பெரிதும் ஒத்தவையாகக் காணப்படுகின்றன.

கோரளைப்பற்றுப் பிரதேசத்தில் தாமரைப் பூ, கொடிவிருது, வில்லம்பு, முத்தலைச் சூலம், விகடசக்கரம், ஒருதலைச் சூலம், எட்டுக்கால், ஆறுகால், பசும்பை,

சலவைக்கல், வட்டச்சக்கரம், பட்டிச்சங்கு, தொப்பி, இரட்டைச் இளம்பிறை, சுளிச்சங்கு, சமாந்தரக்கோடு, கத்தரிக்கோல், சிலுவை, ஈச்சம் ஓலை, புள்ளடி, சலவைக்கல் போன்ற குறியீடுகளை மாடுகளில் அவதானிக்க முடிந்தது (படம் இணைக்கப்பட்டுள்ளது).

## சலவை ஆடைகளில் குறியீடு

சலவைத் தொழிலில் ஈடுபடுவோர் ஆடைகளை இலகுவாக அடையாளம் காண்பதற்கு அவற்றின் உரிமையாளர்கள் பெயரின் முதல் எழுத்தை ஆங்கிலத்தில் அல்லது தமிழில் ஆடையின் ஓரத்தில் குறித்துவிட்டு அதன் அருகில் வேறுபட்ட வடிவங்களில் அமைந்த குறியீடுகளையும் பயன்படுத்தி வருகின்றனர். குறியீடுகளை பயன்படுத்துவதன் நோக்கம், சமூக, குடும்ப மற்றும் இடத்தின் வேறுபாட்டை இலகுவாகத் தெரிந்துகொள்வதாகும்.

மக்களின் அன்றாடத் தேவைகளுக்கு வெண்கலப் பாத்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் கொடி, சேவல், ஒருதலைச்சூலம், முத்தலைச்சூலம், சேவற்கொடி, உடுக்கை, புள்ளிகள், கோடுகள், தாமரைப்பூ என்பன அழகுக்கலையை வெளிப்படுத்தும் விதத்தில் பயன்படுத்தப்படுவதைக் காணமுடிகின்றது. தற்காலங்களில் மதம் சார்ந்த குறியீடுகள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.

## முடிவுரை

பெருங்கற்காலக் குறியீடுகளாக பயன்படுத்தப்பட்ட இருதலை, முத்தலைச் சூலக் குறியீடுகள் கிழக்கிலங்கை சமூகத்தவரிடையே தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. அதேபோன்று விகட சக்கரம் எனப்படும் சுவஸ்திகா சின்னமானது கிழக்கிலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. இக்குறியீடு ஏறத்தாழ 2000 வருடங்களுக்கு பின்னரும் கால்நடைகளில் குறியீடாகப் பயன்படுத்தப்படுகின்றது. அதேபோன்று நட்சத்திரக் குறியீடுகளும் பிராமிக் கல்வெட்டுக்களில் உள்ளதுடன், சமகாலத்தில் கால்நடைகளில் 'எட்டுக்கால்' எனும் பெயருடன் பயன்பாட்டில் உள்ளது. இதே குறியீடு சலவைத் தொழிலாளர்களால் உடைகளை அடையாளப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் சமகாலத்தில் இப்பாவனை குறைந்துள்ளது எனலாம். பிராமிக் கல்வெட்டுக்களில் மீன் சின்னம் காணப்படுகின்ற போதிலும் பிற்கால கிழக்கிலங்கையில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

புராதன காலத்தில் தமது இனக்குழு சார்ந்த அடையாளத்தை வெளிப்படுத்துவதற்காக குறியீடுகள் பயன்படுத்தப்பட்டன. மத்திய

காலப்பகுதிக்குரிய கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டவை பெரும்பாலும் இறைவழிபாட்டோடு தொடர்புடைய குறியீடுகளாகும். கால்நடைகளில் தமது குடி, தொழில் சார்ந்த குறியீடுகளை பயன்படுத்தியுள்ளனர். மட்டக்களப்பு பூர்வசரித்திரம் குறிப்பிடுகின்றதன்படி வெவ்வேறு சமூகப் பிரிவினருக்குமாக தனித்தனி குறியீடுகள் காணப்படுகின்றன. அவர்களது உடமைகளில் அவை பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. குறிப்பாக தமக்குச் சொந்தமான கால்நடைகளில் தமது சமூகப் பிரிவு சார்ந்த குறியீட்டைப் பயன்படுத்தியுள்ளனர். அவை பெரும்பாலும் அம்மக்கள் செய்கின்ற தொழில்களின் அடிப்படையில் கூறப்படுகின்றன. அத்தொழிலின் போது அவர்கள் பயன்படுத்திய பொருட்கள் காலப்போக்கில் அம்மக்களுக்குரிய அடையாளமாகி பின்னர் குறியீடாகியுள்ளது. பூணூல் (பிராமணர்), தொப்பி (துலுக்கர்) ஆகியன குறிப்பிட்ட அம்மக்களை ஏனையோரிடமிருந்து தனித்துவமாக காட்டிய அடையாளங்களாகும்.

மட்டக்களப்பு பூர்வசரித்திர குறிப்பின் அடிப்படையிலேயே அண்மைக்காலம் வரை கிழக்கிலங்கைப் பகுதியில் வாழ்ந்த மக்கள் தமது கால்நடைகளில் தத்தம் குறியீடுகளை அடையாளங்களாகப் பயன்படுத்துகின்றனர் எனலாம். அதேபோன்று சலவைத் தொழிலாளிகள் உடையின் உரிமையாளரை அடையாளங் காண்பதற்காக குறியீடுகளை மரபு வழியாக பயன்படுத்தியுள்ளனர்.

கிராமங்களில் உயிர்ப்புடன் தமிழர் பாரம்பரியத்தை பறைசாற்றிய மரபுக்கலைகள் மீது பேரா. வித்தியானந்தனது நாட்டம் சென்றமைக்கு இவையே காரணங்களாகும். பேரா. சரச்சந்திரா போன்று எல்லா இடங்களுக்கும் அலைந்துதிரிந்து அவர் கண்டடைந்தது மட்டக்களப்பில் நிறைந்த உயிர்த்துடிப்புடன் இருந்த கூத்துக்கலையையே ஆகும். இவரது பெரும் தயாரிப்பில் உருவான நான்கு நாடக வடிவங்களில் மூன்று பெரும் நாடகங்கள் வடமோடிக் கூத்தினை அடிப்படையாக் கொண்டு உருவாக்கம் பெற்ற நாடக வடிவங்களாகும். அவையாவன இராவணேசன், கர்ணன் போர், வாலி வதை எனப்படும் முப்பெரும் படைப்புக்களாகும். இவை பாரிய வெற்றியையும் தந்தது. இங்கு இவரது முன்னெடுப்புக்களுக்கான மிக முக்கியமான நோக்கம், எமக்கான தேசிய வடிவத்தை கண்டுப்பிடிப்பதுடன் அதனை மத்திய தர வர்க்கத்தினருக்கு இதுதான் எமக்கான தேசிய கலை வடிவம் எனவும் அடையாளப்படுத்துவதாகும். நகர்ப்புற மத்திய தர வர்க்கத்தினர், கிராமங்களில் தான் எமது கலைவடிவம் உருக்கொண்டும், இருப்புக் கொண்டுமுள்ளது என்பதனை அறியார். அதிலும் குறிப்பாக, இதுதான் எமது கலை அடையாளம் என்பதனை அறியும் உத்வேகமும்,

உணர்வும் அவர்களுக்கு இருந்ததில்லை. பன்மைப் பண்பாடு கொண்ட எமது நாட்டில் எமக்கானவை என்றும், எமது என்றும் தனித்துவமாக விளங்குபவை எவையென அறிதலும், புரிதலும், உணர்தலும் அதனது அடுத்தகட்ட வளர்ச்சியினை அறாத் தொடர்ச்சியாக பேணவும், வளர்த்தெடுக்கவும் வேண்டிய கடப்பாடு மக்களாகிய எமக்கு மக்கள் கலை வடிவத்தில் அவசியம் இருத்தல் வேண்டும்.

தமிழர் வரலாற்றினை நோக்கும் போது இலக்கியங்களும், காப்பியங்களும், கல்வெட்டுக்களும், தொல்லியல் ஆதாரங்களும் எடுத்தியம்பும் தமிழர் பண்பாட்டியல் வரலாற்றில், அரசியல், பொருளாதாரம் போன்று கலைகளும், கலைச்செயற்பாடுகளும் காலந்தோறும் சூழலினதும், கால மாற்றத்தினதும் பின்னணியில் எவ்வாறு மாற்றமுற்று வளர்ச்சி கண்டு தமிழர் தம் பெருமையினையும், அடையாளத்தினையும் பறைசாற்றி நிற்கின்றன என்பது கண்கூடு. இதனை முன்னிறுத்தியே பேரா. வித்தியானந்தன் எமது கலை அடையாளத்தை தேடிக் கண்டுபிடித்து மத்திய தர வர்க்கத்தினருக்கு அறிமுகப்படுத்தியதோடு, தமிழர் கலை வடிவமாக கூத்தினை, அதிலும் குறிப்பாக கிராமத்தில் மையம் கொண்டிருந்த வடமோடிக் கூத்தினை முதன்மைப்படுத்தி அதன் ஆற்றுகை அழகியலை உலகறியச் செய்தார். இந்தக் கலை முன்னெடுப்புக்கள்; மற்றும் படைப்பாக்கங்கள், ஈழத்தமிழர்க்கான கலையினை அடையாளப்படுத்தி நிற்பதோடு, அதனை கற்றறிந்து கொள்ளும் காலத்தின் தேவையினையும் நிறைவேற்றியுள்ளமை தெளிவாகிறது.

### மேன்மை நிலை நோக்கிய நகர்வு

மாற்று என்பது மாறானது என்ற அர்த்தத்தில் பயன்படுகின்ற சொல்லாகும். அதாவது ஒரு காலத்தில் இருப்பதற்கு மாறானது. எக்காலத்தில் இந்த மாற்று அல்லது மாறானது பற்றிப் பேசுகின்றோமோ அக்காலத்தில் பிரபலமானதாகவும், ஆதிக்கம் பெற்றதாகவும், அதிகாரபூர்வமானதாகவும் விளங்கும் கருத்துநிலை, கலாசாரம் ஆகியவற்றிலிருந்து அது மாறுபடும். அத்துடன் அது அத்தகைய அதிகாரபூர்வமான அல்லது அதிகாரத்திலுள்ள கருத்துநிலை, கலாசாரம் ஆகியவற்றில் காணப்படும் அதிகார மையப் போக்கையும், ஒடுக்குமுறை அம்சங்களையும் விமர்சித்து அவற்றில் இருந்து விலகியதும் அவற்றிற்கு மாற்றானதுமான கருத்துக்களை முன்வைக்கின்றது (Sitralekha, 2007, p: 115). இவ்வாறாக, சமூக மையத்தினை ஆக்கபூர்வமாக கேள்விக்குட்படுத்தும் மாற்றங்களை படைப்பாளிகள் தம் படைப்புக்கள் மூலம் முன்னெடுத்துள்ளனர்.

படச்சட்ட மேடையை மையப்படுத்தி, தமிழர் கலை அடையாளத்தினை பேரா. வித்தியானந்தன் முன்னெடுத்ததில் அவர், வட்டமான களரி எனப்படும் மேடையில்

ஆடப்படும் கூத்தினை நகர்ப்புற மக்களுக்கு பரிச்சயமான மூன்று பக்கம் அடைக்கப்பட்ட மேடையில் நிகழ்த்துகையினை செய்தார். இம்மாற்றம் போன்று, அவரது முன்னெடுப்புக்களில் வேறு சில மாற்றங்களும் இடம், நேரம், சூழல், காலம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தன. இம்மாற்றங்கள் அவசியமானவையாகவும் இருந்தன.

இந்த மாற்றங்களுள் குறிப்பிடத்தக்கது சாதி அமைப்பினை பேணும் முறைமையினை மாற்றியமையாகும். அடிப்படையில் சாதிப்பிரிவுகளும் அவற்றினை இறுக்கமான முறையில் கடைப்பிடிக்கும் போக்கும் மட்டக்களப்பு நிலமானிய சமூக அமைப்பில் பேணப்படுகின்றது. இது தொடர்பாக மௌனகுரு (Mounaguru) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> ஒரு கிராமத்தில் வாழுகின்ற குறிப்பிட்ட ஒரு சாதியினரை சேரந்தவர்களே கூத்துக்களை ஆடுவர். ... கூத்தில் குறைந்த சாதியினரைத் தம்மோடு சேர்த்து ஆடாத ஒரு சாதி இறுக்கத்தினைக் காணும் அதேவேளையில், அவர்களையும் அக்கூத்திலிருந்து தனிமைப்படுத்தாது அவர்களின் தொழில் மூலமாகவும் அக்கிராம விழாவில் பங்குகொள்வோராகவும் ஆக்கவிடும் முறையினைக் காண்கின்றோம். இவ்வண்ணம் சாதி அமைப்பினைப் புறவயமான நிலையிற் கூத்துப்பணியது (2014, pp: 429 - 430).
>
> சாதி நிறுவனங்களும் சாதி பேணியது போல கூத்து எனும் நிறுவனமும் இச்சாதி அமைப்பைப் பேண அன்றும் உதவியது. இன்றும் உதவுகின்றது. எனவே சாதி கலந்து கூத்தாடும் வழமையை ஒரு கிராமமும் அனுமதிக்கவில்லை. சில கூத்துக்கள் சில சாதியினராலேயே மீண்டும், மீண்டும் ஆடப்பட்டதையும் சில கூத்துக்கள் எழுதப்படாத சட்டமாக தனிச்சாதியுரிமை கொண்டிருந்தன என்பதும் தெரியவந்தன" (2021, pp: 163 - 164).

இதன் மூலம் சாதி அமைப்பு ஓர் பண்பாட்டினடியாக எழுந்த கலை ஆற்றுகையில் ஆதிக்கம் செலுத்துகின்ற போக்கினை காணமுடிகின்றது. சாதி என்பது ஒரு அமைப்பு முறை. இந்த அமைப்பில் ஒரு ஆண் பெண் எந்த ஒரு குறிப்பிட்ட குழுவில் பிறந்தாரோ அக்குழுவின் மூலமாகவே அவருக்கு சமூக பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறது. சமூகப் படிநிலை வரிசையில் ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு குறிப்பிட்ட அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது (Agaththiyalingam, 2020). எனவே சாதி என்பதனை சமூகம் கட்டமைத்துப் பேணுகின்றமை தெளிவாகிறது. இத்தகைய இறுக்கமான நிலையினை பின்வருவோரது முன்னைடுப்புக்கள் ஆற்றுகை நிலையில் தளர்த்தியுள்ளமையினை காணலாம்.

பேரா. வித்தியானந்தன் கூத்து முயற்சியில் ஈடுபட்டு அவரது தயாரிப்பில் வெளிவந்த ஆற்றுகைகளில் இந்த சாதி இறுக்கத்தினை தளர்த்தினார். இவரது

தூரநோக்குச் செயற்பாட்டில் இச்செயற்பாடு மிகவும் முக்கியமாகப் பார்க்கப்பட்டது. “பேரா. வித்தியானந்தனது பிரதான பங்களிப்புகளுள் ஒன்று சகல சாதி மாணவர்களையும் பல் பிரதேச மாணவர்களையும் கூத்தில் இணைத்தமை. கூத்தில் பிரதேச சாதி பேதமின்றி அனைவரையும் ஆடவைத்தது” (2021, pp: 16 - 17) என மௌனகுரு (Mounaguru) அவர்கள் கூறியுள்ளமை சான்றாவதனைக் காணலாம்.

மேற்கூறிய கூற்றுக்கள் நீண்ட கால நிலைப்பாட்டினை முன்னிறுத்திய கலை முன்னெடுப்பில் சமூகச் சமநிலையை சாதி அமைப்பில் பேணிய புரட்சிகரமான செயலாகக் கருதக்கூடியதாக உள்ளது. இது போன்று மட்டக்களப்பு சீலாமுனை கிராமத்தினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்ற கூத்து மீளுருவாக்கம் எனும் செயற்பாட்டினையும் குறிப்பிடலாம். இதுவும் வடமோடிக் கூத்தினை மையப்படுத்தியே முன்னெடுக்கப்பட்டது. கூத்தினை சமகாலத்தில் முன்னெடுக்கும் பொழுது தவிர்க்கப்பட வேண்டிய விடயங்களுள் சாதிப்பிரிவினை முக்கியமான விடயமாக அழுத்திக் கூறப்பட்டுள்ளமையினை பின்வரும் கௌரீஸ்வரனது (Gowreeswaran) கூற்றும் நிரூபிக்கிறது:

> சாதி ரீதியாக தாழ்த்தப்பட்டவர்கள் என்கின்ற சமூகங்களை மென்மேலும் இழித்து ஒடுக்கும் தன்மை கொண்டதாக, குறித்த சமூகங்களைச் சேரந்;த மனிதப் பாத்திரங்களின் படைப்பாக்கம் கூத்துக்களில் இடம்பெற்றுள்ளதனைக் காணலாம். உதாரணமாக மட்டக்களப்பு வடமோடி, தென்மோடிக் கூத்துக்களில் வரும் “பறையன்” பாத்திரச் சித்தரிப்பைப் பார்க்கும்போது இப்பாத்திரம் சாதாரண மனித நிலையிலிருந்து மாறி மது அருந்தி விட்டு நிலை தடுமாறிய குடிகாரனாக, கூத்தரங்கின் சபையோரும் பார்வையாளர்களும் நையாண்டி பண்ணி இரசிக்கும் ஏளனத்திற்குரிய மனிதனாக, சூரியன் உதித்து மறையும் திசைகளை முரண்படக் கூறும் முட்டாள் மனிதனாகச் சித்தரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவ்விதம் உயர்சாதிக்காரர்களின் ஆதிக்கத்திற்குட்பட்ட அவர்களின் பார்வைக்கேற்ற மனிதராக “பறையன்” கூத்துக்களில் படைக்கப்பட்டுள்ளமை இன்றைய சூழலில் பொருத்தமற்ற, மானுடநேயத்திற்கு முரணான படைப்பாக்கமாகவே உள்ளது. ... சமகாலத்திற்குரிய வகையில் முழுக்கமுழுக்க மனித மையப்பட்ட அரங்காக மீளுருவாக்கம் செய்தல் வேண்டும் எனவும் இத்தகைய மீளுருவாக்கமே இன்றைய நிலையில் அவசியம் செய்தாக வேண்டியதாக உள்ளது என்றும், சீலாமுனைக் கூத்து மீளுருவாக்கம் வலியுறுத்துகிறது. (2007, pp: 17 - 18)

1960 களின் பிற்பட்ட முன்னெடுப்புக்களில் சாதி வேறுபாடு பற்றி வெவ்வேறு விதமாக வெவ்வேறு தளங்களில் கவனம் செலுத்தப்பட்டுள்ளமையானது ஓர் குறித்த சமூகத்திற்குரிய கலை ஆற்றுகையில் அச்சமூக அங்கத்தவர்கள் சகலரும் பாரபட்சமற்ற வகையில் சமபங்களிப்பு செய்யும் வகையில் சாதி ரீதியான

சமத்துவம் பேணப்படவும், வலியுறுத்தப்படவும் வேண்டும் எனும் கற்றல் பெறுமானத்தை வடமோடிக் கூத்தினை மையப்படுத்திய முன்னெடுப்புக்கள் வலியுறுத்தியுள்ளமை தெட்டத்தெளிவாவதுடன் சாதி ரீதியான மேன்மை நிலை நோக்கிய நகர்விற்கு இக்கலை வடிவச்செயற்பாடுகள் முன்னுதாரணமாக நடந்தேறியுள்ளமையினையும் வரலாற்று ரீதியாக நிரூபிக்கக் கூடியதாகவுள்ளது என்பது கவனத்திற்குரியது. தனிமனித முன்னெடுப்பாக மாத்திரம் அன்றி, அரசு ரீதியான முன்னெடுப்புகளும் இக்கூத்துக் கலைக்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளமையினைக் காணமுடிகின்றது. பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மட்டங்களில் இக்கலை கல்விப்புலத்தினுள் உள்ளீர்க்கப்பட்டமையினால் தேசிய, சர்வதேச மட்டங்களில் கோட்பாட்டு ரீதியாகவும், செயன்முறை ரீதியாகவும், அறியப்படவும், கற்கப்படவும், அதனூடாக இக்கலை தனக்கான அடையாளத்தினை ஈழத்தமிழர் தம் தேசிய கலை வடிவமாக பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கது.

**பால்நிலை சமத்துவ நோக்கு**

உடலியல், உயிரியல் அமைப்பே பால்நிலை (Gender) எனப்படுகிறது. சமூக கலாசார கட்டமைப்பு வேறுபாடுகளால் தான் மனிதரிடையே உடை, பழக்கவழக்கங்கள், நடத்தைகள், மனோபாவங்கள் போன்றவற்றில் வேறுபாடுகள் காணப்படுகிறதே அன்றி அவை இயற்கையாக உருவாகுபவை அல்ல. உடலியல் உயிரியல் வேறுபாடுகளால் ஆண், பெண் என்ற வேறுபாடு சமூகப் பால்நிலை எனப்படுகிறது. இதனையே, "நாம் ஆண், பெண் என இருவகை உயிரியல் பால்வகைகளாகப் பிறந்துள்ளோம். ஆனால் சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படும் ஆண்மை, பெண்மை என்ற குணங்களைக் கொண்டவர்களாக பால்நிலைகளாக உருவாக்கப்படுகிறோம் என்று கூறுகிறார், ஹா. ஹெய்டி (1999, p: 19). உண்மையில் பால்நிலை சமத்துவம் எனப்படுவது கருத்தியல் ரீதியில் உணரப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். அதாவது, பால்நிலை சமத்துவம் என்பது தமது முழுமையான இயலுமைகளுக்கேற்ப வளர்வதற்கான சமமான தகைமைகளும், சமமான வாய்ப்புக்களும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் கிடைத்தல் என்பதாகும். பால்நிலை சமத்துவம் பெண்களுக்கும், ஆண்களுக்கும் இடையேயான ஒரே தன்மையைக் கருதவில்லை. ஒருவர் மற்றவரது உரிமைகள், பொறுப்புக்கள் மற்றும் வாய்ப்புக்களை மதித்தல் என்பதாகும்.

கூத்து ஆற்றுகையில் பெண்களுக்கான பங்குபற்றுதல் தன்மையானது உதவியாளர்கள், பார்வையாளர்கள் எனும் அடிப்படையிலேயே காணப்பட்டது. பாரம்பரியமாக கூத்து நிகழ்த்தப்படும் கிராமங்களில் கலைஞர்களாக பெண்களையும் பரிணமிக்கச் செய்யும் போக்குகள் கடைப்பிடிக்கப்படவில்லை. நிகழ்த்துகையில் பெண் பாத்திரங்கள் (Characters) வரும் பொழுது ஆண்களே பெண்

பாத்திரங்களை ஏற்று ஆடும் முறைமையே வழக்கமானது. இது பால்நிலை சமத்துவ நோக்கில் பாரபட்சமான செயலாகக் காணப்படுவதுடன் கிராமிய முதலாளித்துவ போக்காகவும் தென்படுகிறது. குறிப்பாக முதலாளித்துவ கல்வி பற்றி கூகி வா தியாங்கோ (Ngugi Wa Thiongo) கூறும் பொழுது,

> முதலாளித்துவ கல்வி மக்களை வலுவிழக்க வைத்து, இதைச் செய்ய முடியாது. அதைச் செய்ய வராது. அதற்கெல்லாம் மிகச்சிறந்த மூளை வேண்டும் என நினைக்க வைக்கிறது. அறிவுத் தேர்ச்சியை காணக்கிடைக்காத அதிசயமாக்கி, எதார்த்தத்தையும் புறம் தள்ளும்; கல்விமுறை அது. மக்களுக்கு அவரவர் திறமை மற்றும் பண்புகளில் நம்பிக்கையளித்து தடைகளைத் தகர்க்கும் சக்தி ஊட்டி தம்மை ஆளும் விதிகளை நிர்ணயிக்க கூடியவர்களாக மாற்றாமல், இக்கல்வி முறை அவர்களது போதாமையை உணர வைத்து தம் வாழ்நிலைகளை மாற்றும் திறனற்றவர்களாக ஆக்கி விடுகிறது. (2004, p: 68)

என்கிறார். 21ம் நூற்றாண்டில் பிரதான சிந்தனைப் போக்குகளுள் ஒன்று பெண்ணியல் சிந்தனைகள் பற்றியதாகும். பின்நவீனத்துவத்தின் மையம் அழிப்பு, பன்முக அணுகுமுறைகள் என்பன இவற்றுள் முக்கியமானவை. இந்த அதிகார மைய அழிப்பு, பன்முக அணுகுமுறைக்கூடாக பேரா. வித்தியானந்தன் தனது கூத்துருவாக்க முன்னெடுப்புக்களில் ஆற்றிய இன்னுமொரு முன்னெடுப்பு பெண்களை ஆற்றுகையில் ஈடுபடுத்தியமை ஆகும். உதாரணமாக, 1960ம் ஆண்டு கால இராவணேசன் வடமோடி நாடகம் எனும் நாடகத்தைக் குறிப்பிட முடியும்.

பேரா. மௌனகுருவின் பின்வரும் கூற்று இதனை நியாயப்படுத்துகிறது:

> பேரா. வித்தியானந்தனது பிரதான பங்களிப்பாக மூன்று விடயங்கள் எனக்குத் தெரிகின்றன. ஒன்று சகல சாதி மாணவர்களையும் கூத்தில் இணைத்தமை, அடுத்தது முதன்முதலில் கூத்தில் பெண்களை ஆடவைத்தமை, மூன்றாவது ஐரோப்பிய பண்பாட்டினடியாக எழுந்த பல்கலைக்கழகத்தில் கிராம மத்தள ஓசையையும் சலங்கோசையையும் கேட்க வைத்தமை. இந்த பின்னணியில் தான் வித்தியானந்தன் கூத்தில் செய்த மாற்றங்களை நாம் நோக்க வேண்டும். (2021, p: 16 - 17).

அடுத்த முன்னெடுப்பாக பேரா. மௌனகுருவினால் எழுத்துருவாக்கம் பெற்று 2000ம் ஆண்டு காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட இராவணேசன் வடமோடி நாடகத்தினை கூறலாம். இப்படைப்பு காலத்தின் தேவை கருதி ஆறு காலக்கட்டங்களில் ஆறு விதமான ஆற்றுகைப் பரிமாணத்தினை பெற்றது. இது பற்றி இவ் ஆற்றுகையின் நெறியாளர் குறிப்பிடுகையில் “ஒரு பிரதி, காலம் தோறும் மாறலாம். ஆற்றுகையும் காலம் தோறும் மாறலாம் என்பதற்கு உதாரணம் நான் 2001, 2005, 2010, 2014, 2018, 2019 ஆகிய காலங்களில் மேடையிட்ட

இராவணேசன்.... 2010 இராவணேசனில் மண்டோதரி மீது எனது கவனம் குவிந்தது. இங்கு மண்டோதரியின் யுத்த எதிர்ப்பு குரலினால் தடுமாறுபவனாக இராவணன்" (Mounaguru 2021, p: 195) என்கிறார். பாரம்பரிய கூத்து மரபில் கவனத்திற்குட்படுத்தப்படாத பெண்களே பெண் பாத்திரம் தாங்குவதாகவும், பெண்ணியல் சிந்தனைகளுக்கு முன்னுரிமை அளிப்பதாகவும் இவரது தயாரிப்பில் மண்டோதரி பாத்திரம் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதாவது ஒரு பெண்ணாக, மனைவியாக, தாயாக மண்டோதரியின் குரல் இங்கு மேற்கிளம்புகிறது. யுத்தத்திற்கு இராவணன் தன் மகன் இந்திரஜித்தை அனுப்பும் பொழுது அதற்கு மண்டோதரி மறுப்பு தெரிவிக்கிறாள்; "இந்திரஜித் எனக்கும் மகனாவான். என்னை கேளாது என் அனுமதியின்றி எவ்வாறு என் மகனை போர்க்களம் அனுப்பலாம்?" என ஓங்கி ஒலிப்பதாக இப்பாத்திரம் சித்தரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த முன்னெடுப்பாக சீலாமுனைக் கிராமத்தினை மையப்படுத்திய மீளுருவாக்க முன்னெடுப்பினைக் கூறலாம். விடிய விடியக் கூத்துக்களை ஆடுவதற்கான வலு பெண்களிடம் இல்லை என்று வலியுறுத்தப்பட்டு பெண் கூத்துக்களுக்கு ஆண்களே வேடமிட்டு ஆடும் மரபு பேணப்பட்டு வருகின்றது. (2007, pp: 31 - 32) என்று கூறும் கௌரீஸ்வரன் (Gowreeswaran), "சீலாமுனைக் கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டில் கூத்தாடுவதற்கு ஆர்வமும் விருப்பமுடைய பெண்களை இணைத்துக் கொள்வதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டன" (2007, pp: 31 -32) என்றும் கூறுகிறார். இதிலிருந்து சீலாமுனை வடமோடிக்கூத்து மீளுருவாக்க செயற்பாட்டிலும்; பெண்ணியற் சிந்தனைகளை மையப்படுத்திய படைப்புருவாக்கங்கள் நிகழ்ந்துள்ளமை தெளிவாகிறது.

ஒரு வகையில் கூறினால் பேரா. வித்தியானந்தனது புரட்சிகர படைப்பாக்க சிந்தனைகளது கலை வெளிப்பாட்டினது நீட்சியாகவும், தொடர்ச்சியாகவும் இதனை காணமுடிகின்றது எனலாம். இவை தவிர, பல்கலைக்கழகங்களிலும் குறிப்பாக கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் கற்றல் செயற்பாட்டில் கூத்தானது கற்பிக்கப்படுகிறது. இதில் மாணவர்கள் எந்த வித வேறுபாடு இன்றியும், தயக்கமின்றியும் ஆற்றுகையில் பங்கெடுப்பதும் நிகழ்கிறது. இதுவரை நோக்கியதில் கிராமங்களில் ஆணாதிக்க அதிகார மையமாக நிகழ்த்தப்படும் கூத்து ஆற்றுகையில் பெண் பங்குபற்றுனர்களுக்கும், பெண்மைய சிந்தனைகளுக்கும் வழங்கப்படாத முக்கியத்துவத்தினை 1960 களிற்கு பிற்பட்ட கூத்து முன்னெடுப்புக்களில் குறிப்பாக வடமோடிக் கூத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளமையினையும் அச் சமத்துவத்தினை இம்முற்போக்கு சிந்தனையாளர்கள் மேற்கொண்டுள்ளமை பால்நிலை சமத்துவ ரீதியிலான புரிதல்களுக்கும், கற்றல்களுக்கும் எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

**புத்தாக்க படைப்புக்கள்**

ஒரு கலை அதனது சமூகத்தினை பிரதிபலித்து நிற்கின்றது. உள்ளதை உள்ளவாறு பிரதிபலிப்பது மாத்திரமன்றி அக்கலையானது சமூகத்திற்கு பயன்பாடுடையதாக இருத்தல் என்பது அவசியமானது. அது காலத்தின் தேவையும்கூட. கலையின் இருப்பும் அதில்தான் தங்கியுள்ளது. கலைகள் தோற்றம் பெற்றதாக கூறப்படுகின்ற ஆதி மனிதர் காலத்திலும் அவை பல தேவைகளை பூர்த்தி செய்துள்ளன. குறிப்பாக வேட்டையாடிய மனிதர் தமது வேட்டை நிகழ்வுகளை ஓவியங்களாகவும், தம் மகிழ்வுகளை கத்தி கூச்சலிட்டு இசையாகவும், துள்ளிக் குதித்து ஆடலாகவும் வெளிப்படுத்தியுள்ளமையினை வரலாறுகள் எடுத்துக்காட்டுகின்றன. இதன் ஊடாக ஒரு குழுமத்தினுடைய பண்பாட்டினை, காலம் கடந்தும் கலைகள் தெரியப்படுத்தி நிற்கின்றன. இதன் மூலம் கலையானது சக்தி மிக்கது என்பது தெளிவாகிறது. குறிப்பாக உலக மகா யுத்தத்தின் பின்னர் சமூக அவலங்களையும், இழப்புக்களையும் உள ஆற்றுப்படுத்தல் நோக்கில் நவீன ஓவியர்கள் ஓவியங்களாக வரைந்துள்ளனர். இவை ஓவியக் கலையில் பல இசங்கள் தோன்றுவதற்கு ஏதுவாயின. இவற்றிலிருந்து ஒவ்வொரு காலகட்டங்களிலும் கலைகள் சமூகத் தேவைகளை பூர்த்தி செய்வதில் மிகச் சிறந்த ஊடகமாக இருந்துள்ளமை நோக்கத்தக்கது. இத்தகைய சமூகவியற் பின்னணியில்தான் வடமோடிக் கூத்துக் கலையினை ஆராய வேண்டியுள்ளது.

கிராமங்களில் கூத்துக்கலை இன்றளவும் அதனது இயல்பிலே ஆற்றுகை செய்யப்படும் போக்குகள் இடம்பெற்றாலும் கூத்துக்கலையினை அடிப்படையாகக் கொண்ட பல படைப்புக்கள் புதிய வடிவங்களைப் பெற்றுள்ளன. இன்னுமொரு வகையில் கூறினால் புதிய வடிவங்கள் தோன்றுவதற்கு வடமோடிக் கூத்து மரபு தனது பங்களிப்பினை வழங்கி நிற்பதோடு பல படைப்புக்களுக்கான நோக்கத்தினை அடைவதற்கான விடயங்களை (ஆடல், பாடல், தாளக்கட்டுக்கள்) வடமோடி மரபு தன்னகத்தே கொண்டுள்ளமையே அதனது சிறப்பாகும். உதாரணமாக, 'சங்காரம்' எனும் நாடகத்தைக் குறிப்பிட முடியும். இது, சாதி, மத, நிற வேறுபாட்டினை ஒழிப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட ஓர் ஆற்றுகை வடிவமாகும். பேரா. சி. மௌனகுரு அவர்கள் சங்காரத்தின் மூலம் கூத்துக்குப் புதிய சமூக உள்ளடக்கத்தைக் கொடுத்து கூத்தின் அடுத்தக்கட்ட வளர்ச்சியை ஏற்படுத்தியிருந்தார் (சிவரெத்தினம். சு, 2022. பக். 73). சங்காரம் நாடகத்தின் நெறியாளரான மௌனகுரு (Mounaguru) அவர்கள் குறிப்பிடும் பொழுது,

> அரசரும் கடவுளரும் வந்த கூத்தில் மக்கள் வந்தனர். வடமோடிக்கூத்தில் அரசருக்கும் அரக்கர் கடவுளருக்கும் கொடுப்பட்ட ஆடல், பாடல் யாவும் இங்கு மக்களுக்கும் அளிக்கப்பட்டது. வடமோடிபாணி கூத்து வடிவம், ஆனால் புதிய

> உள்ளடக்கம். புதிய கூத்து…முதல்முதலில் மக்கள் போராட்டம் பற்றிக் கூறிய மட்டக்களப்பு வடமோடிக் கூத்து இதுவென்றே நான் நினைக்கிறேன்…இதில் பங்குகொண்டோர் மரபுவழிக்கூத்துக் கலைஞர்கள். இவர்களிற் பலர் வட்டக்களரியில் விடிய விடிய கூத்தாடியவர்கள், இதில் மட்டக்களப்பின் சகல சாதியிலிருந்தும் கூத்துக்கலைஞர்கள் கலந்து கொண்டனர்…ஒரு வகையில் நான் ஏற்கனவே கூறியபடி மட்டக்களப்பிலே கிராமங்களில் சாதி அமைப்பை கட்டி காத்த வடமோடிக்கூத்து இங்கே சாதி அமைப்புக்கு எதிராகக் குரல் தருகிறது. சாதி கலந்து ஆட வைக்கிறது சாதி அரக்கனைச் சாய்க்கிறது (2021, p. 177)

என்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. நாடகங்கள் வடமோடி கூத்தினை அடிப்படையாகக் கொண்டு புதிய படைப்புக்களாக எழுச்சி பெற்றமையினை இவ்வாறு அறிய முடிகின்றது.

அடுத்து வடமோடிக் கூத்தினடியாக எழுந்த இராவணேசன் எனும் பெரும் படைப்பானது பின்வரும் பரிமாணங்களை எடுத்துள்ளமையும் கூறத்தக்கது.

- 1954 இல் இராவணன் அரக்கனாக அன்றி மனிதனாக மானுட ஆசாபாசமுள்ளவனாகச் சித்தரிக்கப்பட்டான்.
- 2001 இல் இராவணன் துன்பியல் நாயகனாக போரிலே தோற்பேன் என அறிந்த பின்னரும் போரை கைவிட முடியாதவனாகச் சித்தரிக்கப்பட்டான்.
- 2010 இல் 2011 இல் இராவணன் விமர்சனத்திற்குட்பட்டவனாகச் சித்தரிக்கப்பட்டான். இதில் மண்டோதரியின் போருக்கு எதிரான குரல் இராவணனின் போர்க்குரலையும் விட விஞ்சி ஒலிக்கிறது.
- 2011 இல் 2014 இலும் இராவணேசன் நாடகத்தில் போருக்கு விருப்பமின்றி செல்லும் இளவலாக இந்திரஜித் முதன்மை பெறுகிறான். மகனைப் போருக்கு அனுப்பி விட்டு புழுங்கும் அப்பாவாக இறுதிக் காட்சிகளில் அவன் சித்தரிக்கப்படுகிறான்.
- 2017, 2018 இல் அந்நியப் படையெடுப்பு ஒன்று இராவணக் குடும்பத்தை அலைக்கழித்த விதமும் அந்நியப் படையெடுப்பினால் வரும் அவலங்களும் பிரதானப்படுத்தப் படுகின்றன.
- 2018 இல் இராவணன் வயது முதிர்ந்தவனாக ஒரு ஞானியாக இராவணன் போரையும் அதனால் வரும் பிரச்சினைகளையும் எதிர்கொள்பவனாக சித்தரிக்கப்பட்டான்.
- 2001 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் நிகழ்ந்த அரசியல் நிகழ்வுகளோடு இவை பிணைந்திருப்பதாக பேராசிரியர் பெர்நாட் வியாக்கியானித்து இதனை ஒரு வளர் இதிகாச நாடகம் என அறிமுகமும் செய்தார் (Mounaguru, 2023, பக். 24 - 25).

ஓர் படைப்பு எவ்வாறு புதிய சிந்தனை மாற்றங்களினூடு காலம் தோறும் மாறி ஒவ்வொரு முறையும் புதிய படைப்பாக உருவாக்கம் பெற்றிருக்கிறது என்பதற்கும், ஓர் கலை வடிவம் தனது படைப்புருவாக்கத்தின் மூலம் சமூகத்திற்கு சிந்தனைக்கும் கற்றலுக்குமுரிய விடயங்களை தருகின்றமைக்கும் இராவணேசன் வடமோடி நாடகம் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இதுபோன்று பேரா. மௌனகுருவின் சூழல் பாதுகாப்பு என்ற கருவை மையமாகக்கொண்டு வடமோடி பாணியில் அமைந்த "காண்டவதகனம்"; , வடமோடிக் கூத்து கலந்த "புதிய முறையில் இமயத்தை நோக்கி" எனும் உலகம் வெப்பமடைதல் சம்பந்தமான கருவைக் கொண்ட நாடகம், "தோற்றம்" எனும் சூரியனிலிருந்து வெடித்து சிதறி éமி உருவாகிய கதையினைக் கொண்ட வடமோடிப் பாணி நாடகம் மற்றும் வடமோடி கூத்தினை அடிப்படையாகக் கொண்ட "கூத்தும் பரதமும்" எனும் புதிதளித்தல் நிகழ்வு என்பவற்றையும் புதிய படைப்புருவாக்கங்களாக எடுத்துக்கூறலாம் (Mounaguru, 2021, pp.198 – 202). இவை தவிர, பல தெருவெளி நாடக அரங்குகளிலும் கதைநகர்விற்கேற்ப வடமோடி ஆட்டக்கோலங்களை, தாளக்கட்டுக்களை உள்வாங்குகின்ற போக்குகளும் பரவலாக காணப்படுகின்றன.

பாரம்பரிய வடிவில் வடமோடிக் கூத்து நிகழ்த்துகை செய்யப்படுதல் அவசியமானாலும் இக் கலையினை எதிர்காலத்திற்கு முன்னெடுக்கும் தொடர் செயற்பாட்டில் மேற்கண்ட விடயங்களும் காத்திரமான பங்களிப்பினை வழங்கி நிற்கின்றமை தெளிவாகிறது. ஆக்கéர்வமான மாற்றங்களிçடாக இக் கலை வடிவம் இன்று சர்வதேச ரீதியில் அறியப்பட்ட, அடையாளப்படுத்தப்பட்ட பாரம்பரிய கலையாக திகழ்கின்றமையானது அதனது அறாத் தொடர்ச்சியினாலே சாத்தியமாகியுள்ளமையினைக் காண முடிகிறது.

## முடிவுரை

கற்றல் என்பது தொடர் நிகழ்வு. ஒவ்வொரு உயிரினங்களும் ஏதோ ஒரு வகையில் தம்மளவில் கற்கின்றன. சமூகப் பிராணியான மனிதன் தனது அறிவு, ஆற்றல், அனுபவம், கண்டுபிடிப்பு, சூழல் போன்ற பலவழிகளினூடாக நாளாந்தம் கற்கின்றான். பாடசாலை, பல்கலைக்கழக கல்வி இன்னொரு தளத்தில் இடம்பெறுகிறது. இவை அனைத்திற்கும் மனிதனுக்கு மூல காரணமாக இருப்பது சிந்தனையாற்றல். எனவே தான் சிந்திக்கும் ஆற்றல் மனிதனையும் அவனது செயற்பாடுகளையும் அடுத்த கட்டத்திற்கு நகர்த்திக் கொண்டிருக்கின்றன. இதனடியாகவே கலைகளும், முற்போக்குச் சிந்தனைகளுக்கூடாக நீண்ட காலம் நிலைத்து நிற்கும் நோக்கில் தனது நிகழ்த்துகை அழகியல் சார்ந்து பல

வடிவங்களை எடுக்கின்ற இச்செயற்பாடுகள் ஒரு கட்டமைக்கப்பட்ட விடயத்தினை கட்டுடைத்துப் பார்ப்பதனூடாக நிகழ்கிறது. இவ் ஆய்வு கருத்திற் கொண்ட முன்னெடுப்புக்களில் படைப்பாளிகள் வடமோடிக் கூத்தின் அடிப்படை அம்சங்கள் மாறாது. ஆனால் அதனது கருத்தியல்களிலும், வடிவமைப்பிலும் எமது கலையினை நீண்ட காலம் நிலைத்து நிற்கச் செய்யும் தூரநோக்கினை மையமாகக் கொண்டும் சமகாலத்திற்கேற்ப மீட்டெடுக்கும் நோக்கிலும், அடையாளப்படுத்தும் நோக்கிலும் தமது படைப்புக்களை முன்னெடுத்துள்ளமை தெளிவாகிறது. இவர்களது படைப்புசார் முன்னெடுப்புக்கள் அவற்றை அடியொற்றிய கற்றல் ரீதியான சிந்தனை மாற்றங்களையும், பெறுமானங்களையும் வெளிப்படுத்தி நிற்பதுடன் கலை என்பது ரசனைக்காக, பொழுதுபோக்குக்காக மட்டுமன்றி அதில் சிந்தனைகளையும், கண்டுபிடிப்புக்களையும், புதிய உருவாக்கங்களையும் தூண்டச் செய்கின்ற அறிவூட்டும் விடயங்களையும், கற்றல் பெறுமானங்களையும் எதிர்கால சந்ததியினர்க்கு தந்து நிற்கின்றமை உறுதியாகிறது.

References

Agaththiyalingam, S,P (2020). *Saathiyam: Vergal – Vilaivugal – Savalgal,* Bharathy Puththagalayam, Chennai.

Aingaranesan, P (2006). *Vermugangal (Nerkaanalkalin Thoguppu),* Chennai

Sitralega, M (2007). *Pen Anupavam Ilakkiyam*, Vipulam Pathippagam, Mattakkalappu.

Gowreeiswaran, T (2007). *Kooththu Meeluruvakkam Kotpadum Seyatpadum,* Moonravathu Kan Ulloor Arivu Thiran Seyatpattuk Kuzu, Mattakkalappu.

Heiti, H (1999). *Marksiyamum Pen Nilaivathamum Mika Mutpokkana oru Koottinaivai Nookki,* (M.Sitraleka, Tamil Trans.), Soorya Penkal Apiviruththi Nilayam, Mattakkalappu.

Maunaguru, S (2014). *Mattakkalappu Marapuvazi Naadagangal*, Kumaran Puththaka Illam. Colombo.

--- (2021). *Kooththe Un Panmai Azagu*, Kumaran Puththaka Illam, Colombo.

--- (2021). *Kooththa Yaaththirai (Nan Kondathum Koduththathum*), Kumaran Puththaka Illam, Colombo.

--- (2023). *Iravanesan Arangadiyor Anupavam* (Sivaretnam,S & Mohanathasan,K, Eds.), Bharathi Puththakalayam, Chennai.

Ngugi Wa Thiango (2004). *Adayala Meetpu*, (A. Mangai, Tamil Trans.) Puthuchcheri, Chennai.

Sivaretnam, S (2022). *Kooththin Arasiyal (Aranga Vimarsanak Katturaikal*), Bharathy Puththagalayam, Chennai.

World University Service of Canada. (2009). A programming framework to address Gender Based Violence. In *Women Defining Peace*. COWATER International and MATCH International.

# வேதஉபநிடதக் கர்மக் கோட்பாட்டிற்கும் ஆசிவக ஊழ்க் கோட்பாட்டிற்கும் இடையிலான ஓர் ஒப்பீட்டாய்வு

# A Comparative Analysis of the Doctrine of *Karma* in *Veda* and *Upanishad* and the Doctrine of Destiny in *Ajeevaga*

K. Mathiseelan[11] & R. Premkumar[12]


## Abstract

*Indian philosophers traditionally divide and discuss Indian philosophical ideas as orthodox and heterodox systems of Indian philosophy. In this category Hindu philosophy comes orthodox system of Indian philosophy. Ajeeviga philosophy comes under heterodox system of Indian philosophy. There are many conflicts among the ideas of Vedic philosophy and Ajeeviga philosophy. This research tries to find the ideas which are similar and those which are different between Vedic philosophy and the philosophy of Ajeeviga.*


***Keywords**: Hindu philosophy, Ajeeviga, Karma, Destiny, Vedic philosophy*

இந்திய உபகண்டத்தில் தோன்றிய சமயங்களை வைதிகமாகவும் அவைதிகமாகவும் பிரித்து நோக்குகின்ற மரபு எம்மத்தியில் இருந்து வருகின்றது. வேத ஆகமக் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட சமயங்களை வைதிக சமயமாகவும், அவற்றை ஏற்றுக் கொள்ளாத சமயங்களை அவைதீக சமயமாகவும் கொள்கின்றனர். அந்த வகையில் ஆசிவகம், உலகாயுதம், ஜைனம், பௌத்தம் போன்றன அவைதீகப் பிரிவுக்குள் அடங்குகின்றன. ஏனைய சமயங்கள் அனைத்தும் வைதீகத்தினுள் அடக்கம் பெறுகின்றன. அவைதீக சமயங்களுள் ஒன்றாகிய ஆசிவகமானது கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்து வந்த ஒரு சமயமாகவும் அறிஞர்கள் கொள்வர்.(விஜயலெட்சுமி,1988, ப.v) 'ஊழ்' எனப்படும் விதி ஆசிவகர்களின் மதக் கருத்தின் மையக்கருத்தாகும். கர்மா எனப்படும் வினை என்பது ஜைனர்கள், பௌத்தர்கள், இந்துக்கள் ஏற்றுக்கொள்ளும் ஓர் எண்ணக் கோட்பாடு ஆகும். இந் நிலையில் ஆசிவகத்தின் ஊழ்க்கோட்பாட்டிற்கும் இந்துமத வேத, உபநிடதங்களில் குறிப்பிடப்படுகின்ற கர்மக் கோட்பாட்டிற்கும் இடையிலான ஒத்த போக்குகளையும் தனித்துவங்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்து வெளிப்படுத்துவதாய் இவ்வாய்வு அமைகின்றது.

[11] *Corresponding author; Serving as Senior Lecturer, at Eastern University, Sri Lanka; mathiseelank@esn.ac.lk*
[12] *The author holds doctorate degree in philosophy, and is attached as Senior Lecturer at Department of Value Studies and Philosophy, Eastern University, Sri Lanka; premkumarr@esn.ac.lk*

'கர்மம்' என்பது சமஸ்கிருதச் சொல் ஆகும். 'க்று' என்ற வினையடியிலிருந்து பிறந்ததே இதுவாகும். செய் என்பது இதன் பொருளாகும். இது செயல், வினை என்பதாகவும் அமைகின்றது. (Krishan 1997, p.4) இதனை பாளியில் 'கம்மா' எனப் பயிலப்படுவதாக வல்பொல இராகுல குறிப்பிடுகின்றார். (வல்பொலராகுல, 1989, ப.37) தத்துவ ஞானவுலகிலே கர்மம் என்ற சொல் சற்று விரிந்த கருத்துடையது. ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு நோக்கம் உண்டு. பலனுண்டு அப்பலனை அனுபவித்தலும் ஒரு செயலாகும். இவை அனைத்தையுமே கர்மம் என்ற சொல் உள்ளடக்குகின்றது. செயல் மட்டுமன்றி, எண்ணம், சொல் ஆகியவையும் கன்மத்துள் அடங்கும். (லக்ஸ்மணன் 2000, ப.415)

**வேத இலக்கியங்களில் கர்மக் கோட்பாடு**

இத்தகைய கர்மம் என்ற எண்ணக்கரு தொடர்பாக வேத இலக்கியங்களில் பயிலப்படுகின்ற கருத்துக்களை ஆராய முனைகையில், முற்பட்ட கால வேத பாடங்களில் கருமக் கொள்கை மிக மங்கலாகக் காணப்படுகின்றதாக குறிப்பிடும் இராதாகிருஷ்ணன் கருமக் கொள்கை நற்செய்கையின் பயனால் இன்பத்தை அனுபவிப்பதை நம்புவது மட்டுமன்று. மனிதன் தான் முன்னே செய்தவற்றின் பயனால் இப்போது அவன் தோன்றியதைக் குறிக்கும் என்கின்றார். மேலும் அவர் மீண்டும் இவ்வுலகத்திற்கு வர முடியும் என்ற நம்பிக்கைகள் வேதத்தொடர்பில்லாததும் வேதகாலத்திற்கு முற்பட்டதுமான நாகரிகத்தின் படி இறந்தவர்களை எரிக்காமல் புதைக்கின்றமைக்கு ஆதாரமாகின்றது. சந்நியாசிகள் உடலை எரிப்பதில்லை. வேதகால நாகரிகத்தினைப் போல் எரியூட்டுதல் என்பது அவர்களுக்குத் தெரியாமல் இருந்தது மாத்திரமல்ல சன்னியாசிகள் தம் யோக ஆற்றலால் மீண்டும் உயிர் பெற முடியும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருப்பதனால் அவர்கள் உடலை எரிப்பதில்லை.(இராதாகிருஷ்ணன், 1979, பக். 46-47)

இவ்வாறு இருந்த போதிலும் இருக்கு வேதத்தின் 10, 14, 8, 18, 64 ஆகிய வசனங்களின்படி வேள்வியாலும் அறச்செயல்களாலும் அமையும் நலன்கள் பிரிந்த உயிருக்கு மறுமையில் பயன் விளைவிக்கின்றன எனக் கூறப்படுகின்றது. மற்றும் வேதகால இறுதிப் பகுதியில் குறிப்பாக சதபத பிராமணம் 10, 6, 3, 9 என்ற பகுதிகளில் மனிதன் ஆசைகளால் ஆனவன் ஆதலால் அவற்றிற்கு ஏற்ப மறுமையில் பிறப்பான் என குறிப்பிடப்பட்டுள்ளன.(மே.கு.நூ.,ப.69)

இவ்வாறு வேதகால ஆரம்பத்தில் கர்மக் கோட்பாடு பற்றிய சிந்தனை தெளிவில்லாத நிலையிலேயே காணப்பட்டதெனவும் வேதத்திற்கு முற்பட்ட கால நாகரிகத் தொடர்பு காரணமாக மறுபிறப்புக் கொள்கையும் உள்வாங்கப்பட்ட

நிலையில் கர்மக்கோட்பாடு படிப்படியாக வளர்ச்சி அடைந்திருந்தாலும் முழவளர்ச்சியையும் பெற்று விடவில்லை என்பதனை வேதகாலப் பாடல் எமக்கு உணர்த்துகின்றன எனலாம்.

**உபநிடதங்களில் கர்மக் கோட்பாடு**

வேதங்களுடன் ஒப்பிடுகையில் கர்மம் தொடர்பான சிந்தனைகள் உபநிடதத்தில் புது விளக்கம் பெறுகின்றன. கர்மா என்பது வேள்விச் செயல்களின் பயன் மாத்திரமன்றி அனைத்துச் செயல்களின் பயனுமாகும் என்பது உபநிடத விளக்கம். ஆனால் வேத காலத்தில் உடனடிப் பயனை விளைவிப்பனவாகவே ஒவ்வொரு செயல்களும் அமைவதாகக் கருதப்பட்டது. இந்நிலையில் உபநிடதங்களில் கர்ம மறுபிறப்புச் சிந்தனை மேலோங்கி கர்மத்திற்குப் புது விளக்கத்தினைக் கொடுத்தன.(இன்பநாதன்,1994, ப.14)

கர்மம் பற்றிய விளக்கமான குறிப்பினை முதலில் பிருகதாரண்யகத்தில் காண முடிகின்றது. யாக்ஞவல்கியர் அவர்களின் கன்ம மறுபிறப்புத் தொடர்பான விரிவான விளக்கத்தினை இவ்வுபநிடதம் சுருக்கித் தருகின்றது:

> அக்கினியே! எமது கருமங்களின் பயனை அனுபவிப்பதற்கு நல்ல கதிவழியாக எம்மை அழைத்துச் செல்லும் தேவனே! எங்கள் எல்லாச் செயல்களையும் நினைவுகளையும் நீவீர் அறிவீர். எமது வஞ்சனை ஒழுக்கமாகிய பாவத்தை அழித்துவிடும்.; எங்கள் வணக்க மொழிகளால் உம்மை மீண்டும் மீண்டும் வழிபடுகின்றோம். ஈசாவாசியம் 18வது சுலோகம்-(அஜராத்மானந்தர்,1987, பக்.21-23).

பிரச்ன உபநிடதத்தின் ஐந்தாம் அத்தியாயம் நான்காவது சுலோகம் மறுபிறப்புப் பற்றி கூறுகையில் "மேலும் இரண்டு மாத்திரையால் தியானித்தால் யஜுர் வேத வடிவான சோம தேவதையுடன் ஒன்று படுகின்றான். அவன் இறந்தபின் அந்தரிக்ஷ உலகை அடைகிறான் யஜுர் வேத மந்திர தேவதைகளால் ஸோமலோகத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்றான். அவன் ஸோம லோகத்தின் பெருமையை அனுபவித்து மீண்டும் மனித உலகிற்குத் திரும்பி வருகின்றான்."

கன்ம மறுபுறப்புக்கான நிவர்த்தி தொடர்பாகவும் பிரச்ன உபநிடதம் 5.5 குறிப்பிடுகையில்

> எவன் பரம புருஷனை மூன்று மாத்திரைகளுடன் கூடிய ஓம் என்ற அட்சரத்தால் தியானிக்கின்றானோ" அவன் சூரிய ஒளியில் ஒன்று படுகின்றான். இறந்தபின் உலகத்திற்குத் திரும்பி வருவதில்லை. கிரமமுத்தி எய்துகிறான். எங்ஙனம் பாம்பு தன் சட்டையினின்று விடுபடுகின்றதோ அங்ஙனம் அவன் பாவத்தினின்று விடுபட்டவன் ஆகின்றான். ஸாமங்களால் அவன் பிரம்மலோகத்திற்கு அழைத்துச் செல்லப்படட்டும் (அண்ணா, 1965, பக்.34-35).

கர்மம் அழிந்து மோட்சம் அடையும் முறை பற்றி முண்டக உபநிடதம் இரண்டாம் அத்தியாயம் 7ம் வசனம் குறிப்பிடுகின்றது:

> மோட்ச காலத்தில் பதினைந்து கலைகளும் தத்தம் மூலஸ்தானத்திற்குச் சென்று விடுகின்றன. நான்கு இந்திரியங்கள் அனைத்தும் தத்தம் அதிஷ்டான தேவதைகளிடம் சென்று விடுகின்றன. பற்று நீங்கிய எல்லாக் கருமங்களும் விஞ்ஞானமயமான ஆத்மாவும் அழிவில்லாப் பரம்பொருளில் ஒன்று படுகின்றன. (மே.கு.நூ,ப.86)

இவ்வாறு வேத காலத்தைப் போலல்லாது உபநிடத காலத்தில் மறுபிறப்புப் பற்றிய சிந்தனை முழு வளர்ச்சி அடைந்த நிலையில் கர்ம மறுபிறப்புத் தொடர்பான போதனைகளும் கர்மம் தொடர்பான தெளிவான உரையாடல்களும், போதனைகளும் நிகழ்த்தப்பட்டமையை அறிய முடிகின்றது. இந்த வகையில் ‘கர்மம்’ பற்றிய கருத்து வளர்ச்சி சற்று மேம்பட்ட வகையில் உபநிடதத்திலே முழுமை பெற்றது எனவும், அவை பின்வந்த தத்துவ சிந்தனைகளிலும் சமய இலக்கியங்களிலும் விரிவுபடுத்தப்பட்டு வளர்ச்சி பெற்று வந்துள்ளதையும் அறிய முடிகின்றது.

**ஆசிவகத்தில் ஊழ்க் கோட்பாடு**

**ஆசிவகம்**

இந்தியச் சமயங்களின் வரலாற்றில் ஆசிவகத்திற்கெனத் தனியிடம் உண்டு. ஜைனம், பௌத்தம் ஆகிய இரு சமயங்களும் தோன்றிய அதே கால கட்டத்தில்தான் ஆசிவகமும் தோற்றம் கொண்டது. இதன் நிறுவனராகிய மற்கலி கோசலர் என்பவர். மகாவீரர், புத்தர் ஆகிய இருவரின் சமகாலத்தவராகிய இவர் அவர்களை விடப் பெரும் செல்வாக்கு மிகுந்தவராகத் திகழ்ந்துள்ளார். எனினும் அவரைப் பற்றிய ஆய்வுகள் யாவும் அவரைக் கடுமையாக எதிர்த்த ஜைன, பௌத்த இலக்கியங்களின் அடிப்படையிலேயே அமைந்தன. மற்கலி கோசலர் பற்றிய ஆய்வைப் போலவே அவர் உருவாக்கிய ஆசிவகம் பற்றிய ஆய்வுகளுக்கும் ஜைன பௌத்த சமயங்களே அடிப்படைகளாகக் கொள்ளப்பட்டன. ஆசிவகம் என்ற பெயர் கூட அதனை எதிர்த்தவர்களால் சூட்டப்பட்டது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.(நெடுஞ்செழியன், 2023, ப.1)

மேலும் ஆசிவகம் ஜைன - பௌத்த சமயங்களைப் போலவே வடநாட்டில் - மகத நாட்டின் தலைநகராகிய பாடலியின் அருகே ‘சாவந்தி’ நகரில் உருவானது என்றும் ஆய்வாளர்கள் நம்பியும் கூறியும் வருகின்றனர்.( Basham, p.56) இச் சூழலில் ஆசிவகம் தமிழ்நாட்டில் தோன்றியது என்பதையும், அதனை உருவாக்கிய மற்கலி தமிழரே என்பதையும், அவர் சங்கப்புலவராக இருந்துள்ளார் என்பதையும்

இன்றைக்குத் தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் ஆற்றங்கரைகள், ஏரி, குளக்கரைகள் ஆகிய இடங்களில் எல்லாம் கோயில் கொண்டுள்ள ஐயனாரே அவர் என்பதையும் அண்மைக்கால ஆய்வுகள் உறுதிசெய்துள்ளன.(நெடுஞ்செழியன்.,ப.1)

வைதிகக் கருத்துக்களை எதிர்த்தெழுந்த குழவினர் இருவகைக் அடிப்படைக் கருத்தைக் கொண்டு விளங்கினர். ஜைனர்களும் பௌத்தர்களும் வினைக் கொள்கையை தம்மதத்தின் அடிப்படையாகக் கொண்டனர். இவ்வினைக் கொள்கையை ஏற்காத துறவிகளாகிய ஆசிவகர்கள் ஆறு குழுக்களாகச் சேர்ந்து இயங்கினர். பூரணகச்சபன், மற்கலிகோசலன், அஜிதகேச கம்பளி, பகுடகச்சாயணன், சஞ்சய பெலத்திபுத்திரன், நிகண்ட நாதபுத்திரன் ஆகிய அறுவரும் தனித் தனிக் கொள்கைகளைக் கொண்டிருந்தாலும் மற்கலி கோசலர் ஒருவரின் கொள்கை மாத்திரமே தனிமதமாக உருவாகி வளர்ந்ததாக ஆதாரங்களின் வாயிலாக அறியமுடிகின்றது.(விஜயலட்சுமி, 1988, ப.10)

### ஊழ்க் கோட்பாடு

ஆசிவகத்தின் முதன்மைக் கோட்பாடும், அடிப்படைக் கோட்பாடும் நியதி எனப்படும் ஊழ் அல்லது ஊழ்கக் கோட்பாடு ஆகும். இக் கோட்பாட்டினை விதிகோட்பாடு எனவும் அழைப்பர். மற்கலி கோசலரின் முடிவான கோட்பாடும் இதுவேயாகும். இக் கோட்பாட்டினை ஜைனத்திலோ, பௌத்தத்திலோ, அன்றைய இந்து மதத்திலோ காண முடியாது. இந்த பெரு அண்டவெளியில் ஊக்கக் காரணியாகச் செயற்படுவது விதியாகும். இவ்வுலகத்தின் மாற்றங்களின் முகவராய் விதி உள்ளது. ஊழ்கம் எனும் விதியின் தாக்கத்தினாலேயே ஒருவரின் வாழ்வில் பெருங்குற்றங்கள் நிகழ்த்தப்படுகின்றன. ஒரு மனிதனின் செல்வத்திற்கும், சமூகத் தகுதிக்கும் அவரின் துன்பத்திற்கும் இன்பத்திற்கும் பிறப்பு, இறப்பு, போன்றவற்றிற்கும் காரணம் ஊழ் என்பதேயாகும் .

### ஒப்பீடு

வேத, உபநிடதக் கர்மக் கோட்பாட்டிற்கும் ஆசிவக சமயம் கூறும் ஊழ்க் கோட்பாட்டிற்கும் இடையிலான ஒப்பீடு பற்றிச் சிந்திக்கையில், விதியும், வினையும், ஊழும் வினையும் ஒரு பொருட் குறித்த சொற்களாக இலங்கியங்களில் கையாளப்பட்டும் அது போலவே இவற்றிற்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டும் வந்துள்ளதைக் காண்கிறோம். ஆனால் உண்மை நிலை அதுவல்ல. ஊழ் வேறு, வினை வேறு, கர்மா வேறு, விதி வேறு, ஊழும் விதியும் அது போலவே வினையும் கர்மாவும் ஒருபொருட் குறித்த இரு சொற்கள். ஊழ் எனும் விதி ஆசிவகர்கள் மதக்கருத்தின் மையக்கல். கர்மா எனும் வினை வேத,

உபநிடதங்களில் ஏற்றுக்கொள்ளப்படும் ஓர் எண்ணக் கோட்பாடு. ஊழ் எனும் விதியின் செயற்பாடு தனிமனிதனின் முயற்சியையோ செய்கையையோ அடிப்படையாகக் கொண்டதல்ல. ஊழ் எனும் விதி ஓர் உயிர் கருவில் பட்டபோதே நியமிக்கப்பட்டவிடும். ஆனால் கர்மா எனப்படும் வினையோ முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு, ஒரு மனிதன் ஒன்றனைத் துய்க்கும் போது அது, அவன் இன்றோ, நேற்றோ, இப்பிறவியிலோ, முற்பிறப்பிலோ செய்த செயலின், எண்ணத்தின் அடிப்படையாக வந்த விளைவாகவே இருக்கும்.((மு.கு.நூ.,விஜயலட்சுமி,1988,ப. xii)

மேலே குறித்துக் காட்டப்பட்ட வேத,உபநிடதங்களின் கர்மக் கோட்பாட்டினை ஆசிவகம் ஊழ்க்கோட்பாட்டின்படி மறுக்கின்றது என்றே குறிப்பிடமுடியும். இவ் ஊழ்க்கோட்பாட்டானது எதுவும் மனித முயற்சியால் நிகழ்வதல்ல. எல்லாம் முன்னமே முடிவு செய்யப்பட்டன. அதன் வழிப்பட்டே அந்நிகழ்வுகள் நிகழ்கின்றன என்கின்றது. இதனை நியதி, ஊழ்முறை என வழங்கினர். இல்லது தோன்றா உள்ளன மறையா என்பதன் வழி எவ்வளவுதான் முயற்சித்தாலும் இல்லாததொன்றினை உருவாக்கலும் உள்ளதை முற்றிலும் அழித்தலும் இயலாது. ஓர் உயர்ந்த இடத்தில் இருந்துகொண்டு நூல்கண்டு ஒன்றினை நீளவிட்டால் அது எவ்வளவு நீளம் உள்ளதோ அவ்வளவு நீளம் நீளமுடியும். அதுபோல் ஊழின் போக்கு எப்படியுள்ளதோ அவை போலவே மனிதச் செயல்களும் அமையும். அனைத்து மனிதர்களும் பாகுபாடற்ற நிலையில் ஊழினுக்கும், தற்செயலுக்கும், தமக்கேயுரிய இயல்பிற்கும் கட்டுப்பட்டவர்கள். உயிர்கள் மண்டலநெறியில் எண்பத்து நான்கு இலட்சம் மகாகல்ப ஆண்டுகளுக்கு மீண்டும் மீண்டும் பிறந்து இன்ப துன்பங்களில் உளன்று அதன்பிறகே வீடுபேற்றினை அடையமுடியும்.

ஊழ் என்னும் தமிழ்ச் சொல் பல பொருள்களை உணர்த்தி நிற்கின்றது. பருவங்கள் மாறி வருவதும் இயற்கையின் அரவணைப்பில் செடி கொடி மரங்கள் மலர்வதும், உதிர்வதும் போன்ற செயற்பாடுகளையும் இச் சொல் குறித்து நிற்கின்றது. இது போன்ற ஒழுங்குமுறைப்பட்ட செயல்களையே 'நியதி' என்னும் வட சொல்லும் குறிக்கின்றது. இவ்வித இயற்கையின் ஒழுங்குமுறையை வழிநடத்தும் ஆற்றலைத் தெய்வம் என்றும் அழைத்தனர். இவ்வாறு தெய்வம், ஊழ் என்ற இரு சொற்களும் ஒரே பொருளையே பழந்தமிழ் இலக்கியங்களில் சுட்டி நிற்கின்றன. இதே கருத்து தமிழ் மக்களிடையே மட்டுமன்றிப் பெரும்பாலான இந்திய மக்களிடமும் பரந்து விளங்கியிருக்கின்றது.((மு.கு.நூ.விஜயலட்சுமி,1988, ப.45).

அந்த வகையில் தொல்காப்பியச் சூத்திரம் ஒன்று:

கால முலக முயிரே யுடம்ப

பால் வரை தெய்வம் வினையே பூதம்

ஞாயிறு திங்கள் சொல்லென வரூம்

ஆயிரைந்தொடு பிறவு மன்ன

வாவயின் வரூஉங் கிளவியெல்லாம்

பால் பிரிந்திசையா உயர்திணை மேன (தொல்காப்பியம், ப.58)

இச் சூத்திரத்தில் உயர்திணைச் சொற்களாக இருந்தும் உயர்திணை வினை முடிவை ஏற்காத பத்துச் சொற்கள் குறிப்பிடப்படுகின்றன. தெய்வம் எனும் ஊழும், கர்மம் எனும் வினையும் இருவேறு சொற்கள் என்பது நோக்கத்தக்கதாகும்.

இவ்வாறு இயற்கையின் ஒழுங்குமுறையை வழிநடாத்தும் ஆற்றலை ஊழ் (தெய்வம்) எனக் கொள்ளப்படுவதானது வேதகால 'ரிதம்' எனப்படும் ஒழுங்குமுறையுடன் ஒப்பிடுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி விடுகின்றது. அதாவது இருக்குவேத மந்திரங்களில் 'ரிதம்' என்னும் கருத்தில் கருமக்கொள்கை மறைந்து கிடக்கின்றது எனக் கருதும் ரி.எம்.பி.மகாதேவன் அவர்கள் 'ரிதம்' என்பது சூரியன் உதிப்பது மறைவது, சந்திரன் வளர்வது தேய்வது, காலங்கள் மாறி மாறி வருவது ஆகிய செயல்களில் இருக்கும் ஒழுங்கான போக்கைக் குறிப்பதாகும் என்கின்றார். மேலும் இருக்குவேதத்தின் அறக்கடவுளான வருணன் இயற்கை ஒழுங்கினையும் அறநிலை ஒழுங்கினையும் பாதுகாப்பவன். அவனே நீதிக்கடவுளுமாவான் எனக் குறிப்பிடுகின்றார்.(மகாதேவன், 2006, ப.48) இதன்படி ஆசிவக ஊழ்க் கோட்பாடும் வேதங்களின் கர்மக் கோட்பாடும் இவ்விடத்தில் சற்றுப் பொருந்தி அமைவதனைக் காணமுடிகின்றது.

நீதிநூற்காலத்தையொட்டி எழுந்த மணிமேகலையில்தான் முதன்முதலாக ஊழ் என்ற சொல்லும் வினை என்ற சொல்லும் தாமுணர்த்தும் பொருள் தெளிவுறக் கையாளப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக ஆசிவகர்கள் கோட்பாடு இதுதான் எனக் கோட்பாட்டுருவில் கூறப்படுவதும் இங்குதான். மணிமேகலையில் சமயக்கணக்கர் தந்திறங்கேட்ட காதையில் ஆசிவகர்களைப் பற்றிய பகுதியில் ஊழ் என்றும் சொல் நியதியைக் குறிப்பதுடன் முதிர்தல் என்ற பொருளிலும் வினையுடன் சேர்த்துப் பயன்படுத்தப்பட்டுள்ளது:

" முன்னு எவூழே பின்னு முறுவிப்பது

மற்கலி நூலின் வகையிது............ " (27:164-5)

இவ்வாறாக அமைகின்ற வேத, உபநிடதங்களின் கர்மக் கொள்கையையும், ஆசிவகத்தின் ஊழ்க்கொள்கையையும் ஒப்பிட்டு நோக்கும்போது ஊழ்க்கொள்கை வினைக்கொள்கைக்கு ஓரளவு முற்பட்டு இந்திய மக்கள் எண்ணத்தில்

வேரூன்றியிருந்தது என்றே கூறலாம். மனிதன் தன்னாற்றலுக்கு அப்பாற்பட்ட செயல்களால் பாதிக்கப்படும்போது, அந்நிகழ்ச்சிகளுக்கு விளக்கமளித்து அமைதிகாண முயல்கின்றான். இவ்விதமாக அமைதிகாணும் முயற்சியில் வேதஉபநிடதங்கள் தனிமனித முயற்சி மாத்திரமன்றி இறையருளையும் வேண்டி நிற்கும் நிலையைக் கொண்டிருக்க, ஆசிவகர்கள் முற்றிலும் வேறுபட்ட வகையில் நியதி என்னும் ஊழ்க்கோட்பாட்டினை முன்வைத்துள்ளமையை அறியமுடிகின்றது.

எடுத்துக்காட்டாக உபநிடதத்தில் "அந்தப் பரவஸ்து பார்க்கப்பட்டதும் இவனுடைய இதயமுடிச்சு அவிழ்கின்றது. சந்தேகங்கள் ஒழிகின்றன. கருமங்கள் எல்லாம் நாசமடைகின்றன." ((முண்டகம் 2:9)

> மலசக்தி தேயும் வண்ணம் மாயையிலிருந்து காரியங்களைத் தோற்றுவித்து ஆன்ம அறிவையெழுப்பி அவற்றோடு கூட்டி வினைப்பயன்களையூட்டிக் கழிப்பித்தல் முதலியன ஆதலின் உயிர்களைச் சினந்து செய்யும் மறைப்புத் தண்டங்களும்; கருணைச் செயல்களேயாமாறு கண்டுகொள்க. (பொன்னையா, 2007, ப.47)

இவ்வாறு வேத உபநிடதங்களே உயிர்களின் கர்ம நீக்கத்திற்கு இறையருளை வேண்டி நிற்க, ஆசிவகம் இறைவனை மறுத்து ஊழ் எனப்படும் எண்ணப்பாட்டினை இயற்கைநியதி என வகுத்துரைக்கின்றனர். ஒரு நிகழ்ச்சி நடக்கவேண்டும் என்ற நியதி இருக்குமானால் அது நடந்தே தீரும். அது நிகழும்போது எப்படி நிகழவேண்டும் என்று விதிக்கப்பட்டதோ அப்படியேதான் நிகழும். ஒரு குறிப்பிட்ட வரையறைக்குத்தான் அதுவும் நிகழும். இவ்வெண்ணங்களை ஆசிவகர்கள் "ஆவதுஆம்"இ "அமாங்கு ஆம்"இ "ஆந்துணை ஆம்"இ "ஆங்காலத்து ஆம்" என்று குறிப்பிடுவர். இந்நான்கு எண்ணங்களும் பழந்தமிழ்ப் பாடல்களில் ஆங்காங்கு பயின்று வருவதைக் காணமுடிகின்றது. எடுகோளாகப் பின்வரும் ஔவையாரின் மூதுரைப் பாடலில் "ஆங்காலத்து ஆம்" என்ற எண்ணம் வெளிப்படுவதைக் குறிப்பிடலாம்.

> அடுத்த முயன்றாலும் ஆகுநாளன்றி
> எடுத்த கருமங்கள் ஆகா-தொடுத்த
> உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
> பருவத்தால் அன்றிப் பழா
>
> (ஔவையார், 1972, ப.5)

இப்பாடலில் வினையூட்டத்திற்கோ, வினைநீக்கத்திற்கோ, வினைவேறுபாட்டிற்கோ இடமில்லை நியதி எனப்படும் ஊழ்க்கொள்கை அடிப்படையிலான

சதுவாநியதத்தில் "ஆங்காலத்து ஆம்" என்ற கருத்தே விளக்கப்படுகின்றது.(மே.கு.நூ.,விஜயலட்சுமி,1988,ப.7-8)

இந்த வகையில் வேத, உபநிடதங்கள் கூறுகின்ற இறைவனையும் கர்மக் கோட்பாட்டினையும் ஆசிவகம் ஏற்றுக்கொள்ளாததன் அடிப்படையில் இவ்விருவகையான சிந்தனைப் போக்கிற்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் நிலவுவதனைக் காணமுடிகின்றது. இருந்தபோதிலும் வேதங்கள் கூறுகின்ற "ரிதம்" என்ற கோட்பாடு கூறுகின்ற உலக ஒழுங்குநிலை குறித்த சிந்தனையுடன் ஆசிவக ஊழ்க்கோட்பாடு இணங்கிச் சென்றாலும் வேதங்கள் ரிதத்தினை கண்காணிக்க வர்ணனை நியமிப்பதன் அடிப்படையில் ஊழ்க்கோட்பாடு இதனுடன் சற்று முரண்படுவதனை அவதானிக்க முடிகின்றது. எது எவ்வாறாயினும் வேத, உபநிடதங்களும் ஆசிவகமும் மக்களுடைய இம்மை, மறுமை குறித்த எண்ணப்பாங்குகளில் ஒருமைப்பாட்டிற்கு அப்பால் தமக்கிடையே தனித்துவமான போக்குகளைக் கொண்டிருக்கின்றன என்பதனை அறியக்கூடியதாக உள்ளது.

**References**

1. அண்ணா (உ-ர்), 1965, முண்டகம் (உபநிடதம்), ஸ்ரீராமகிருஷ்ணமடம், மயிலாப்பூர்.

2. அஜராத்மானந்தர் (உ-ர்), 1987, ஈவாவாஸ்யம், ஸ்ரீராமகிருஷ்ணமடம், மயிலாப்பூர், சென்னை.

3. இராதாகிருஷ்ணன், ச., 1979, மேலை கீழை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்,

4. இன்பநாதன், இ., 1994, இந்திய மெய்யியல், தமிழ்நாடு இறையியற் கல்லூரி, மதுரை.

5. ஔவையார், 1972, மூதுரை, கழகவெளியீடு, சென்னை.

6. கோவிந்தசாமிப்பிள்ளை, இ., 1962, தொல்காப்பியம், தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு, சென்னை.

7. சீத்தலைச்சாத்தனார், 1897, மணிமேகலை, சென்னை.

8. பொன்னையா, ஐ., 2007, சுவேதாஸ்வரம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

9. நெடுஞ்செழியன், க., 2023, ஆசிவகமும் ஐயனார் வரலாறும் ஜாஸிம் பப்ளிகேஷன்ஸ், திருச்சிராப்பள்ளி.

10. மகாதேவன், ரி. எம். பி., 2006, இந்துசமயத் தத்துவம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

11. லக்ஸ்மணன், கி., 2000, இந்திய தத்துவஞானம், பழனியப்பா பிரதர்ஸ், ஏசியன் அச்சகம், சென்னை.

12. வல்பொலராகுல, 1989, புத்தபகவான் அருளிய போதனை, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு, இலங்கை.

13. விஜயலட்சுமி, ர, 1988, தமிழகத்தில் ஆசிவகர்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

14. Ayyanar.123.blogspot.com

15. Krishan, Y, 1997, The doctrine of karma, Motial Banarsidas Publishers Pvd, Varanasi.